339

# நான் ஒரு



# முற்றுப்புள்ளி

நாவண்ணன்

புதிய உலகம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு முற்றுப்புள்ளி

கதைத் தொகுப்பு

*நாவண்ணன்*

புதிய உலகம் வெளியீடு

த. பெ. எண் 2. ஆயர் இல்லம் - யாழ்ப்பாணம்

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே . . .


- புத்தகத்தைப் புரட்டுமுன்...
- அவரும் ஏழைதானே.
- வளர்மதி.
- சூறுவளி ஓய்ந்தது.
- கொள்ளிவைக்க ஒரு பிள்ளை.
- நானொரு முற்றுப்புள்ளி.
- நெஞ்சில் நெருப்பு.
- நன்றியோடு நாலு வார்த்தை.



'நான் ஒரு முற்றுப்புள்ளி' நூல் வெளியீட்டு உரிமை
புதிய உலகம் வெளியீட்டாளருக்கே உரித்தானது.



புதிய உலகம் வெளியீடு — 1

முதற் பதிப்பு — 10 ஆகஸ்ட் 1978

பரிசுப் பதிப்பு — விலை ரூபா 4/=

சாதாரண பதிப்பு — விலை ரூபா 3/=

அழுத்தகம் — வஸ்தியன் அச்சகம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத்தைப் புரட்டுமுன் . . . .

இலக்கியம் வெறும் கலைக்காகவும், இரசனைக்காகவும், பொழுது போக்கிற்காகவுமே என்று பலவாறு வாதிடுவோர் இன்னும் உளர். சிறு கதைகளையும் இவ்வாறே கணிப்பர் அவர். இக் கருத்தைக்கொண்ட பெரியோர்களை மதிக்கும் அதே வேளை, இன்னும் ஒருபடி மேற் சென்று பொழுது போக்கின் ஊடாக, கலைக்கூடாக மனித சிந்தனைக்கு இலக்கியம் பயன்பட வேண்டுமென்பது எனது உறுதியான கருத்து.

மனித சிந்தனை மனித வளர்ச்சிக்காகவே. இதில் எனக்கு சந்தேகமில்லை.

இந்தப் பாணியிலேயே இச் சிறுகதைத் தொகுப்பில் உள்ள அத்தனை கதைகளும் அமைந்துள்ளன. இதை நாம் வரவேற்க வேண்டும்.

இன்றைய சமூகப் பிரச்சினைகள் சில இக்கதைகளினூடே இழையோடுகின்றன. பிரச்சினைகளை கருவாகக் கொண்டு கதையெழுதிய கதாசிரியர் அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் தர முனைந்துள்ளார். இந்த வகையில் கதாசிரியர் நமது சமூகத்திற்கு ஒரு பெருஞ் சேவையை செய்துள்ளார் என்றே எண்ணுகிறேன்.

இன்றைய தமிழ் இளைஞர்களுக்கு ஒரு பெருஞ் சவாலாகவே ''முற்றுப் புள்ளி'' அமைந்துள்ளது.

''தமிழ் ஈழம் என்று ஒன்று உருவாகினுல், அங்கு சங்கிலியன்கள் மீண்டும் தோன்றிக் கிறீஸ்தவர்களை அழிப்பார்களா?'' — என்ற ஒரு மரணப் பிரச்சினையை எழுப்புகின்றது ''வளர்மதி''

''கருவிலேயே பிள்ளையைக் கொல்வதா?'' என்ற இன்றைய பெரும் பிரச்சினையொன்றிற்கு ''கொள்ளி வைக்'' கிறது ஒரு பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திகனுக வாழ்ந்து, அவசரத்தில் நாத்திகப் பாதையில் வா ழமுனைந்து, பின்னர் ஆபத்தில் மீண்டும் பக்தனுக மாறுகிருன் ஒருவன். ''சூருவளி ஓய்ந்தது''ம்.

'நாவண்ணன்' என்ற புனைப்பெயரில் சிறு கதைகள் எழுதிவரும் திரு. ம. சூசைநாயகம் பல பயனுள்ள, சிந்தனைக்குரிய, இன்றைய சூழலுக்கேற்ப இச் சிறுகதைகளை அமைத்துள்ளமை வரவேற்கவேண்டிய ஒன்று.

நாவண்ணன் ஒரு சிறு கதை எழுத்தாளர். கவிஞர், ஓவியர், நடிகர், மேடைப் பேச்சாளர். இத்தனை துறைகளிலும் திறமைபெற்ற இவர் இன்றைய தமிழ் இலக்கிய நாடக கலைத் துறைகளில் முன்னிற்காதது ஏன்?

தமிழ்க் கலையுலகில் ஏற்பட்டிருக்கும் பொருமையும் இருக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை தங்களது சீதனச் சொத்தாக்கி வைத்திருக்கும் கலைஞர்கள் சிலரின் சுயநலப் போக்குமே காரணம்.

சரியான நேரத்தில், சரியான கட்சியுடன் சார்ந்து நின்ருல்தான் சுயவளர்ச்சி உண்டு என்ற அவல நிலை இன்று இந்த நாட்டில் தோன்றியுள்ளமையினுல் ஒரு தரமான கலைஞன் தனது படைப்புகளால், தனது ஆக்க சக்தியினுல் முன்னுக்கு வருவது முயற்கொம்பாகிவிட்டது.

இப்படிப்பட்ட ஒரு நிலையினூடாக, கொண்ட நோக்கத்தை என்றுமே கைவிடாது, விடா முயற்சியினுல் நாவண்ணன் தனது திறமைகளையும் வளர்த்து சமூகத்தின் சிந்தனையையும் வளர்ப்பாரென்று நாம் எதிர்பார்க்கின்ருேம்.

இதுவே எமது வாழ்த்துமாகும்.
வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

சா. ம. செல்வரட்ணம் அ ம. தி.
(கரவையூர்ச்செல்வம்)

சமூகத் தொடர்பு நிலையம்
45, கின்ஸி சாலை,
கொழும்பு 8
8-08-1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அவரும் ஏழைதானே"

எனது நெஞ்சம் குமுறுகின்றது. சென்ற வருடம் எனது தந்தை உயிருடன் இருந்தார். ஆகையால் குடும்பப் பொறுப்பு என்ன என்பதே தெரியாமல் வாழ்ந்தேன். ஆனால் இன்று, அதை நினைக்கும்போது...

சென்ற வருடம் நத்தால் திருநாளுக்கு முதல்நாளே எனது தந்தை எனக்கும், என் தங்கைக்கும், தாயாருக்கும் தனக்கும் வேண்டிய உடுபுடவைகள், உண்பதற்கு வேண்டிய பண்டங்கள் யாவற்றையும் வாங்கி வந்தார். ஆனால் இம் முறை?......

என் தங்கை அமலநாயகி கேட்ட கேள்வி என்னையும், என் தாயையும் உலுக்கிவிட்டது. உள்ளத்தில் அடங்கிக் கிடந்த துன்பப்புயலை எழுப்பிவிட்டது. பாவம் பச்சிளம் சிறுமி! எட்டு வயதுக் குழந்தை குடும்ப நிலையைப்பற்றி உணர்ந்து கொள்ளும் சக்தி ஏது அவளுக்கு?

அவளுடைய உடன் தோழி புஸ்பா அடுத்த வீட்டில் தான் வசிக்கிறாள். அவளின் தந்தை நேற்றுத்தான் கொழும் பிலிருந்து வந்திருந்தார். அவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் அழகிய ஆடைகள், வாண வெடிகள் பலூன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி வந்திருந்தார். 'நேற்று என் தங்கை வழக்கம்போல அவளுடைய வீட்டிற்கு விளையாடப்போயிருந்தாள். புஸ்பா தனது புதிய ஆடைகளைக் காட்டி பெருமைப்பட்டிருக்கிறாள். என் தங்கையின் மனம் வேதனைக் குளமாகியது.

நாங்கள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் அந்தப் பிஞ்சு உதரத்தை மட்டும் பட்டினி போட்டது கிடையாது. உள்ளதை அவளுக்கு அம்மா அன்புடன் ஊட்டினாள். ஆனால் இன்று ..... அவளோ அதிகம் சாப்பிடவில்லை. அவளின் சிரித்த முகத்தில் துன்பக்கதிர்கள் சிதறிக் கிடந்தன. அவளின் முகவாட்டம் என் அன்னைக்கு ஏக்கத்தைத் தந்தது. முகவாட்டத்தின் காரணத்தைத் தானாகவே வெளியிட்டாள் தங்கை.

"அம்மா! அடுத்த வீட்டுப் புஸ்பா புதுப்புதுத் துணிகள் வாங்கியிருக்கிறா. மத்தாப்புக்களும் நத்தாருக்கென வாங்கிக் கொடுத்திருக்கிறார் அவளுடைய அப்பா. ஆனால், எனக்குமட்டும் ஒன்றும் வாங்கித் தரவில்லை அம்மா? என்று ஏக்கத்துடன் அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கேட்டாள் அந்தப் பாலகி. எனக்கு இருவருடைய சோகம் நிறைந்த முகங்களைக் காணும்போது அழுகை வந்துவிட்டது. அதைப் பார்த்து நான் என்ன செய்யமுடியும்? எனக்குப் பதினாறு வயதுதானே நடைபெறுகின்றது. போனவருடம்தான் எட்டாம் வகுப்புச் சித்தி எய்தினேன். அத்துடன் எனது தந்தையும் மறைந்து விட்டார் வறுமை நம்மை வாட்டியது வழி வேறில்லை. படிப்புக்கு முற்றுப்புள்ளி போட்டுவிட்டு ஒரு தச்சனின் கீழ் உதவி செய்து, வந்த ஊதியத்தைக் கொண்டும் இன்னொருவரை இரந்து நிற்காமல் அரை வயிற்றை நிரப்பி மானத்துடன் வாழ்க்கை நடத்துகிறோம். என் தாய் தன் சேயின் குறையைத் தீர்க்க முடியாததையிட்டுக் குமுறிக்குமுறி அழுதாள்; அந்த சோகக் காட்சியைக் காணமுடியாமல் அவ்விடத்தைவிட்டு அகன்று விட்டேன்.

நான் மறுபடியும் வீட்டினுள் பிரவேசித்தபோது என் தாய் திருக்குடும்பப் படத்தின் முன்னே அழுத வண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம், "பாலக யேசுவே! நீரும் ஏழ்மையின் நிழலிலேதான் பிறந்தீர். இந்த ஏழை மனதை எப்படித் தேற்றப் போகிறீர். என் கணவனை எடுத்தீர். ஏழ்மையைக் கொடுத்தீர் நாம் கண் கலங்காமல் வாழவும் வழி கூற மாட்டீரோ? ஏழைகள் என்றும் துன்பத்தின் தோழராகத்தான் வாழ வேண்டுமா?" என்று வேண்டினுள். நான் மறு அறையில் அழுத வண்ணம் இருந்தேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் நானும் என் தாயாரும், வீட்டினுள் இருந்தோம். என் தங்கை நேரே தாயிடம் சென்று "அம்மா! நாங்களும் ஏழைகள் தானே" என்ருள். அவளின் வார்த்தைகட்கு "ஆமாம் நாங்கள் ஏழைகள்தான்" என்று பதில் பகன்ருள். "அப்படியென்ருல் எனக்குப் புதுச் சட்டை, பட்டாசு ஒன்றும் வேண்டாம்" என்ருள் தங்கை. இதைக்கேட்ட தாயின் உள்ளம் தாங்கொணு வேதனைப்பட்டது. "ஏனம்மா இப்படிச் சொல்கிருய்?" எனக்கேட்டாள் ஆச்சரியத்துடன்.

அம்மா, இன்று ஞான உபதேசவகுப்பில் சுவாமி சொன்னர். "ஆண்டவர் மாரிக்குளிரிலே, மாட்டுத் தொழுவத்திலே ஏழையாகப் பிறந்தாராம், அவரின் தாய் தேவமாதா அவரைக் கந்தல் துணியால் போர்த்திஞளாம் அவரைப்போல நாங்களும் ஏழைகள்தானே. எங்களுக்கு ஏனம்மா புதுச்சட்டையும் மத்தாப்பு வாணமும்" என்ருள் பாலகி. இதைக்கேட்டதும் அவளை வாரியணைத்து முத்மாரி பொழிந்தாள் என் அன்னை. அப்போது என் அகத்தில் அன்னையின் வார்த்தைகள் பிரதிபலித்தன, அதாவது, "பாலக யேசுவே நீரும் ஏழ்மையின் குளிரிலேதான் பிறந்தீர் இந்த ஏழை மனதை எப்படி தேற்றப்போகிறீர்?"

என்மனம் ஈசனுக்கு நன்றி கூறியது ஏழைத்தாயின் முறையீட்டை ஏழைத்தலைவன் கேட்டுவிட்டார் அவரின் புகழ் என்றும் வாழ்க! என்றும் ஓங்குக!

(1964ம் ஆண்டு நத்தால் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது)

சத்தியவேத பாதுகாவலன்

16-1-1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி

வானத்து நிலவு தன் தண்ணொளியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. அதன் ஒளியைக் கண்டு பொறாமை கொண்டவை போன்று கருமுகிற் கூட்டங்கள் அடிக்கடி அதனைத் திரையிட்டு மறைத்துக் கொண்டிருந்தன. பரந்த கடலும் பயங்கர ஓசை எழுப்பிக் கொண்டு இருந்தது. கடற்கரை மணற்பரப்பில் ஓங்கி வளர்ந்திருந்த பனைமரங்களில் கடற்காற்றுப் பட்டு எழுந்த 'ஊ' என்ற ஓசை அந்த இடத்திற்கே அலாதியான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தது. அந்தக் கடற் கரையை அடுத்திருந்த கிராமமாகிய பட்டிடம் அமைதியில் ஆழ்ந்திருந்தது. ஊரின் மத்தியில் ஆங்காங்கு சிறுகுடிசை களும், சுண்ணும்புச் சூளைகளும், கரையோரத்திலிருந்த வலை கள், வள்ளங்கள்-எல்லாம் அக்கிராம மக்களின் நிலை மையை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன.

அந்த நிசப்தமான வேளையில் வளர்மதி மட்டும் பனை மரம் ஒன்றில் சாய்ந்தபடி மரத்தோடுமரமாக நின்று கொண்டிருந்தாள். அவளது கண்கள் மறைந்து தோன்றிக் கொண்டிருக்கும் நிலவைப்பார்த்துக் கொண்டிருந்தன. அந்தக் காட்சி, ஏனே வருவதும் போவதுமாக நிற்கும் வேங்கை மாறனின் நினைவை அவளுக்கு ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை நினைத்ததும் அவளது விழிவிளிம்புகளில் நீர் முட்டியது.

முரட்டுக்கரம் ஒன்று அவளின் மென்தோலைப் பற்றியது திடுக்கிட்டாள், திரும்பினாள் - திகைக்கவில்லை, வைத்தகண் வாங்காது அவனையே நோக்கினாள்.

''வளர்மதி''

''ம்''

''வானத்து நிலவிலே என்னத்தைப் பார்க்கிறாய்?''

''உங்களைப்போன்று தோன்றுவதும், மறைவதுமாக அந்த நிலவும் இருக்கிறது. அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

''நிலவுதானாக மறையவில்லை; ஓடும் மேகங்கள்தான் அதனை மறைக்கின்றன. நானும் அப்படித்தான், கடமைதான் என்னை அடிக்கடி வராமல் தடுக்கின்றது.''

வளர்மதி பேசாதிருந்தாள். அவன் தொடர்ந்து பேசினான். ''வளர்மதி அரசாங்கத்தில் கடமையாற்றுவது என்றால் இலேசானதொன்றா? அதுவும் போத்துக்கேயரின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டுவரும் இந்நாளில் மன்னர் படைகளுக்கு, கடமைகள் மட்டில் கண்டிப்பான கட்டளையிட்டிருக்கிறார். இந்த நிலைமையில் நான் உன்னைக் காண வந்ததே பெரிய காரியம்'' ''இன்னுமொரு விடயம், மன்னருக்கு என்னிலே நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. வெகுவிரைவிலேயே நானும் ஒரு படைத்தலைவனாகி விடப்போகிறேன். நான் படைத்தலைவனாகி விட்டால் நீ படைத்தலைவரின் மனைவியாகப் போகின்றாய், அதிலே உனக்கு பெருமையில்லையா?''

அவள் பதில் ஏதும் கூறாது, அவனது பரந்த மார்பிலே அவள் தலையைச் சாய்த்தாள். வேங்கைமாறனின் இருதயத் துடிப்பின் ஓசை அவளுக்கு இன்ப நாதமாகக் காதிலே கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அத்தான்''

''ம்''

''உங்கள் இதயம் எனக்கு என்னவோ சொல்கின்றது.''

''என்ன சொல்கிறது?''

''விளங்கவில்லை''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்களேன்''

''உன்னையும் உள்ளே வந்து விடும்படி சொல்கின்றது.''

''நான் மாட்டேன்''

''ஏன்?''

''பிறகு உங்கள் அழகிய முகத்தைப் பார்க்க முடியாதே!''

அவன் சிரித்தான் அவளும் சிரித்தாள், நாழிகை நகர்ந்து கொண்டேயிருந்தது. அவன் பேசினான்.

''வளர்மதி நாளைக் காலை நான் நல்லூருக்குப் புறப்படப் போகின்றேன்.''

''அத்தான்'' என்றாள் நா தழுதழுக்க.

''கலங்காதே வளர்மதி மீண்டும் வருவேன்''

''அத்தான் இப்படி எவ்வளவு காலந்தான் வந்து வந்து ஏமாற்றிக்கொண்டேயிருக்கப் போறீர்கள்?''

''வளர்மதி கவலையை விடு'' மறுபடியும் வருவேன். பின்பு உன்னைப் பிரியவே மாட்டேன். எனது அடுத்த வருகையின் போது உன்னைக் கைப்பிடிப்பது நிச்சயம். உன்னை என் மனைவியாக அழைத்துக் கொண்டுதான் செல்வேன்.''

''அத்தான்'' என்றாள் உணர்ச்சி பொங்க. கலங்கிய கண்களுடன் ''போய் வாருங்கள்'' என விடை கொடுத்தாள். அவன் புறப்பட்டான். அவனது உருவம் இருளிலே மறையும்வரை இமைக்காது பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்மதி பட்டிம் கிராமத்தலைவன் இளஞ்சிங்கனின் ஒரே புதல்வி, செல்வச் செழிப்போடு செல்லமாக வளர்ந்து கொண்டிருப்பவள். அழகோடு அறிவையும் ஒருங்கே கொண்ட அணங்கு.

இளஞ்சிங்கனின் அக்காள் மகன்தான் வேங்கைமாறன் போர்த்திறம் அறிந்தவன். அழகோடு அறிவும், ஆண்மையும் நிறைந்தவன். ஏற்கனவே பெற்றோருக்குள் ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தின்படியே ஒருவரை ஒருவர் விரும்பத் தொடங்கினர்.

தனது போர்த்திறமையையும் வீரத்தையும், மன்னன் அறியவேண்டும். தான் ஒரு மாவீரனாகத் திகழவேண்டும், என்ற ஆசையினால், யாழ்நகரை ஆண்டுகொண்டிருந்த சங்கிலியன் படையிலே வீரனாகச் சேர்ந்து கொண்டான். படிப்படியாக அவனது புகழ் வளரத் தொடங்கியது. அவனுடைய திறமையின் பொருட்டு விரைவிலேயே அவன் ஒரு படைத்தலைவனாகக் கூடும் என்ற வதந்தி கூட நிலவத் தொடங்கிவிட்டது.

அன்று பட்டிம் கிராமமே இதுவரை கண்டிராத பரபரப்படைந்திருந்தது. காரணம் இதுவரை அவர்கள் பார்த்திராத துறவி ஒருவர் அங்கு வந்திருந்தார். அவரின் அருள் ததும்பும் முகமும், பொருள் செறிந்த பேச்சும் மக்கள் உள்ளத்திலே ஒரு புது உணர்ச்சியை ஏற்படுத்திவிட்டிருந்தது. தமிழ் நாட்டில் இருந்து வந்திருந்த அந்தத் துறவியாரின் பெயர் பிரான்சிஸ்குசவேரியார். அன்னார் அணிந்திருந்த நீண்ட கறுத்த அங்கியும் கையிலே வைத்திருந்த சிலுவையும், அவர்களை அறியாமலே அவரிடம் ஒருவித பக்தியை ஏற்படுத்தியது. அவர்கள் தம் வாழ்நாளிலேயே அறிந்திராத ஒரு செய்தியை அவர்களுக்கு அவர் போதித்தார். அவரது தொனி கேட்ட மாத்திரத்திலேயே மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போன்று தம்வசம் இழந்திருந்தனர் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் போதித்த அம்மறை அன்பு மயமானதாக இருந்தது. அது கிறீஸ்துநாதரால், தரப்பட்ட கிறீஸ்தவ மதம். அந்தப் புதுமறையின் ஆழ்ந்த தத்துவங்கள், உயரிய கொள்கைகள், கட்டுப்பாடுகள் எல்லாம் படிப்படியாக நாளுக்கு நாள் அம்மக்களின் உள்ளத்திலே பதியத் தொடங்கின. திங்கள் பல சென்றன. ஒவ்வொருவராகப் புதிய மறையைத் தழுவத் தொடங்கினர். நாளடைவில் அறுநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கிறீஸ்தவர்களாகி விட்டனர். அப்படி புது மறையாம் கிறீஸ்தவ மதத்தை தழுவியவர்களுள் அவ்வூர்த் தலைவன் இளஞ்சிங்கனும் வளர்மதியும் அடங்குவர்!

அந்நியரின் ஆதிக்கம் பெருகிவருவதையிட்டு வேதனையும், கோபமும் அடைந்திருந்த யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் காதுகளுக்கு இச்செய்தி எட்டியது.

மன்னன் பொங்கினான், பொருமினான், கொதித்தான், கோபம் கொண்டான். ''என் ஊரைப்பிடிக்கவந்த உலுத்தர்கள் உள்ளங்களையும், பிடிக்கத் தொடங்கி விட்டார்களா?'' அவன் கூறினான் என்றால் இவர்கள் புத்தி எங்கே போய்விட்டது? பண்டை தொட்டுப் பக்தியுடன், அனுசரித்து வந்த மதத்தைவிட்டு இன்று எங்கோ இருந்து வந்த ஒருவன் போதித்த மதத்திற்குப் போகும் புத்தியிழந்த புல்லர்கள். நாளை என் அரசுக்கெதிராகக் கிளம்பமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? தீட்டிய வாளும், ஈட்டியும் கையுமாக இன்றே புறப்படுங்கள். மதம் மாறியவர்களின் மண்டைகள் உருளட்டும், மறை மாறியவர்கள் மரணத்தைத் தழுவட்டும், வேதம் மாறியவர்கள் வேறுலகம் செல்லட்டும்,'' என்ற பயங்கரக் கட்டளை மன்னன் வாயிலிருந்து புறப்பட்டது. யார் தடுத்தும் நிற்கவில்லை.

அன்றே ஐயாயிரம் வீரர்களைக் கொண்ட படை கடல் மார்க்கமாகப் புறப்பட்டது. ஒவ்வொரு வீரர் இடையிலும் கூரிய வாட்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அங்கிருந்த வீரர்களின் முகங்களில் கொலைவெறி தாண்டவமாடிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படைக்கு உபபடைத்தலைவனாக வேங்கை மாறன் இருந்தான். அவன் முகம் உள்ளத்தின் சஞ்சலத்தை வெளிக் காட்டிக் கொண்டிருந்தது. வேதனையால் வெதும்பிக் கொண்டிருந்தான்.

நான் பிறந்த கிராமத்தவர்கள் தேசப்பற்றற்றவர்களாக, துரோகிகளாக, மதமாற்றமடைந்த பச்சோந்திகளாக மாறி விட்ட செய்தி கேட்டு உள்ளம் கொதித்தான். ஆனால் அதே வேளையில் தன் ஊரவர்கள் எத்தனைபேரை தன் கையாலேயே அரிந்து எறியப் போகிறோம், அவர்களில் தோள்மேலே கைபோட்டு தோழன் என்று உரைத்தவர்கள் எத்தனை பேரோ, தனது உற்றார் உறவினர்கள் எத்தனைபேரோ, என எண்ணுகையில் அவனது கண்கள் அவனது சக்தியை மீறிக் கலங்கின.

அனைத்தையும் விட வளர்மதி... அவளை உள்ளுகையில் அவனது இதயமே வெடித்து விடும்போல் இருந்தது, ஒரு வேளை வளர்மதியும் மதம்மாறியிருந்தால்......... எண்ணிப் பார்க்க உலகமே சுற்றுவது போல் இருந்தது. ''இருக்காது, இருக்காது அவள் மதம் மாறியிருக்கவே மாட்டாள்.'' என்று தனக்குள்ளே சமாதானம் கூறிக் கொண்டான். ஆயினும் அவன் போராட்டம் தீர்ந்தபாடில்லை.

அதோ பட்டிக்கிராமத்தின் கரை தெரிகின்றது. வீரர் களின் உற்சாகம் கரைபுரண்டது. தங்கள் உடை வாட் களையும், ஈட்டிகளையும், தடவிப்பார்த்துத் திருப்தி கொண் டார்கள். அவர்கள் சென்று கொண்டிருந்த நாவாய்களை முந்திக் கொண்டு அவர்கள் உள்ளங்கள் மட்டும் கிராமத் திலிருந்தன. ஆனால் வேங்கைமாறனின் இதயமோ படபட வென அடித்துக் கொண்டது.

படைத்தலைவன் வேங்கை மாறனை அழைத்தான், பணி வுடனே வேங்கைமாறன் அவன் முன்னே சென்று நின்றான். படைத்தலைவன் பேசினான். ''வேங்கை மாறன்! நான் உனக்கு எதுவுமே சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆயி னும் மீண்டும் ஒருமுறை உனக்கு இதை நினைவூட்டக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைப் பட்டுள்ளேன். நாம் இப்பொழுது நெருங்கிக் கொண்டிருப்பது உனது கிராமமாகிய பட்டிம் கிராமத்தை நோக்கி, ஆனால் இது இப்பொழுது தேசத் துரோகிகளும், மதத்துரோகிகளும் நிறைந்துவிட்ட, சூதுக்கிடங்காகி விட்டது, நாம் இன்று நமது மன்னனின் ஆணையை நிறைவேற்ற வந்துள்ளோம். மதம் மாறியவர்களைச் சிரச்சேதம் செய்ய வேண்டும், என்பதே மன்னனின் கட்டளை அவர்களில் பலர் உனது நண்பர்களாய், உறவினர்களாய் இருத்தலும் கூடும். இந்த இடத்தில் நீ உனது கடமையைச் செய்ய வந்திருக்கிறாய் என்பதை மறந்து விடாதே; தேசத் துரோகிகளை அழிக்க வந்திருக்கிறாய். எனவே! உறவு பந்த பாசங்களை மறந்து உன்கடமையை நிறைவேற்று. இதை நீ மீறினால் நீயும் தண்டனைக்குள்ளாவாய். என்பதை நினைவில் நிறுத்திக் கொள்." என்று கூறிமுடித்தான்.

வேங்கைமாறன் அசையாது சிலைபோல் நின்று படைத் தலைவன் சொல்வதனைத்தையும் செவிமடுத்துக் கொண்டிருந்தான். பின் தனியே சென்று தனது கடமையைப் பற்றித் தீவிரமாகச் சிந்தனை செய்தான். நான் ஒரு தமிழன், தன்மானம் மிக்கவன். கடமையிற்தவறுதவன். அதுவும் ஒரு நாட்டின் படைவீரன், தேசத்துரோகிகளை, மதம்மாறியவர்களை—யாராகவிருந்தாலும் மன்னனின் கட்டளையை நிறைவேற்றுவேன், எனச் சபதம் செய்து கொண்டான். நாவாய்கள் கரையை அடைந்தன.

அன்று பட்டிம் கிராமமே கோலாகலமாக விளங்கியது அன்று கிறீஸ்தவ மதத்தில் சேர்ந்த மக்கள் அனைவருமே திரண்டு திருவிழாக் கொண்டாடினார்கள். திவ்விய பூசைப் பலி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அறுநூற்றுக்கும் மேற்பட்ட கிறீஸ்தவர்கள் அங்கு குழுமியிருந்தார்கள். மக்கள் வெள்ளம் கரைபுரண்டு கொண்டிருந்தது. மறைத் திரு பிரான்சிஸ்கு சவேரியார் அடிகளாரின் அன்றைய போதனை உணர்ச்சி மிக்கதாக இருந்தது. அதுவரை பெற்றிராத உள்ள வைரத்தையும், விசுவாசத்தில் திடத்தையும் ஊட்டுவதாக இருந்தது. பூசை முடியும் வேளை நெருங்கிக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தது. திடீரென பெருங்கடலே பெருக்கெடுத்து வரு வது போன்ற ஓசை, ஈட்டியும் வாளும் ஏந்திய வீரர்கள் கொலைவெறி கொண்டு ஓடிவந்து கொண்டிருந்தனர். அடிக ளார் நிலைமையை உணர்ந்து கொண்டவராக பாடுபட்ட சிலுவையை தனது கைகளில் ஏந்தி உயர்த்திப் பிடித்தவண் ணம் பேசத் தொடங்கினார். ''விசுவாசம் மிக்க கிறீஸ்தவர் களே! அதோ உங்களை மரணம் நெருங்கிவிட்டது. கிறீஸ்து வில் நம்பிக்கை கொண்டவர்கள் என்றால்—எம்பிரான் எமக் காக இரத்தம் சிந்தி மாண்டார் என்பதில் விசுவாசம் உள்ள வர்கள் என்றால்—அவரின் மறைக்காக, அவருக்காக இரத்தம் சிந்தத் தயாராகுங்கள், உயிர் கொடுங்கள், உத்தமராக மாறுங்கள், வேதம் காக்க மாண்டு வேதசாட்சிகளாக மாறுங்கள்; விசுவாசத்தில் தளராதீர்கள். உங்கள் சரித்திரம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். உங்கள் பரம் பரையினர் உங்களுக்கு ஆலயம் எழுப்பி ஆராதனை செய் வர். அஞ்சவேண்டாம். உங்கள் மரணம் யேசுநாதருக்கு உகந்ததாகட்டும்.

அதற்குள் பக்திக் கூட்டத்தோடு பகைவர் கூட்டமும் கலந்து விட்டது. பயந்து ஓடுவார் எவருமில்லை, 'யேசுவே! யேசுவே!' என்ற கூக்குரல் எங்கும் ஒலித்துக் கொண்டிருந் தது. கண்ணீரும், செந்நீரும், குருதியும், கோரமும், அழு கையும், அபயக் குரலும்........ ஐயையோ, ஏந்திய சிலுவை யும் கையுமாக நின்ற அடிகளாரின் கை துண்டிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்ட கை சிலுவையை இறுகப்பற்றிய வண் ணமே துடித்துத் துடித்து வளர்மதியின் அருகே வந்து விழுந்து ஓய்ந்தது. குனிந்த தலையும், கூப்பிய கரங்களும், மூடிய விழிகளுமாக வளர்மதி மரணத்தை ஏற்க ஆயத்த மாக முழந்தாளிட்டுக் கொண்டிருந்தாள்.

உடைவாளும் கையுமாக உடையெங்கும் குருதி தோய வேங்கைமாறன் தன் வாளை வீசி தலைகளைப் பந்தாடிக் கொண்டே வந்தான். தன்னை மறந்திருந்த அவளைக் காண் கிறான் மறுகணம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வளர்மதி......''

அதற்கு மேல் அவள் குரல் வெளிவர மறுத்தது. ஓங்கிய கரம் அப்படியே மரத்துப்போய் நின்றுவிட்டது. வளர்மதி அமைதியாகவும், நிதானத்துடனும், தன் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்து மௌனமாக ஒரு புன்னகை செய்கின்றாள். ''வளர்மதி நீயா? ஏனடி உனக்கு இந்தக் கோலம், நீயுமா மதம் மாறிவிட்டாய்? வேண்டாம், வேண்டாம் ஓடிவிடு இந்த இடத்தைவிட்டு'' அவளது கண்களிலே அமைதியான ஒரு பிரகாசம் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. அவள் பேசினாள்.

''அத்தான் நீங்கள் இதுவரை கொன்ற உயிர்களைவிட எனது உயிர் அற்பமானதுதான். தயங்கவேண்டாம், ஏன் நிற்கிறீர்கள் வீசுங்கள் வாளை''

''வேண்டாம் வளர்மதி நீ என்னோடு வாழவேண்டியவள், நீ எனக்காக வாழவேண்டியவள். எனது ஆசைக் கோட்டைகளைத் தகர்த்து விடவேண்டாம். மாலையிட்டு மணம் முடிக்கவேண்டிய கையால் உன்னை அழிக்கமாட்டேன்''

''ஏனத்தான் வீண்பேச்சு, உங்களை நான் விரும்பியது உண்மை. இன்றும் விரும்புகின்றேன். ஆனால் நான் இப்பொழுது கிறீஸ்தவள். கொலைவெறியும், கோரமும் கொண்ட தங்களோடு வாழ்வதைவிட கிறீஸ்துவுக்காகச் சாவது மேல், மதம் என்பது அடிமைத்தனத்திற்குள்ளானதொன்றல்ல: சுதந்திரமும், அன்பும் ஆட்கொள்ளும் ஒரு சக்தி. அன்பின் மதம் என்றபடியால் இதனைப் பின்பற்றினேன். ஆனால் இதோ உங்கள் அடக்குமுறைக் கொள்கையால் ஏற்பட்ட இந்த இரணவெள்ளக் காட்டைப் பாருங்கள். பிணக்குவியல்களைப் பாருங்கள். ஒருவராவது பயந்தார்களா? தயங்கினார்களா? காரணம் விசுவாசம், உண்மை விசுவாசம். தளராத விசுவாசம். கொலைவெறி கொண்ட உங்கள் அன்பு வேண்டாம். அடக்குமுறை கொண்ட அன்பு வேண்டாம். கொல்லுங்கள், கொல்லுங்கள்!'' ஆவேசம் பொங்கியது. ஆத்திரம் மீறியது: ''வளர்மதி'' என்று அலறிக் கொண்டே வாளை அவள்மீது வீசினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றுயிராய்க் கிடந்து துடித்தாள் வளர்மதி பரிதாப மாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஏக்கம் கலந்த குரலில் ''அத்தான் எவருக்குமே கிடைத்திராத பாக்கியம் எனக்குக் கிடைத்துவிட்டது. உங்கள் கையாலேயே நான் சாகின்றேன். எனது சாவு உங்கள் மனதை மாற்றினுல், நீங்கள் எனது உயிர்த்தியாகத்தின் மேன்மையை அறிந்து மனம் மாறினுல் எனது ஆன்மா சாந்தி அடையும், கிறீஸ்துவே உண்மை யான தேவன், யேசுவே........''

அவள் உயிர் பிரிந்து விட்டது. அவனது உள்ள உறுதி உருக் குலைந்து விட்டது. இரத்த வெள்ளத்தில் கிடக்கும் அவளது உடல்கண்டு, இதயத்தில் இரத்தம் கசிந்தது. அவன் தன் நிலையை மறந்தான். அழுதான், அழுதான். ''வளர்மதி... ஐயோ!...... வளர்மதி உன்னை நானே அழித்துவிட்டேன். வளர்மதி நான் பாவி, நான் பாவி,''

இந்த அழுகுரல் படைத்தலைவனின் காதுகளில் விழுந் தது. குரல் வந்த திசையை நோக்கினுன். கடமையை மறந்து வேங்கைமாறன் கலங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு கனலாகின அவனது கண்கள், ஆத்திரம் மீற அவன் கை வேலை ஏந்தியது. ''கோழை'' என்று கூறிக்கொண்டே அவன் மீது வேலை வீசினுன் படைத்தலைவன். வேங்கைமாற னின் மார்பைப் பிளந்து கொண்டு நின்றது ஈட்டி, துவண்டு விழுந்தான் இரத்த வெள்ளத்தில், தனது சக்தியெல்லாம் திரட்டி தனது மார்பில் இருந்த ஈட்டியைப் பிடுங்கி எறிந் தான்; குருதி குபு, குபு எனப் பாய்ந்தது மார்பிலிருந்து. தவழ்ந்து தவழ்ந்து வளர்மதி அருகே சென்றுன்.

''வளர்மதி உன்னை நான் கொன்றேன். இதோ எனது பாவமே என்னைப் பழிவாங்கி விட்டது. நீ உனது கடமை யில் தவருது இறந்துவிட்டாய்; நான் என் கடமையில் தவ றியதால் சாகின்றேன். உன் ஆன்மா சாந்தி அடையவேண் டும். அந்தக் கடமையையாவது இந்தக் கடைசி நேரத்தில் செய்கின்றேன். வளர்மதி உனது மதத்தில் இந்தப் பாவிக்கு மன்னிப்புக் கிடைக்குமாஞல், நான் கிறீஸ்துவின் விசுவாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவே சாகின்றேன், என்னை மன்னித்து எனக்காக மன்றாடு, உனது விசுவாசம் என்னை இறுதி நேரத்தில் மனம் மாறவைத்துவிட்டது.''

அவனது கண்கள் வளர்மதியின் அருகில் துண்டிக்கப்பட்ட கையுடன் கிடக்கும் சிலுவையைக் காண்கின்றன. கண்கள் ஊற்றெடுக்கின்றன. இரத்தம் தோய்ந்த நடுங்கும் கரங்களால் அந்தச் சிலுவையைத் தொட்டு முத்தம் செய்கின்றான், கும்பிட்ட கரத்துடனேயே அவன் உயிர் பிரிகின்றது. அதுவரை இல்லாத சாந்தியும், அமைதியும் அவன் முகத்தில் நிழலாடியது. வளர்மதிக்கும், வேங்கைமாறனுக்கும் நடுவிலே பிரான்சிஸ்கு சவேரியார் அடிகளின் துண்டிக்கப்பட்ட கையுடன் கிடந்த சிலுவை அவர்களை ஆசீர்வதித்தது. கிறீஸ்தவ மதத்தின் வரலாறே இரத்தம் தோய்ந்த வரலாறுதான் என்று அந்த இரத்தம் தோய்ந்த கிறீஸ்து நாதரின் திரு உருவம் கூறுவதுபோல் தோன்றியது.

ச. வே. பாதுகாவலன்

17 – 10 – 1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறாவளி ஓய்ந்தது

என் கணவரை கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகன் என்றுதான் எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் அவரோடு ஏழு வருடங்களாக வாழ்க்கை நடத்தும் நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன். ஒருகாலத்தில் என் கணவர் எத்தகைய தெய்வபக்தியுடையவராக இருந்தார் என்பதை நான் நன்கு அறிவேன்,

எங்கள் இல்லற வாழ்க்கையிலே நாங்கள் எதிர்பார்த்திருக்காத அந்த இழப்பு ஏற்பட்டிருக்காது விட்டால் இன்று இவர் இப்படி மாறியிருக்கவே மாட்டார். ''கொடுக்கிற தெய்வம்தானே பறிக்கிறது'' என்ற தத்துவம் என்னவோ உண்மையென்றாலும் தன் கணவரால் அந்த இழப்பைத் தாங்க முடியவில்லை.

ஆண்டவனே இல்லை என்பவர்கள் நாஸ்திகர்களாய் இருக்கலாம், ஆனால் என் கணவரோ ''அந்த ஆண்டவனில் எனக்கு நம்பிக்கையில்லை, அவனை வணங்கமாட்டேன்'' என்று கூறுகிறார். அப்படிக் கூறுவதிலிருந்தே ஆண்டவன் என்று ஒருவன் இருக்கின்றான் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார்தானே. அவனை வெறுத்து வணங்காமல் இருப்பதுதான் அவரிடமுள்ள பிழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இல்லறப் பூங்காவில் பூத்துக் குலுங்கிய இளம் மலர் — அழகு மலர் — அன்பு மலர்தான் எங்கள் செல்வம். ஆசை தீர செல்வம் என்றே பெயரிட்டு அவனை வளர்த்தோம். இவர் அலுவலகத்தில் இருந்து வரும்வரை காத்திருந்து அவர் வருவதைக் கண்டதும் 'அப்பா' என்று ஓடிச் சென்று முத்தமழை பொழிவான் எங்கள் செல்வம். எங்களுக்கு மட்டுமா? அயலவர்கள் உறவினர்கள் எல்லோருக்குமே அவன் செல்வமாகத்தான் இருந்தான், கொழு கொழு வென்ற அழகு, எவரோடும், அறிமுகமாகாதவரோடுகூட அன்பாக அணைந்து கொள்ளும் தன்மையினுல் அனைவரையும் தன்பால் கவர்ந்து வைத்திருந்தான். வயது மூன்றுதான் நிறைந்திருந்தது.

அன்றுகாலை இவர் அலுவலகத்திற்குப் புறப்படும்போது சிரித்து முத்தமிட்டு 'டாட்டா' கூறி வழியனுப்பிய எங்கள் செல்வம் மத்தியானத்திற்கிடையில் மரணச் செய்தியை அவருக்குத்தருவான் என்று எதிர்பார்த்தாரா...

வழக்கமாக மண்எண்ணெய் போத்தலை அவனுக்கு எட்டக்கூடிய இடத்தில் வைப்பதில்லை. ஆனுல் விதியின் செயல் போலும் அன்றைக்கு முந்திய தினம் இரவு 'பெற்றேமெக்ஸ்' விளக்கிற்கு எண்ணெய்விட்ட இவர் ஏதோ எண்ணத்தில் வீட்டின் மூலையிலே போத்தலோடு வைத்துவிட்டார் நானும் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டேன்.

மறுநாள் நான் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன், அப்பொழுது என் செல்வத்திற்கு புரைக்கேறியதால் எழுந்த சத்தம்கேட்டு ஓடிச்சென்றேன். அங்கு ..

என் செல்வத்தின் பக்கத்தே மண்எண்ணெய் போத்தல் சரிந்துகிடந்தது. பிள்ளையின் மேலெல்லாம் எண்ணெய்யாக இருந்தது. கண்கள் மேலே சொருகியிருக்க மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்தான். அலறி அடித்துக்கொண்டு என்பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வைத்தியசாலையை நோக்கி ஓடினேன்... ஆனுல் காலன் முந்தி விட்டான், எங்கள் செல்வத்தை பறித்தெடுத்துவிட்டான். எங்கள் வாழ்க்கையில் பேரிடியைக் கொடுத்துவிட்டு பறந்தே போய்விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிகழ்ச்சிதான் இதுவரை இப்படி மாற்றிவிட்டது உத்தம கத்தோலிக்க குடும்பமாகத் திகழ்ந்த என் குடும்பத்தில் அந்த அவிசுவாசம் எனும் சூறாவளி வீச ஆரம்பித்து விட்டது. ஆண்டுகள் மூன்று கடந்தும் அவர் மாறவில்லை. தெய்வ நிந்தனைதான்...

1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் நத்தார் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த நத்தார் பெருநாளிலாவது என் கணவர் மனம்மாறி கோவிலுக்கு வரவேண்டும், பிறக்கும் புத்தாண்டிலாவது எமது குடும்பத்தில் பழைய நம்பிக்கையும் விசுவாசமும் மலரவேண்டும் என பிறக்கவிருக்கும் சின்ன யேசுவை வேண்டிக்கொண்டேன்... நத்தாரும் நெருங்கிக் கொண்டிருந்தது:

அப்பொழுது எனது இரண்டாவது குழந்தை திலகம் எனக்கு வயிற்றிலே நிறைமாதம்—

டிசம்பர் 22. இரவு திடீரென வீசத் தொடங்கியது சூறாவளி. இயற்கையின் பேய் நடனம். பாரிய மரங்களும் மின்சாரக் கம்பங்களும் சரிந்தும் முறிந்தும் விழுந்தன. அதனை அடுத்து மின்சார சேவை நிற்பாட்டப்பட்டது - எங்கும் 'கும்' இருட்டு. சூறாவளியோடு சுழன்று வந்த மழைத்துளிகள் கல்கொண்டு தாக்குவதுபோன்று மளமள வென வந்து விழுந்தன.

எங்கள் வீடு தென்னங் கிடுகுகளினால் ஆனது; பெரும் பெரும் கல்வீடுகளின் கூரைகளையே பெயர்த்தெறியும் பேய் காற்றின் முன் எமது வீடு ஈடுகொடுக்க முடியாது ஆட்டங் கொடுக்கத் தொடங்கிவிட்டது. எந்த நேரத்தில் வீடு பாறி விழுமோ என்ற பயம் ஆட்கொண்டது. அந்த வேளையில் இன்னுமொரு எதிர்பாராத சம்பவம் வேறு நிகழ்ந்தது — மழை அதிகம் பெய்யவில்லை. ஆனல் முற்றமெல்லாம் தண்ணீர் பெருகி நின்றது. அந்த வேளையில் மக்கள் இடும் பயங்கர ஓலம் எங்கள் காதிலே விழுந்தது. "ஐயோ கடல் பெருக்கெடுத்து வருகிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சத்தத்தைக் கேட்ட நாம் முற்றம் நிறைந்து வீட்டிற்குள் நுழையும் மட்டத்தில் இருந்த நீரை எடுத்து வாயில் வைத்துப்பார்த்தோம் 'உப்பு', சந்தேகமேயில்லை கடல்நீர்தான். அப்பொழுதைய எங்கள் மனநிலையை எப் படி விளக்குவது என்றே எனக்குத் தோன்றவில்லை. இவர் சொன்னார்—

''புறப்படு கனகம் இனி இந்த விட்டில் இருந்தால் உயி ருக்கு ஆபத்து, எங்காவது உயரமான இடத்தில் உள்ள வேறு வீட்டுக்குப் போவோம்''

எனக்கு எதுவுமே தோன்றவில்லை... நான் இருந்த நிலை யில் சாதாரணமாக நடப்பதற்கே முடியாதவள். அந்தப் பேய்க் காற்றிலே நடக்கவும் முடியவில்லை — வேறு ஒரு பொருளையும் எடுக்கவில்லை. அணிந்திருந்த உடைகளுடன் பெட்டியில் இருந்த நகைகளை மட்டும் எடுத்துக்கொண்டு புறப்பட்டோம்,

மன்னார் ஒரு தீவுதானே? உயர்ந்த இடம் என்று எதைத் தேர்ந்தெடுப்பது? புனித சவேரியார் பெண்கள் கல்லூரி தான் இரட்டை மாடிக் கட்டடம். ''அங்கே போவோம்'' என்றார் இவர்—

வீதியிலே நடக்க முடியவில்லை. மூடிய வெள்ளம், மரங் கள் வேறு வீதிகளின் குறுக்கே விழுந்து கிடந்தன. பெட்டி களும், சட்டிகளும், வேலி மட்டைகளும், கோழிகளும், கூடுகளுமாக வெள்ளத்தில் மிதந்துவந்தன. அவற்றைப் பத்திரப்படுத்த யாருக்கும் தோன்றவில்லை. உயிரைக் காப் பாற்றுவதையே நோக்காகக்கொண்டு ஓடிக்கொண்டிருந் தோம்.

இவர் என்னை இறுக அணைத்துப் பிடித்துக்கொண்டு வந்தார். குளிரில் வேறு நான் வெடவெட என நடுங்கிக் கொண்டிருந்தேன். அவருக்கோ பிள்ளை வயிற்றுக்காரியான என்னை எப்படிப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பது என்றும் — எனக்கோ, என் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு ஏதும் நடந்துவிடக்கூடாதே என்றும் ஏக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியெல்லாம் நீர் மூடிக்கிடந்தது. வீதியெது—பள்ள மெது என்று தெரியவில்லை. ''மளார்'' அவர் தன் கையை விட்டுவிட்டார். இடந்தெரியாமல் நீர் மூடிக்கிடந்த பள்ள மொன்றில் காலை வைத்துவிட்டேன்.

''ஆண்டவரே என்ரபிள்ளை'' என்று அலறிக்கொண்டே இவர் என்னைத் தூக்கி அணைத்தார். அந்த ஆபத்து வேளை யிலேதான் நாஸ்திகன் எனக் கூறப்பட்ட என் கணவனுக்கு ஆண்டவன் துணை தேவைப்பட்டது. உள்ளத்தில் ஊறிக் கிடந்த அந்த உணர்வு உடைத்துக்கொண்டு புறப்பட்டது. அந்த வேளையிலும் அவர் உச்சரித்த அந்த வார்த்தை என் காதில் தேனாய் இனித்தது. நான் அவர் முகத்தை உற்றுப் பார்த்தேன். அவர் என்ன நினைத்தாரோ ''கனகா'' என்று கூறிக்கொண்டே என்னை அணைத்தபடி சிறுகுழந்தை தைபோல் விம்மி அழத்தொடங்கி விட்டார். நான் அவர் மார்பில் முகம் புதைத்து அழுதேன்.

பாடசாலைக்கு போகும் வழியில்தான் இருக்கிறது புனித செபஸ்தியார் ஆலயம். அங்கும் ஏராளமாக மக்கள் நிறைந் திருந்தார்கள். என் கணவராகவே என்னை அழைத்துச் சென்ருர். மூன்று வருடங்களின் பின்னர் முதன்முதல் அன்று தான் ஆலயத்தின் படிகளில் கால் வைத்தார்.

ஆலயத்தில் பலர் இந்த ஆபத்தில் தம்மைக் காப் பாற்றும்படி செபித்துக்கொண்டிருந்தனர். அந்தக் கும்ப லோடு இவரும் சென்று முழந்தாளில் இருந்து கரம் கூப்பி மன்ருடினுர். மூடிய அவர் இமைகளை ஊடறுத்து கண்ணீர் கசிந்தோடியது.

'இந்த நத்தால் திருநாளிலாவது என் கணவர் மனம் மாறவேண்டும்' என நான் பிறக்கவிருக்கும் குழந்தை யேசு விடம் கேட்ட விண்ணப்பம் வீண்போகவில்லை. பிறக்க விருந்த அந்த பாலக யேசுவுக்கு நன்றி தெரிவித்தேன்...

வெளியே வீசிக்கொண்டிருந்த சூருவளி ஓய்ந்து விட் டது. என் குடும்பத்தில் வீசிய சூருவளியும் ஓய்ந்துவிட்டது.

1977 மார்கழி சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளிவைக்க ஒரு பிள்ளை

**பொ**ன்னம்மாவுக்கு மூச்சு இழுத்துக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில், இருப்பதா? போவதா என்று போராடிக் கொண்டிருக்கும் அவளின் உயிர் ஒரே அடியாகப் போய்விடும். பரிகாரி அந்தோனிப்பிள்ளையும், கை நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கியபடி, வெளித் திண்ணையிலே போய் உட்கார்ந்து கொண்டார். அவர் தணிந்த குரலில் அங்கிருந்தோரின் காதுகளில் அவளுடைய சாவுக்கு கட்டியம் கூறினர்.

பொன்னம்மாவின் அருகிலேயே உட்கார்ந்து, மூச்சு விடுவதற்குச் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் தன் தாயை கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான் சோமு. வயது பதினைந்தைத் தாண்டிவிட்ட காளை. அவன் இன்பத்திலும், துன்பத்திலும் அவனோடு நின்ற ஒரே உறவான தாயையும் இழந்துவிட்டால் இனி அவனுக்கு யார் துணை?

'தான் போய்விட்டால் தன் பிள்ளைக்கு யார் துணை?' இந்தக் கேள்விதான் அந்த இறுதிக் கட்டத்தில் பொன்னம்மாவின் இதயத்திலும் எழுந்து வேகமாகத் துடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கிடந்தது. இரண்டு பெண்களையும், இரண்டு ஆண்களையும் பெற்ற அவளுக்கு, கடைசியில் கொள்ளி வைக்க என்று இருப்பது சோமு ஒருவன்தானே! ஆண்டவனே என்று கையோடு காலோடு, குடியும் குடித்தனமுமாய் அவளுடைய மற்ற மூன்று பிள்ளைகளும் இருந்து தான் என்ன பயன்?

அவள் காலத்தின் பின் சோமுவை அவர்கள் ஆதரிப்பார்களா? அவள் உயிரோடு இருக்கும்போதே, அது நடக்கவில்லை, இறந்தபிறகா? காரணம் அவன் பிறப்பு அப்படி! அவன் பிறந்ததினுலே அவர்களுடைய கௌரவமே பாதிக்கப்பட்டதாம். அவனைத் தங்கள் தம்பி என்று சொல்வதே அவர்களுக்கு வெட்கம். தாஞடா விட்டாலும் தன் தசை கூட வா ஆடாது?

நித்தம் குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு நிஸ்டூரப் பட்டவள்தான் பொன்னம்மா. சுப்பையாவோடு நடத்திய இல்லறத்தில் அவள் கண்ட பலன், ஐந்து வருடத்தில், மூன்று பிள்ளைகள் தான். அது போதாதா, அடி, உதை, அந்தக் குடும்பத்தில் அமைதி நிலவுமா? அவளுக்கு நிம்மதி தான் கிடைத்திருக்குமா? அவளுக்குச் 'சீ' என்று ஆகி விட்டது வாழ்க்கை.

இந்த இலட்சணத்தில் சுப்பையாவுக்கு இன்னுமொன்று. ஒரு நாள் சொல்லாமல், கொள்ளாமல் அவளோடு ஊரை விட்டே ஓடிவிட்டான். விட்டது சனி என்று பொன்னம்மா நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். ''ஐயோ பாவம்'' என்று சுப்பையாவை நம்பி ஓடிப்போனவளுக்காக அனுதாபப்படவும் தான் செய்தாள்.

தகப்பன்தான் அப்படிச் செய்துவிட்டான் என்பதற்காக பொன்னம்மா தன் தாய்மையின் கடமைகளை மறந்துவிடவில்லை. தன்னையே கசக்கி தன் பிள்ளைகளை வளர்த்தாள். என்ருலும் அவளும் ஒரு பெண்தானே.

அவளின் உழைப்பு மூன்று பிள்ளைகளின் வயிற்றையுமே நிறைக்கப் போதாதபோது, அவள் தன் வயிற்றை நிறைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா...? அரைவயிறு, கால்வயிறு, சிலவேளை அதுவு மில்லை. பிள்ளைகள் எப்படியோ வளர்ந்தார்கள். அவ ளுக்கோ, பசி, பசி.

வயிற்றுப்பசி மட்டும்தானு; அவள் என்ன உணர்ச்சி களே அற்றுப்போய்விட்ட ஜடமா, அன்றேல் வாழ்க்கை யின் எல்லையில் நிற்கும் கிழமா? சுவாரசியமற்ற இல்லறத் திலே இயந்திரம் போன்று மூன்று பிள்ளைகளைப் பெற்று விட்ட அவளுக்கு மட்டும் உணர்ச்சிகளின் சுழற்சிகள் தோன்ருதா?

அவள்..! தவறினுள்!

அவள் தினம் வேலை பார்க்கப் போகும் வீடொன்றில் தான் நடந்தது அது. அந்த வீட்டு எஜமானின் மூத்த மகன், அவளிலும் ஒன்று இரண்டு வயது இளையவனுகத் தான் இருப்பான் என்ருலும்...!

நாகரிக வெறி கொண்டலையும் காளைகள், கையிலே பணமுண்டு என்பதால், பிஞ்சிலேயே பழுத்துவிட்ட பெரிய வீட்டுப் பிள்ளைகளுக்கு இது ஒரு பொழுதுபோக்கு. வேலைக் காரி - கண்ணைக் கவரக் கூடிய அளவுக்கு கட்டான உடல் - அதுவும் கணவனுல் கைவிடப்பட்டு உணர்ச்சியின் விளிம்பில் நிற்பவள்.

பார்வைக் கணைகள்... அவனிடமிருந்து—

பார்த்தும் பார்க்காதவள் போல் அவள்—

பரிதாபமான வார்த்தைகள் அவனிடமிருந்து—

எதிர்பாராமல் எதேச்சையாக பட்டுவிட்டது போல சில சேட்டைகள்,—

எதிர்ப்பில்லை — பதிலாக அவளிடம் இளமுறுவல்,

காளை இதில் கரைகண்டவன். கருத்துப் புரியாதா?

ஏழ்மையும், நிம்மதியின்மையும், திருப்தியற்று அவள் நடத்திய இல்லறமும்... இந்த நாகரிக ஜாலத்திற்கு மயங் கியது, மாண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள்... மறுநாள்... பலநாள் — முடிவு விபரீதம்! அந்தரங்கம் அம்பலமாகியது, அடித்து விரட்டப்பட்டாள். சொந்த மனைவியிருக்க சுகம் தேடி ஓடிவிட்ட சுப்பையாவை ஒன்றும் செய்யத் துணியாத உலகம், பொன்னம்மாவை விபச்சாரி, வேசி என்றது.

இரு பெண்களின் வாழ்வில் இருள் மூட்டிய கோவலனை காவியத் தலைவனாக்கிய உலகம்தானே இது. பெண் விடும் பிழை மட்டும் தான் பெரிதாகத் தெரியும்;

வயிற்றுப் பிள்ளையோடு வாழ்க்கைக்குப் போராடினாள். பெற்றதோ ஆண்மகவு. பிறந்ததற்கு பெயர் வேண்டாமா, சோமன் என்று வைத்தாள். அது எல்லார் வாயிலும் சோமு... சோமு என்று ஆயிற்று.

ஆண்டுகளோ பதினைந்து கடந்திற்று — அப்பப்பா தன் பிள்ளைகளை வளர்த்தெடுக்க அவள் பட்ட கஸ்டங்கள், தின்ற நெருப்புத்தான் எவ்வளவு, தான் கஸ்டப்பட்டாலும் அவள் கேட்ட பேர் 'ஆட்டக்காரி, முறை தவறிப் பெற்றவள்' என்ற வாழ்த்துக்கள் தான். சோமன் பிறந்ததின்பின் உண்மையிலே அவள் சுயபுத்தி பிறழ்ந்ததில்லை. அவரவர் அந்தரங்கங்கள் அம்பலமாகாத வரை ஆடிமுடிக்கின்ற அயல் வீட்டுப் பத்தினிகளுக்கெல்லாம் அவள் ஒரு அழுக்கு.

''தாயைப் போல பிள்ளை''. ''அவள் பெற்றதுகள் எப்படியிருக்குங்கள்'' இப்படிப் பல வர்ணனைகள். இவையெல்லாம் அவளது மூத்த பிள்ளைகளுக்கு வளரவளர பெரும் அவமானமாகவும், கேவலமாகவும், வெட்கத்தையூட்டுவதாகவும் இருந்தன. அதன் பிரதிபலன் சோமுவில் தான் திரும்பியது. அவர்கள் வளர்ந்ததின் பின் சோமுதான் அவள் சுட்டு அடுக்கும் அப்பங்களை சுமந்து சென்று விற்று வருவான். அந்த நன்றிகூட அவர்களுக்குக் கிடையாது.

மூத்த இரண்டு பெண்களும் வாழ்க்கைப்பட்டு புகுந்த வீட்டில் குடியேறிவிட்டார்கள். மூத்தவனும் தன்னுடைய எண்ணத்திற்கு ஒருத்தியோடு போய்விட்டான். பாவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் பெண்டாட்டி தாசன். கடைசிநேரத்தில் அவள் அருகில் நிற்பது அவள் முறைதவறிப் பெற்றது தான்!

தாயின் முகத்தைப் பார்த்து அவன் அழுதுகொண்டேயிருந்தான்! தாய் படுக்கையில் விழுந்த பின்பு பெரும் பாலும் ஒரு பெண்பிள்ளை செய்யக்கூடிய கடமைகளைக் கூட செய்து தாயைப் பராமரித்தவன் அவனல்லவா!

அவள் ஏறிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள். அவள் பார்வையில் நன்றி ததும்ப கண் விளிம்புகளால் கங்கை பெருகியது.

''பளிச்'' சென்று அவள் சிந்தனையிலே ஒரு மின்னல். அது அவள் பழைய கால நிகழ்வில் ஒரு துணுக்கு — அது... அது...

பதினைந்து வருடங்களுக்கு முந்திய அந்த சம்பவம் நிழல்போல் அவள் நினைவுத் திரையில் தோன்றியது.

பரிகாரி அந்தோனிப்பிள்ளையின் பதிந்த வீட்டினுள் பிரவேசிக்கிறாள் பொன்னம்மா. தனக்கே உரித்தான பரிவோடு அவளை வரவேற்று விசாரிக்கின்றார் பரிகாரியார். வெட்கமும் துக்கமும் வெளிக்கிளம்ப தான் வந்த விடயத்தை மெல்ல மெல்ல அவரிடம் சொல்லுகிறாள் அவள்.

பொன்னம்மாவின் கோரிக்கையை அவர் நிறைவேற்றுவதா வேண்டாமா என்ற போராட்டம் அவருள் எழுகின்றது. அவருடைய வீட்டின் கதவு நிலையின்மேல் தொங்கிக் கொண்டிருக்கும் படத்திலே அவரது பார்வை விழுகின்றது. தனது குழந்தை யேசுவை தாங்கிய வண்ணம் காட்சி தரும் அன்னை மேரியின் படமது. அந்த அன்னையின் கையிலுள்ள குழந்தையின் அழகிய முகம்,

''அந்தோனி என்னைப்போன்ற ஒரு உயிரை அழிக்கப் போகின்றாயா? அவள் செய்த பாவத்தின் பழியை மறைக்க நீ கொலைகாரனாகப் போகின்றாயா? அந்தக் குழந்தை உனக்கு என்ன செய்தது?'' என்று கெஞ்சுவது போல் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் தொடர்கிறது. ஒரு பாவத்தை மறைக்க இன்னொரு பாவமா? உண்மையான கத்தோலிக்கரான அவரது மனம் இதற்கு உடன்பட மறுக்கிறது. முடிவு...!

தோல்வியோடு அழுதபடி வெளியேறுகிறாள் பொன்னம்மா. பரிகாரியார் ஆயிரந்தான் அறிவுரைகளை எடுத்தியம்பியபோதும் அவள் மனம் சாந்திகொள்ள மறுக்கிறது. அவளை இந்த நிலைக்கு ஆளாக்கியவனைவிட அந்தோனி கொடுமையானவர் என்பதுபோல அந்த நிலையில் அவள் மனம் எண்ணியது.

மெல்ல அவள் உதடுகள் அசைந்தன. ''தம்பி... பரிகாரியாரை வரச்சொல்லு'' அவன் அழைத்தான். பரிகாரி அந்தோனிப்பிள்ளை எழுந்து வந்தார்.

அவள் தன் இரு கரங்களையும் எடுத்து அவரைக் கும்பிட்டாள். அவள் பார்வையில் நன்றி மிளிர்ந்தது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை, அவள் அவரை சைகை மூலம் அருகே அழைத்தாள். ஏதோ சொல்ல விரும்புகிறாள் என்பதை உணர்ந்த அவர் குனிந்து அவள் சொல்வதற்குக் காது கொடுத்தார். அவள் வார்த்தைகள் மிகவும் மெதுவாக ஒலித்தன.

''பரிகாரியார் உங்களைக் கும்புடுகிறேன்... அந்த நாளில என் பிள்ளை வயித்தில இருக்கிற போது, அதை அழிக்கிறதுக்கு மருந்து தாங்க என்று உங்களைக் கேட்டேனே. அப்ப நீங்க வேண்டாமடி அந்தப் புள்ளை தான் கடைசியில கொள்ளிவைக்க உதவுமடி என்று எனக்குப் புத்தி சொல்லித் தடுத்தீங்களே, உங்கட வாக்குப் பலிச்சிருக்கு. இந்த வம்பில பிறந்ததைக் கொண்டுதான் எனக்குக் கொள்ளி வைப்பிக்கவேணும்; இது என்ர கடைசி விருப்பம்...'' மேற்கொண்டு அவள் எதுவும் பேசவில்லை... பேசவும் முடியவில்லை. கண்கள்தான் வழித்து ஊற்றின... எந்த நிலையிலும் மனம் தளராத பரிகாரியாரின் கண்கள் கசிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்மா மெல்லத் தன் கரத்தை நீட்டி சோமனின் கரத்தைப் பற்றித் தன் நெஞ்சின் மீது வைத்துக் கொண்டாள். தன் கடமையை முடித்துக்கொள்ளும் இறுதி வேகத்தில் அவள் இருதயம் ஓய்ந்து ஓய்ந்து அடிப்பது அவன் கரங்களின் உணர்ச்சிகளுக்குத் தெரிந்தது — அவள் இதயம் நின்றுவிட்டது. அவள் கரம் அவன் கரத்தை மட்டும் விடவில்லை.

'சுடர்' 1977 ஆடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு முற்றுப்புள்ளி

எனது காலைக் கடன்களில் முதலில் என்னைப் படைத்த கடவுளையும் அடுத்து என்னை இந்நிலைக்கு ஆளாக்கிவிட்ட என் அன்பு தெய்வத்தையும் நான் வணங்கத் தவறுவதேயில்லை.

அன்று காலையும் அவளின் படத்தருகே நின்றேன். முத்துப்பல்வரிசை முழுவதையும் காட்டியபடி சிரித்துக்கொண்டிருக்கும் அவள் அழகுதான் என்னே அழகு! அந்தக் கண்களில்தான் எத்தனை குறும்பு! இந்தப் புகைப் படத்தை பார்க்கும் எவரும் இவள் நிச்சயமாக அப்படியொரு பொறுப்புணர்ந்த பெண்ணாக இருந்திருப்பாள் என்று சொல்லவே மாட்டார்கள்.

அவள் எனது அக்கா, எனக்கு ஏழு வருடங்கள் மூத்தவள். எனது பெற்றோர் எனக்கென்று ஒரு சொத்தையும் தேடிவைக்காவிட்டாலும், எனக்கு அந்த உத்தமியை அக்காவாகத் தந்திருந்தனர். அத்தோடு அவளைப் படிப்பித்து ஒரு வயலின் ஆசிரியையாகவும் ஆக்கிவிட்டிருந்தார்.

அவள் வயலின் இசைக்கருவியைப் பிடித்து மீட்டும் அழகுதான் என்னே! அவளின் பூந்தளிர் விரல்கள் ஒவ்வொரு நரம்புகளாக அழுத்தி அசைத்து நகரும்போது அந்தக்கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியில் இருந்து இசை பிறக்கின்றதா அல்லது அந்த விரல் களில் இருந்துதான் அந்த நாதம் கிளம்புகின்றதா என்று நான் வியந்ததுண்டு.

ஏற்கனவே தாயை இழந்துவிட்ட எங்களிடமிருந்து, எனது அக்காள் வயலின் ஆசிரியையாகக் கடமையாற்றத் தொடங்கிய இரண்டு வருடங்களில் தந்தையையும் பிரித்து விட்டான் அந்த இறைவன். அப்பொழுது அவளுக்கு வயது இருபத்துமூன்றுதான் இருக்கும். தந்தை இருக்கும்வரை தாயாகவும், தமக்கையாகவும் இருந்த அவள் தந்தையின் பிரிவின் பின்னர் தந்தையின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாள்.

அவளை திருமணம் செய்துகொள்ளும்படி பலர் அவ ளுக்கு அறிவுரை கூறினர். பலர் அவளை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். ஆனால், அவள் ஒரேயடியாக மறுத்துவிட் டாள். காரணம்--நான்தான். "என் தம்பியை நான் படிப் பித்து அவனை ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்த பின்னர்தான் எனது திருமணத்தைப்பற்றி சிந்திக்க முடி யும்" என்று கூறிவிட்டாள்.

அவளுக்குத்தான் எத்தனை நல்ல இதயம், என்மீது தான் எவ்வளவு அன்பு. அவள் சொன்னபடியே செய்து காட்டி விட்டாள். அவள் பாடசாலைக்குப் போகும் நேரம் தவிர ஓய்வான நேரங்களில் சிலருக்கு தனிப்பட்ட முறை யில் வயலின் பாடம் சொல்லிக் கொடுப்பாள். குறித்த நேரத்தில் என்னைத் துயிலெழுப்பிப் படிக்கச்செய்வாள். எனது உடுதுணிகளையும் அவளே தோய்ப்பாள். நான் செய் யக்கூடிய முழுவேலைகளையும் அவளே செய்வாள். அவள் வேலை மாற்றலாக வேற்றூருக்குப் போகவேண்டிவந்த சம யங்களில் கலாசாலை விடுதியில் என்னைச் சேர்ப்பித்துப் படிக்கச்செய்தாள். அப்பொழுதெல்லாம் என் நலன் கேட்டு வாரம் தவறாது கடிதம் வரும். எனக்கு ஒரு குறையும் அவள் வைக்கவில்லை. அவளுக்குத்தான் என் மீது எத்தனை அன்பு. என் கல்விமீதுதான் எத்தனை கரிசனை. அவள் நினைத்தது போலவே என்னைப் படிப்பித்து ஒரு பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் ஆக்கிவிட்டாள். நான் ஒரு பட்டதாரி ஆசிரிய ஞகவும் ஆகிவிட்டேன். ஆனுல்—

எனது கல்விக்காக, எனது வாழ்வுக்காக, தன்னையே எரித்துக் கொண்டிருந்த விளக்கு அவள். நான் அவள் விரும்பியநிலையை அடைந்தபோது அணைந்துவிட்டது. சந்திரனுக்கு ஒளி கொடுத்துக் கொண்டிருக்கும் சூரியன், சந்திரன் உதயமாகும் போது மறைந்து விடுவதுபோன்று அவள் மறைந்து விட்டாள்.

என் மட்டில் அவள் எத்தனை கனவு கண்டு கொண்டிருந்தாளோ அந்த அளவு நானும் அவள் மட்டில் கற்பனை பண்ணியிருந்தேன். அவளை மாலையும் கழுத்துமாக—பூவோடும், பொட்டோடும், மஞ்சள் மாங்கல்யத்தோடு அவள் தீர்க்க சுமங்கலியாக இனிதே இல்லறம் நடத்துகின்ற காட்சியைக் காணத் துடித்தேன். ஆனுல் என் எண்ணத்தில் இடி விழ்ந்தது. ஒரு நாள்– இருதய நோய் என்ற காரணத்தைக் காட்டி காலன் என்னிடமிருந்து அவளைப் பிரித்துவிட்டான். அவள் போய்விட்டாள்—அவள் போயே விட்டாள்.

ஆண்டுகள் பன்னிரெண்டு கடந்துவிட்டன. அவள் இல்லாத வாழ்வு எனக்கு வேம்பாகக் கசந்தது. அவள் அடையாத இல்லற வாழ்வை ஏற்க என் மனம் வெறுத்தது. அதன் விளைவு இந்தப் பன்னிரெண்டு வருடகாலமும் என்னைக் கட்டைப் பிரமச்சாரியாகவே வாழவைத்தது.

அன்று காலையும் வழமைப்பிரகாரம் அவள் படத்தின் முன்பு நின்றுகொண்டிருந்தேன். அந்தவேளை—

திடீரென அந்த இசை தேனுகப் பாய்ந்துவந்து தென்றலில் மிதந்தது என் காதுகளில் பாய்ந்தது. அது, என் அக்காள் எதனை மீட்டி மீட்டி என் வாழ்வுக்கு உயிர் ஊட்டிஞளோ அந்த இசைக்கருவியின் கீதம் — அதுவும் என் அக்காள் விரும்பி மீட்டுகின்ற அதே கீதம் அணுவளவும் ஓசை பிறழாது ஒலித்தது. பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர் என்னைப் பிரிந்துவிட்ட அக்காள்தான் மீண்டும் பிறந்துவந்து மீட்டுகின்ருளோ என நினைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இசையொலி நான் குடியிருக்கும் வீட்டின் பக்கத்து வீட்டில் இருந்து எழுவது புரிந்தது. ஆனால் நான் இங்கு வேலை மாற்றலாகி வந்த இந்த ஒரு வருடகாலத்திலுடா ஒரு நாளாவது நான் கேளாத இசை. இப்பொழுது நினைவுக்கு வருகிறது — பக்கத்து வீட்டில் குடியிருந்த குடும்பத்தினர் சென்றகிழமை வேறு வீட்டிற்குப் போய்விட்டவர். அப்படியானால் யாரோ புதிதாக அங்கு குடிவந்திருக்கிறார்கள் போலும். அவர்களில் யாரோ தான் அந்த இனிய இசையை மீட்டுகின்றனர்.

அந்த இசையை மீட்டுகின்றது யார், அது ஆணா பெண்ணா? அந்த நரம்புகளை வருடும் விரல்கள் யாருக்கு உரியன என்பதை உடனடியாக அறியத்துடித்தேன். நிட்சயமாக நன்கு பயிற்சி பெற்ற ஞானமுள்ள ஒருவரின் மீட்டுதல் என்பதில் மட்டும் ஐயமில்லை. அன்று எனக்கிருந்த அவசரத்தில் அடுத்த வீட்டுக்குச் சென்று அறிய முடியவில்லை. அல்லாமலும் புதிதாக குடிவந்தவர் வீட்டுக்கு திடீரென போவதும் பண்பன்று. நாட்கள் சில நகர்ந்தன. தினமும் காலையில் அந்த இனிய கீதம் என் காதில் ஒலிக்கத் தவறுவதில்லை…… ஆனால் அடுத்த வீட்டில் குடிவந்துள்ளவர் யார் என்று என்னால் அறிய முடியவில்லை.

அன்று ஞாயிறுதினம், காலைப்பூசை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். ஆணும் பெண்ணுமாக எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த இருவரில் அந்தப்பெண்…!

பாவம், தாங்கு கட்டைகளை தன் கைகளில் இடுக்கிக் கொண்டு அவற்றின் துணையோடு நடந்து கொண்டிருந்தாள் அவள். அவள் உடுத்தியிருந்த சேலையின் கீழ் விளிம்பு அசைகின்றபோது அவளது இடதுகால் மரத்தினால் ஆன பொய்க் கால் என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. கட்டான உடலமைப்புடன், அழகே உருவான அவளிடம் காணப்பட்ட அந்த ஊனம், அந்த ஆண்டவன் செய்திட்ட ஓரவஞ்சனைபோற் தோன்றியது. அவளை அந்தத் தோற்றத்தில் காணும்போது எனக்கு அவள்மீது இரக்கமே ஏற்பட்டது. வயது நிட்சயமாக முப்பதுக்கு மேலிருக்கும் அவளுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் வந்து கொண்டிருப்பவர் அவளுக்கு தம்பியாகத் தான் இருக்க வேண்டும். தோற்றத்தில் அவளைப்போலவே இருந்த அவர் இரண்டு வயதாவது இளையவராக இருப்பார் என எண்ணிக்கொண்டேன்.

அந்த அக்காளையும் தம்பியையும் பார்க்க எனக்குப் பொறாமையாக இருந்தது. இறந்துவிட்ட எனது அக்காளின் நினைவு எழுந்து என்னை வாட்டியது. வைத்தகண்வாங்காது பார்த்தபடி அவர்களையே பின்தொடர்ந்தேன். நான் போக வேண்டிய வழியாலேயே அவர்கள் இருவரும் போவது எனக்கு வியப்பாக இருந்தது. அதைவிட வியப்பு நான் குடியிருக்கும் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் அவர்கள் புகுந்த போது எனக்கு ஏற்பட்டது. அப்படியானால் தினமும் என்னைப் பரசவத்தில் ஆழ்த்தும் இசைக்கு உரியவர் இவர்களில் ஒருவர்தானா! அதை அறிந்து கொள்வதுடன் அவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டானது.

அதே நினைவுடன் என் அறைக்குள் புகுந்து உடை மாற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென அதே இசை ஒலித்தது. ஆம், நான் விரும்பும் அந்த வயலின் இசை அடுத்த வீட்டில் இருந்து மிதந்து வந்தது. என் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவனாக அடுத்த வீட்டிற்குப் புறப் பட்டேன். எனது மனோநிலையை உணர்ந்து தானோ என்னவோ எனது அக்காள் நிழற்படமாக நின்று என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டு நின்றாள்.

வெளிப்படலையைத் திறந்துகொண்டு அவர்கள் வளவினுள் சென்றேன். வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது. அந்த ஓசை ஓயாது ஒலித்துக்கொண்டேயிருந்தது. நான் வெளி விறுந்தையில் ஏறியபோது அந்த இசை திடீரென நின்று விட்டது. சற்று நேரம் அமைதி நிலவியது. வீட்டின் கதவை தட்டுவதற்கென நான் கையை உயர்த்தியபோது உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. கதவைத் தட்டுவதை விடுத்து அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டேன். முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணின் குரல்தான் கேட்டது. அது அவளுடைய தம்பியுடையதாய் இருக்கவேண்டும். அவரின் பேச்சைக் கேட்கும்போது எனது விழிகள் வியப்பால் விரிந்தன. அவர்கள் வாழ்வில் ஏதோ மர்மம் இருப்பது போல் தோன்றியது.

அவர் பேசினார்:

''அக்கா, தினமும் நீ இப்படியே அழுதுகொண்டிருந்தால் இதற்கு ஒரு முடிவே இல்லையா? நீ அழுவதல்லாமல் என்னையும் ஏன் கலங்கவைக்கிருய்?''

''எனக்குள்ள ஒரே கவலை அதுதானே தம்பி, நான் ஏன் அழவேண்டும்? எனது அழுகையேன் அடுத்தவரையும் கலங்கவைக்கவேண்டும். எல்லாத்துக்கும் ஒரே முடிவாக அந்த ஆண்டவன் என்னை எடுத்துக்கொள்ளக்கூடாதா?''

''இப்படியெல்லாம் பேசக்கூடாது என்று உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்!''

''இந்த முடம் உனக்கு என்றைக்கும் சுமைதானேடா?''

''என்றைக்காவது நான் அப்படிச் சொல்லியிருக்கிறேனு?''

''நீ சொல்லா விட்டாலும் எனக்குத் தெரியாதா? உன் ஆசைகளெல்லாம் நிராசையானது என்னுலேதானே, நான் ஒருத்தி இல்லாவிட்டால் உனது ஆசை நிறைவேறியிருக்கும் தானே!''

அவர்கள் பேச்சுத் தொடரும்போல் இருந்தது, அடுத்தவர் பேச்சை இப்படி ஒட்டுக்கேட்பது நாகரிகமற்ற செயல் என்பதை உணர்ந்தவளுக மெல்லக் கதவைத் தட்டினேன். அவர்கள் பேச்சு நின்றுவிட்டது. ''யார்?'' என்று கேட்டபடி அவளின் தம்பிதான் வந்து கதவைத் திறந்தார். என்னைக் கண்டதும் அவரின் முகத்தில் ஒரு வியப்புக்குறி! நான் அவர்கள் எதிர்பாராத விருந்தாளி. அதுவும் அத்தகைய ஒரு சூழ்நிலையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் யாரைப் பார்க்கவேண்டும்?'' என்று இழுத் தார் அவர்...

என்னை நான் அறிமுகம் செய்துகொண்டேன். ''நான் பக்கத்து வீட்டில் குடியிருப்பவன் உங்களோடு கொஞ்சம் பேசவேண்டும் என்று...''

''வீட்டுக்கு வாறவங்களை வாசலில் வைச்சுக் கதைக்கி றியே உள்ள கூப்பிடு தம்பி'' அவள் அழைத்தாள். அவ ளைத் தொடர்ந்து அவரும் அழைக்கவே நான் உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். அவளுக்குப் பக்கத் தில் வயலின் கருவி இருந்தது. அதனை மீட்டியது அவளா கத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லாமலே புரிந்து கொண்டேன், நான்தான் முதலில் பேச்சைத் தொடங்கி னேன்.

''கொஞ்சநாளா தினமும் இங்கு வயலின் இசை கேட் கிறது. அதைக்கேட்டு நான் பரவசமடைகிறேன் - எனவே இவ்வளவு இனிமையாக வாசிப்பது யார் என்று அறி யும் ஆசையில்தான் வந்தேன்.''

என் பேச்சைக்கேட்டு அவள் புன்னகைத்தாள். ''வயலின் இசையென்றால் உங்களுக்கு அவ்வளவு பிரியமா?''

''ஆமாம், அதிலும் சற்று முன் நீங்கள் வாசித்தீர்களே அந்த இசை எனக்கு மிகவும் பிடிக்கும். சரியாக என்னு டைய அக்கா வாசித்தது போலவே இருந்தது. அவளுக் கும் எனக்கும் மிகப் பிடித்த இசையிது''

''அப்படியென்றால் அவவும் ஒரு வயலினிஸ்டா? அவ இப்போ எங்கே இருக்கிறா?''

''அவ காலமாகி வருடம் பன்னிரண்டாயிற்று. அது சரி நீங்க இந்த இசையை எங்கே படித்தீர்கள்''

''இது நாங்கள் திருகோணமலையில் இருந்தபோது எங் களுடைய வயலின் டீச்சர் படிப்பித்தது?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவவின் பெயர்?''

''கொறற்றி''

''கொறற்றியா? அவதான் என்னுடைய அக்கா. அந்த நாளில் கொஞ்சக்காலம் அவ திருகோணமலையில் படிப்பித்திருக்கிரு. நீங்கள் இந்த இசையை சரியாக அவளைப் போன்று வாசிப்பதற்கான காரணம் இப்பொழுதான் புரிகிறது'' அவள் எனது அக்காவின் மாணவி, அவளால் உருவாக்கப்பட்டவள் என்பதை அறிந்தபோது எனக்கு பெருமையாக இருந்தது.

அன்று அறிமுகமான நான் தொடர்ந்தும் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டேன். எனது அக்காவுக்குப் பிடித்தமான அந்த இசையை மீண்டும் மீண்டும் மீட்டும்படி செய்து கேட்டு மகிழ்வேன். எனக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு வேரூன்றிவிட்டது. எதையும் மனம்விட்டுப் பேசும் அளவிற்கு வளர்த்துக் கொண்டோம்.

ஆனல் அவர்களுக்கிடையே தீராத கவலையொன்று நிழலாடிக்கொண்டிருப்பதை என்னல் உணர முடிந்தது. அது என்னவென்று நான் கேட்கவுமில்லை அவர்கள் சொல்லவுமில்லை. அதை எனது யூகத்தின்படி சொல்லுவதானல், வயது முப்பதுக்கு மேலாகியும் அவர்களுக்குத் திருமணம் நடைபெறவில்லை என்பதுதான் காரணமாயிருக்கவேண்டும்.

ஒருநாள் அவளின் தம்பியோடு தனிமையில் உரையாடும் போது அதுபற்றிக் கேட்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. ''அக்காவுக்கு வயது முப்பத்திநாலாகியும் திருமணம் நடைபெறவில்லையே இது எமக்குக் கவலையில்லையா? என்ருர்.''

''இத்தனை காலமும் அவளைத் துணிந்து கையேற்கக் கூடிய ஒரு ஆண்மகன் கிடைக்கவில்லையா?''

''இந்நாளில் தியாகம் என்பது அவ்வளவு மலிவாகக் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. அது பல ஆயிரங்கள் பெறுமதியானது. சிலவேளைகளில் இலட்சமும் பெறும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் எமது சமூகத்தவரிடையே தலைவிரித்தாடும் சீதனப் பேயைப்பற்றியே சொல்லுகிருர்கள் என்று எனக்கு விளங்கியது. அதற்கு நான் எதுவித பதிலும் சொல்ல வில்லை. அவரே மீண்டும் பேசினுர்.

"உங்களுக்குத் தெரியும்தானே பெண்ணுக்கு வேண்டிய இலட்சணங்கள் யாவுமே அடங்கப்பெற்ற முழுமையான பெண்களுக்கே சீதனம் என்றும், நன்கொடை யென்றும் எத்தனை ஆயிரங்கள் கேட்கிருர்கள். இந்த நிலைமையில் ஒரு காலே இல்லாத என் அக்காளை நான் கரை சேர்ப்ப தென்ருல் எத்தனை ஆயிரங்கள் தேறும். அவளைக் கையேற்க உயிர் உள்ளவரை அவளை வைத்துக் காப்பாற்றுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்."

அவளுடைய கால் முறிந்ததற்கான காரணத்தை அவள் ஏற்கனவே சொல்லியிருந்தாள் அது நடைபெற்றது 1958ல் ஈழத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தின்போதுதான் அவ ளுடைய தாயும், தகப்பனும் கொலைசெய்யப்பட்டார்களாம் இவள் தன்னுடைய உயிரைக்காப்பாற்ற ஓடியபோது மாடிப் படிகளில் இடறி விழுந்து தனது ஒருகாலை இழக்க வேண்டி ஏற்பட்டதாம். அப்பொழுது அவள் தம்பி கண்டி குருத்துவமனையில் படித்துக்கொண்டிருக்கிருர். தன் குடும் பத்துக்கேற்பட்ட கதியைக்கண்டு தனது குருத்துவப் படிப்பைவிட்டு அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து தன் ஒரே அக்காளைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண் டாராம்.

நான் மீண்டும் கேட்டேன் 'ஏன் தம்பி இனக் கலவரத் தால் பாதிக்கப்பட்ட உன் அக்காளைக் கையேற்பதற்கு மனிதாபிமானமுள்ள எந்தத் தமிழனுவது – அன்பையும் இரக்கத்தையும் போற்றும் ஒரு கத்தோலிக்கனுவது முன் வரவில்லையா?" என்னுடைய இந்தக் கேள்விக்கான அவரது பதிலைக் கேட்கும் ஆவலில் என் செவிகளைக் கூர்மையாக் கிக்கொண்டு அவர் முகத்தை நோக்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அந்தக் கேள்விக்கான பதில் அவரிடமிருந்து உடனடியாக வரவில்லை. சற்றுநேரம் என் முகத்தையே ஊடுருவிப் பார்த்தார். அவர் கண்கள் கலங்குவதை எனினுல் அவதானிக்க முடிந்தது. வார்த்தைகள் வெளிவரத் தயங்கின. அவர் கூறினுர்; ''ஏனில்லை. ஒரு சிலர் அக்காவைப் பெண்பார்க்க வந்தார்கள். கால் ஊனமான நிலையிலும் அவளைக் கையேற்கத் துணிந்தார்கள். ஆனுல்...''

''ஆனுல்...?''

''அவர்கள் சம்மதம் தெரிவித்த பின்னர் அக்கா அந்த உண்மையைச் சொல்லாது விட்டிருந்தால் அவளுக்கு எப்பொழுதோ திருமணம் நடந்திருக்கும்.''

''எந்த உண்மையை?''

''என் அக்கா உண்மைக்குத் தலைவணங்குபவள். தன் தலையே போவதானுலும் உண்மையைக் கூறத் தயங்காதவள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவள். அதனுல்தான் அவள் தனக்கு வாழ்வளிக்க முன்வந்தவர்களிடமெல்லாம் அந்த உண்மையை சொன்னுள். முடமான அவளிடம் இரக்கப்பட்டு வாழ்வளிக்க வந்தவர்கள் எல்லோரும் அவள் கூறிய அந்த உண்மையைக் கேட்ட பின்னர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். உண்மைக்கு அழிவில்லை என்பார்கள். என் அக்காளுக்கு அந்த உண்மையே அழிவைத் தேடித் தந்துவிட்டது. தயவுசெய்து அந்த உண்மையை என்னவென்றுமட்டும் என்னிடம் கேட்காதீர்கள். அதைச் சொல்லக்கூடிய அளவு துணிவு எனக்குக் கிடையாது. நீங்கள் அதைக் கட்டாயம் அறிந்துதான் ஆகவேண்டுமானுல் அதை அவளிடமே கேளுங்கள் உங்களுக்கு நிச்சயம் சொல்லுவாள்.''

இன்னெருத்தர் வாழ்வின் இரகசியங்களை அறிய முற்படுவது பண்பல்ல; என்ருலும் - அறிவதன் மூலம் என்னுல் ஏதாவது பலன் கிட்டுமானுல், அல்லது அவர்களுக்கு வெறும் மன ஆறுதலாகிலும் கிடைக்கக் கூடுமானுல் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை ஏன் விடவேண்டும் என்ற எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணத்தில் ஒருநாள் அதற்கென்ற ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு தனிமையில் அவளிடம் இதுபற்றிக் கேட்டேன். அதற்கு அவள் சொன்ன பதில் கேட்டு என் தலை சுற்றியது. ஒருவித வெறியே என் உதிரத்தில் பரவியது.

எனது வினுவுக்குரிய விடை உடனடியாக அவளிடமிருந்து வரவில்லை. அவளது கண்கள் என்னை ஊடுருவிப் பார்த்தன அவள் உள்ளத்தில் பெரும் எரிமலை ஒன்று வெடித்துக்கொண்டிருக்கிறது என்பதை அவள் கண்கள் எனக்கு உணர்த்தின. சற்றுப் பின்னர் அவள் கேட்டாள். ''அதை அறிந்துகொள்ள நீங்கள் ஏன் ஆர்வம் காட்டுகிறீர்கள்? அதனுல் ஆகப்போவது என்ன?

அவளுடைய அந்தக் கேள்விக்கு என்னுல் ஒருபதிலும் சொல்ல முடியவில்லை. என்ருலும், ''என்னுல் ஏதும் ஆகுமோ ஆகாதோ, ஆனுலும் உங்களோடு இவ்வளவு ஐக்கியமாகப் பழகிவிட்ட காரணத்தால் ஏதோ ஒரு உரிமை உணர்வில் கேட்டுவிட்டேன். நான் கேட்டது தவறு என்ருல் மன்னித்து விடுங்கள்.

''பரவாயில்லை இதுவரை காலமும் என்னைப் பெண் பார்க்க வந்தவர்களிடமெல்லாம் அவர்கள் கேட்காமல் இருந்தபோதே நான் இதைக் கூறியிருக்கிறேன்; ஆனுல் நீங்கள் அக்கறையோடு கேட்ட பின்னரும் கூருமல் விடுவது எனது மனதுக்கு சரி என்று படவில்லை. எதற்காக உண்மையை ஒழிக்கவேண்டும். நான் மட்டும் என் மனச்சாட்சியைக் கொன்று உண்மையை மறைத்திருந்தால் எனக்கு என்ருே தாலிப்பாக்கியம் கிட்டியிருக்கும். ஆனுல் என்மீது இரக்கம்கொண்டு வாழ்வளித்தவருக்கு வாழ்நாள் எல்லாம் துரோகம் செய்தவளாகி விட்டிருப்பேன். என் மனச் சாட்சியே இதுவரையில் என்னைக் கொன்றிருக்கும். அதற்காகத் தான் அவர்களிடமெல்லாம் உண்மையைக் கூறினேன். சிலர் என் நேர்மையைப் பாராட்டிவிட்டு விலகிவிட்டார்கள், சிலர் ஏதோ ஒரு அருவருப்பான பிராணியைப் பார்ப்பது போன்று ஒதுங்கிவிட்டார்கள். வேறுசிலர் எனக்கு ஏற்பட்ட களங்கத்தை மறைப்பதற்கு பல ஆயிரங்கள் கேட்டார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொல்வதைக்கேட்க எனக்கு அவள்மீது இரக்க மாக விருந்தது. தொடர்ந்து என்ன சொல்லப்போகின்ருள் என்பதை ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தேன்.

"அந்த உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன் அதை உங்களுக்குச் சொல்லுவதால் ஏதும் பிரதி பலன் கிட்டும் என்று எதிர்பார்த்தல்ல. உண்மையான அனுதாபத்துடன் கேட்கும் ஒருவரிடம் உண்மையை மறைக்கக் கூடாது என் பதாலும், இவளுடைய வாழ்வில் அப்படி என்ன பயங்கர இரகசியம் என்று உங்களைப் போட்டு நீங்கள் குழப்பிக் கொள்ளக்கூடாது என்ற அனுதாபத்திலுமே சொல்லுகி றேன்.

அந்த நிலையிலும் என்னைப் பார்த்து அனுதாபப் படுவ தாகக் கூறும் அவளை நினைக்க என் மனதின் ஒரு புறத்தில் சற்று நகைப்பே தோன்றியது. அவள் தொடர்ந்தாள்—

"1958ம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஐம்பத்தேழாம் ஆண்டுதான் உங் கள் அக்காவிடம் திருக்கோணமலையில் நான் வயலின் பயிற்சி பெற்றேன். அந்த ஆண்டு முடிவில் எங்கள் அப்பா வுக்கு வேலை மாற்றம் கிடைத்து நாங்கள் பொலநறுவைக்கு போனோம்."

"அப்பொழுது எனது தம்பி கண்டி குருமடத்தில் படித்துக்கொண்டிருந்தான். அந்தக் கலவரத்தில் என் பெற் ரோரையும் என் ஒரு காலையும் நான் இழந்த சம்பவங்களை மட்டும்தான் நீங்கள் அறிவீர்கள். ஆனால் அதைவிடப் பயங்கரமான ஒரு சம்பவம் என் வாழ்வில் நடந்து விட்டது. அது " என்று கூறியவள் குமுறிக்குமுறி அழுதாள். தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள். அவள் விம்மல் அடங்கச் சிறிது நேரம் எடுத்தது. அவளுடைய அந்த நிலையை கண்டு என்னால் சகிக்க முடியவில்லை "என்ன நடந்திருக்குமென்று எனக்குப் புரிகிறது நீங்கள் சொல்ல வேண்டாம் கதையை விட்டு விடுங்கள்" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். அழுத அவள் கண்கள் கொவ்வை பழம்போன்று சிவந்திருந்தன.

''இல்லை நான் முழுதும் சொல்லிவிடுகிறேன். இது வரை இந்தக் கதையை நான் பலரிடம் சொல்லியிருக்கி றேன். அப்பொழுதெல்லாம் தோன்றியிராத இந்த அழுகை இன்றுமட்டும் ஏன்தான் என் கட்டுப் பாட்டையும் மீறி வருகின்றதோ தெரியவில்லை. கேளுங்கள்''—

''இன வெறியர்கள் என் பெற்றோரைக் கொன்றுவிட்டு என்னை மட்டும் கொல்லாமல் துரத்திக்கொண்டு வந்தனர். அவர்களின் கண்களில் தோன்றிய வெறி — அவர்களின் நோக்கம் என்னதென்பதை எனக்குத் தெளிவு படுத்திக் காட்டியது. என் புனிதத்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள ஓடினேன். மாடியில் இருந்து படிகளால் ஓடித் தப்ப முயற்சித்தேன். ஆனால், விதி! எனது கால் இடறியது, தொடர்ந்து மாடிப்படிகளில் நான் உருண்டு கொண்டிருப் பதுதான் எனக்குத் தெரிந்தது. நான் மீண்டும் கண் விழித்த போது...!''

''மாடிப் படிகளின் கீழே தரையில் கிடக்கவேண்டிய நான், படுக்கையறையில் கட்டிலில் கிடந்தேன். எனது நிலை... எனக்கு உண்மையை வெளிப்படுத்தியது. நான் எதற்காக ஓடித்தப்பிவிட முயற்சித்தேனோ, அது பறிபோய் விட்டிருந்தது. நான் களங்கப்படுத்தப்பட்டது ஒருவரால் மட்டுமல்ல, பலரால் என்பதைச் சொல்லாமலே புரிந்து கொண்டேன். என் உடம்பெல்லாம் புண்ணாக வலித்தது. எனது இடதுகால் அசைக்க முடியாத அளவு வலியெடுத் தது. அது முறிந்துவிட்டது என்பதை அப்பொழுதுதான் என்னால் உணர முடிந்தது. ஆனால் அந்த வலிகள் எல்லா வற்றையும்விட நான் கறைபட்டு விட்டேனே என்ற வேதனை தான் மேலோங்கி நின்றது. இறைவா! என்னையேன் இன் னும் கொல்லாமல் வைத்திருக்கிறாய். படிகளில் உருண்ட போதே என் உயிரைப் பறித்திருக்கக்கூடாதா? என்று வாய்விட்டு அழுதேன். ஆனால் இறைவனின் சித்தம் அதற்கு மாறாக என்னை வாழவைத்து வருத்திக்கொண்டிருக்கிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்றுமட்டும் சொல்வேன். சிங்களவர்கள் எல்லோரும் மிருகங்கள் அல்ல; நல்ல இதயம் படைத்தவர்களும் இருக்கிறார்கள். எத்தனை பேரின் உயிரை, பெண்களின் மானத்தை – தம் உயிரையும் மதியாமல் சிலர் காப்பாற்றி இருக்கிறார்கள் தெரியுமா? அப்படிப்பட்ட நல்லவர்கள் சிலரின் உதவியால் நான் காப்பாற்றப்பட்டேன். தமது சொந்தப் பிள்ளைபோல் என்னைப் பாதுகாத்தார்கள். சிகிச்சை செய்தார்கள். அவர்கள் நடத்தியவிதம் தம்மினத்தவர் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் செய்வதுபோல் தோன்றியது.''

''குருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த என் தம்பியின் படிப்பு அத்தோடு முடிந்துவிட்டது. இந்த உலகுக்காக வாழவேண்டிய அவனுடைய பெரியவாழ்வு என் ஒருத்திக்காக – இந்த மடத்துக்காக வாழவேண்டிய குறுகிய வட்டமாகச் சுருங்கிவிட்டது. இப்போது எனக்கு உள்ள கவலையெல்லாம் ஒன்றுதான். மடமான என்னால் எனது தம்பியினுடைய வாழ்வும், ஆசைகளும் பாழடிக்கப் படுகின்றனவே என்பதுதான். என்னை ஒரு நல்லவரிடம் ஒப்படைத்த பின்னர்தான், மீண்டும் தான் குருமடத்துக்குப் போகவேண்டுமாம். எனக்கோ வயது முப்பத்துநாலு. இந்த வயதில்—இந்த நிலையில் என்னைத் துணிந்து கையேற்க யார் முன்வரப்போகிறார்கள்? எனக்காக வாழும் என் தம்பியின் ஆசை இந்த ஜென்மத்தில் நிறைவேற மாட்டாதுபோல் தெரிகின்றது. என் மன்றாட்டமெல்லாம், இறைவா! சீக்கிரம் என்னை எடுத்துக்கொள். அப்பொழுதாவது என் தம்பியின் எண்ணம் ஈடேறும் என்று வேண்டுகிறேன். அது நிறைவேறாதா என்று ஏங்குகிறேன்.''

மூச்சுவிடாமல் முழுவதையும் கூறிமுடித்த அவள், ''எப்படியிருக்கிறது எனது கதை?'' என்று என்னிடம் கேட்டாள். அவள் பார்வையில் எனது பதிலை எதிர்பார்க்கும் ஏக்கம் தெரிந்தது. அவளின் எதிர்பார்ப்புக்குப் பதிலாக என்னிடம் இருந்து ஒரு பெருமூச்சு மட்டுமே கிளம்பியது. நான் மௌனமாக அங்கிருந்து வெளியேறினேன். அது அவளுக்கு ஏமாற்றமாகவே இருந்திருக்கும் என்னைப்பற்றி அவள் என்ன நினைத்தாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையும் அவளுக்கு வாழ்வளிக்கவந்து அவளின் கதையைக் கேட்டபின்னர் என்ன கருத்துடனே அவளை விட்டு விலகிச் சென்றுவிட்ட பலபேரில் ஒருவனுகவே அவள் என்னையும் நினைத்திருப்பான் என்பதில் மட்டும் ஐயமில்லை. அப்படி அவள் நினைப்பாள் என எண்ணுகையில் என் மனதுள் சற்று அவமானமாகத்தானிருந்தது. நான் எதற்காக அவமானப் படவேண்டும். அவளது அந்தக் கதையைக் கேட்கும் வரை அப்படி ஒரு எண்ணம்—அதாவது இதற்கு முன்னர் அவள் கதையைக் கேட்க வந்தவர்களுக்கு இருந்தது போன்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லையே அவளது அந்தச் சோகக் கதையைக் கேட்டதும் அவர்கள் இதயங்கள் சுருங்கிக் கொண்டன. ஆனால் எனது இதயமோ பரந்து விரிவதுபோன்ற உள்ளுணர்வு எனக்கு ஏற்பட்டது.

சீர்திருத்தம், முற்போக்கு, புரட்சி என்றெல்லாம் மேடைகளில் முழங்கியும் எழுதிக் குவித்துவிட்டு தம்மட்டில் செயற்படுத்த முடியாத-வீரமாகக் குரைத்து கல்லடி பட்டதும் 'வள்'ளென்று தன் ஆற்றுமையை வெளிப்படுத்தி வாலைச் சுருட்டிக்கொண்டு வேலிக்குள் சரணடையும் தெரு நாய்போன்ற போலிகளை மனதில் எண்ணிக்கொண்டேன். தெளிந்த நீரோடையாக இருந்த என் நெஞ்சத்தில் அவள் சொற்கள் எனும் கற்கள் விழுந்தபின்னர் ஒரே குழப்பம்—அலை அலையான சிந்தனைகள் எழுந்து மோதிச் சிதறின.

வீட்டிற்கு வந்த நான் வெகுவாகச் சிந்தித்தேன். துயரத்துக்கு முற்றுப்புள்ளியில்லாது தொடர்ந்து வேதனையுற்று வரும் அந்த நல்ல உள்ளங்களின் நினைவே நெஞ்சில் நிழலாடியது. அக்காவின் பிரிவின் பின்னல் விரக்தியுற்று சேரயமாகிக் கொண்டிருக்கும் என் இளமையைப் பற்றிய நினைவும்கூட எழுந்தது. யாருக்கும் பயனற்றதாகப் பாழ்பட்டு வரும் என் வாழ்வை ஏன் இன்னெருவர் துன்பத்தின் முடிவுக்கு முற்றுப்புள்ளியாக்கக் கூடாது? உண்மைக்காக வாழும் ஒருத்திக்கு வாழ்வு — அதே வேளையில் உலகத்துக்கு ஒரு துறவி—என் ஒருவனல் இரண்டு நன்மைகள் ஏற்படக்கூடுமானல், ஆமாம் இரண்டு வசனங்களுக்கு நான் ஒரு முற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுப் புள்ளியாக ஏன் மாறக்கூடாது? மீண்டும் மீண்டும் சிந்தித்தேன். நான் ஒரு முற்றுப் புள்ளியாக வேண்டும் என்றே என் மனச்சாட்சி வற்புறுத்தியது. நான் தீர்மானித்து விட்டேன். 'எனது முடிவு சரிதானு' என்று கேட்பதுபோல் என் அக்காவின் நிழற் படத்தை நிமிர்ந்து பார்க்கின்றேன். அவள் சிந்திக் கொண்டிருக்கும் அந்த களங்கமற்ற சிரிப்பில் 'ஆம்' என்று சொல்வதுபோன்ற பொருள் எனக்குத் தெரி கின்றது. அந்த வேளையில் பக்கத்து வீட்டில் இருந்து எனக்குப் பிரியமான—என் அக்காளுக்குப் பிரியமான-அவள் அடிக்கடி மீட்டும் அந்த இனிய வயலின் இசை எழுந்து வருகின்றது. அது, அவள் இசை மூலம் எனக்கு அளிக்கும் ஒப்புதல்போலும் 'இந்த இசை மூலம் நான் அவளில் வாழுகிறேனடா தம்பி, நீ அவளுக்கு வாழ்வு கொடு, எனக்கு வாழ்வு தேடித் தந்ததுபோன்ற திருப்தி உண்டா கும்,' என்று அவள் எனக்குச் சொல்லாமல் சொல்லுகி றாள்... நான் சிரிக்கிறேன்.

(1977 ஐப்பசி மாதம் ச. வே. பா. காவலனில் தொடர்ச்சியாக வெளி வந்தது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நெருப்பு

## 1

"டொடக், டொடக், டொடக்" தாளம் தவறாது இசைக்கின்ற வாத்தியம் போன்று சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்த அந்த குதிரையின் குளம்புகள் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தன. அரேபிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்த உயர்ந்த ரகக் குதிரையின் தோற்றமே வெகு கம்பீரமாகக் காட்சியளித்தது. அந்தக் குதிரையில் ஏறுவதற்கு அவன்தான் பொருத்தமானவன் என்று கூறுவது போலிருந்தது அதன்மீது சவாரி செய்துகொண்டிருந்த அவனுடைய தோற்றம். அதன்மீது அவன் இருப்பதால் தான் குதிரை கம்பீரமாகத் தோன்றுகிறதா? அல்லது அந்தக் குதிரைமீது இருப்பதனால் தான் அவன் கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றானா என்று கூற முடியாமல் இருந்தது.

நசரேத்தில் இருந்து யூதேயாவை நோக்கி அவன் புறப்பட்ட பயணம் பாதி வழி தாண்டியாயிற்று. இன்னும் விரைவாகப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தால் இந் நேரம் ஜெருசலேமுக்குள் சென்றிருக்கலாம். ஆனால் நீண்ட தூரப் பிரயாணம் என்பதால் புரவியை விரட்டி எதற்காகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதாலும், பிரசவத்திற்காக தன் அன்பு மனைவி எலிசாவை நசரேத்தில் விட்டு விட்டு வரும் அவனுக்கும் அவளுக்கும் இடையில் இருக்கும் தூரம் ஏன் அவ்வளவு விரைவில் விரிய வேண்டும் என்பதனாலேயும் ஓரளவு வேகத்தில் ஓட்டிவந்தான்.

எலிசாவை நசரேத்தில் விட்டுப் பிரிந்த இரண்டு பொழுதுகள் கழிந்துவிட்டன என்றாலும் அவளுடைய எழில் உருவம் மட்டும் அவனை விட்டுப் பிரிந்து விடவில்லை. ''மார்க்கூஸ், மார்க்கூஸ்'' என்று இடைவிடாது அழைத்து அவனைப் பரவசத்தில் ஆழ்த்தும் அந்தத் தேனிலும் இனிய குரல் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

திருமணம் முடிந்து ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கழிந்த பின்னர் இப்பொழுது தான் அவன் அவளை முதன் முதலாகப் பிரிந்து இருக்கின்றான். அப்பப்பா! அவன் மனைவி எலிசாதான் எத்தனை அழகு. படபடக்கும் அவளது நீளமான நீல விழிகளும், பொன்மயமான பூப் போன்ற கூந்தல் அழகும் அவனை எப்படியெல்லாம் மதி மயங்க வைத்திருக்கின்றன. ரோமை நாட்டுப் பெண்களே பொதுவாக அழகிகள் என்றாலும் அவனைப் பொறுத்தவரையில் எலிசா பேரழகியாகவே அவனுக்குத் தோன்றினாள்.

இறுதியாக அவனிடமிருந்து விடைபெற்ற போது அவளுடைய நீல விழிகள் உகுத்த நீர்த்திவலைகள் அவனை என்னவாகக் கலக்கிவிட்டன. யூதேயநாட்டு மன்னன் ஏரோதனின் படைத் தளபதிகளில் ஒருவனான அவன்; எதற்கும் அஞ்சாதவன் என்று பெயர் பெற்ற அவனுடைய இதயத்தை அவளால் மட்டும் தான் அப்படிக் கலங்க வைக்க முடியும். ராஜபக்தி உடைய அவனால் எத்தனை நாட்களுக்குத்தான் அரண்மனையை விட்டு விலகி நிற்க முடியும். அதுதான் எலிசாவை நசரேத்தில் உள்ள அவள் வீட்டில் விட்டு, வந்த மூன்றாம் நாளே புறப்பட்டு விட்டான். அவளைப் பிரிய மனமில்லாமலே பிரிந்தும் பிரியாதவனாய் வந்து கொண்டிருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அவன் பிரிந்து வந்த போதிலும் உள் மனதினுள் ஒரு ஆறுதல். மரியாளும் சூசையும் அயல்வீட்டில் வாழும் போது அவளைப்பற்றி அவன் கவலை கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. குடும்பம் என்பதற்கு அவர்கள் அல்லவா எடுத்துக்காட்டு. சாதாரண தச்சுத் தொழிலாளியான சூசையும், மரியாளும் நடாத்தும் அந்த இல்லற வாழ்வை யும், அவர்கள் வாழ்வில் நிலவும் அமைதியையும் எந்த ஒரு கோடிப் பிரபுவின் வீட்டில் தானும் காணமுடியாது என்று அவன் தீர்மானித்திருந்தான்.

அவர்கள் தான் எலிசாவின் மீது எத்தகைய அன்பு காட்டினர்கள். மரியாளோ நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த போதும் கூட எலிசாவுக்கு செய்ய வேண்டிய உதவி களையும், கருமங்களையும் ஓடி ஓடிச் செய்ததையும் தன் மனைவி யின் விருப்பப்படியெல்லாம் சூசை அவள் மனம் கோணுத வாறு நடந்துகொண்ட சம்பவங்களையெல்லாம் நினைத்துக் கொண்டான். ''நாங்கள் இருக்கிறோம் மார்க்கூஸ் நீ கவ லைப்படாமல் போய்வா. எலிசாவை எங்கள் பிள்ளையாகப் பார்த்துக் கொள்வோம்'' என்று அவர்கள் கூறிய உறுதி மொழியின் பேரில்தான் அவன் துணிந்து புறப்பட்டான்.

தன் மனைவிதான் பேரழகி என்று அதுவரை பெருமைப் பட்டுக் கொண்டிருந்த மார்க்கூஸ் மரியாளைக் கண்டதும் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான். சூரியனின் முன்பு மெழுகுவர்த்தி போன்றே மரியாளின் முன் எலிசாவின் அழகு அவனுக்குத் தோன்றியது. அவளுடைய அந்த அழ கிற்கு மட்டுமே எத்தனை இளவரசர்கள் போட்டிபோட்டுக் கொண்டு வரக்கூடிய தகுதியிருக்க சாதாரண ஒரு தச்ச னுக்கு தன் வாழ்க்கையைத் தானம் செய்துவிட்ட அவளை எண்ணுகையில் அவன் வியப்பு பன்மடங்காகியது.

முறுக்கேறிய அவரது உடலும் எதையும் ஆழ்ந்து நோக்கும் மனோநிலையும், சாந்தமும், அதே வேளையில் துணிவும் கொண்ட சூசையின் உருவம் அவர் அரச பரம் பரையைச் சேர்ந்தவர் என்று கேள்விப் பட்டபோது—தன் யூகம் சரி என்பதை உணர்ந்துகொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நினைவுகளுடனே வந்துகொண்டிருந்த அவன் ஜோர்தான் நதியின் கிளை ஒன்றை அடையவே, சற்று இளைப்பாறும் எண்ணத்துடன் குதிரையை விட்டு இறங்கி அதற்கும் நீர் காட்டினான். பின்னர் அதனை அந்த மலைச் சாரலில் மேயவிட்டு, அங்கு கிளை பரப்பி நின்ற அத்தி மரத்தின் நிழலில் சற்று நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டான்.

பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவனாக தன்னோடு கூடக் கொண்டுவந்திருந்த ஒட்டகத்தின் தோலினாலான நீர்ப்புட்டியை எடுத்து அதில் இருந்த திராட்சை இரசத்தை கிடந்த வண்ணமே பருகினான். மீண்டும் தோற்புட்டியை அதே இடத்தில் வைத்த அவனுக்கு அப்பொழுது வீசிய தென்றல் மிகவும் இனிமையான சுகத்தைக் கொடுக்கவே கண்களை மெல்ல மூடிக்கொண்டான் — அப்படியே துயின்றும் விட்டான்.

மீண்டும் அவன் கண்களைத் திறந்தபோது தான் வெகு நேரம் உறங்கிவிட்டதையும் மாலை நெருங்கிக் கொண்டிருப்பதையும் உணர முடிந்தது. அப்பொழுது, அவன் கிடந்த மரத்தின் மறுபக்கம் இருவர் பேசிக் கொண்டிருப்பது அவன் காதுகளில் விழுந்தது. தான் விழித்துக் கொண்டதைக் காட்டிக் கொள்ளாதவனாக அவர்களது உரையாடலைக் கேட்கக் கேட்க அவன் குருதி சூடேறிக்கொண்டு வந்தது. கண்கள் சிவந்து முகம் விகாரமடைந்தது. பற்களைக் கடித்துக்கொண்டே தன் உடைவாளைத் தொட்டுப் பார்த்தான்.

## 2

மார்க்கூஸ் வெகுதூரம் சென்று விட்டான். அவனுடைய உருவம் மறைந்து, குதிரையின் குளம்புகள் கிண்டிவிட்ட புழுதிதான் புகைப்படலம் போல் அவள் கண்களுக்குத் தெரிந்தன. ஆனாலும் எலிசா தனது கைகளை அசைப்பதை நிறுத்தவில்லை அசைத்துக்கொண்டே இருந்தாள். அவள் நீல விழிகளில் இருந்து இரு சிற்றாறுகள் பெருக்கெடுத்து ஓடுவதுபோல் நீர் பெருகிக்கொண்டேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மார்க்கூஸ்தான் போய் வெகுநேரமாகிவிட்டதே இன்னும் இப்படியே எவ்வளவு நேரத்திற்கு கையை அசைத்துக் கொண்டு இதிலே நிற்கப்போகிருய் எலிசா'' என்று மரியாள் கேட்டபொழுதுதான் அவளால் தனது சுயநிலைமைக்குத் திரும்ப முடிந்தது அவள் மரியாளைத் திரும்பிப் பார்த்த பொழுது என்றுமே மறையாத அவளுக்கேயுரிய அந்தப் புன்னகையுடன் மரியாள் அவளைக் கனிவோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் ஒரு தாயின் அனுதாபம் தேங்கி நின்றது. ''அக்கா'' என்று விம்மியபடியே எலிசா மரியாளைத் தழுவி அழுதாள்.

''கவலைப்படாதே எலிசா, இல்லற வாழ்க்கையிலே இதுவெல்லாம் சகசம், கணவனை மனைவி சில காலங்களில் பிரிந்து வாழ்வதில்லையா? இதற்காக இப்படிக் குழந்தை மாதிரி அழலாமா?''

''இல்லையக்கா எங்களுக்கு திருமணம் நடந்ததில் இருந்து ஒரு நாள்கூட இவரை நான் பிரிந்து இருந்ததில்லை. இது எனக்கு முதல் அனுபவம். போதாததற்கு அம்மாவோ அப்பாவோகூட இங்கே இல்லை; நான் அநாதை மாதிரி இந்த நிலையில் தனியாக நிற்கிறேனே'! என்று கூறி அவள் குமுறிக் குமுறி அழுதபோது பக்கத்திலே நின்ற சூசையின் கண்கள் கூட கலங்கின.

மரியாள் எலிசாவை மெல்ல அணைத்தபடி வீட்டினுள்ளே அழைத்துச் சென்ருள். தனது இயலா நிலைமையிலும் மரியாள் எலிசாமீது அன்புபொழிந்து பணிபுரிவது பற்றி வியப்படையவில்லை! ஏனென்ருல் அது அவளுக்கு பிறவியிலேயே உண்டான சுபாவம். அவளுடைய மேன்மை அவர்மட்டுமே அறிந்த இரகசியம். மரியாளின் வயிறுசுமந்து கொண்டிருக்கும் குழந்தை தேவகுழந்தையென்பதும்-அதனுல் அவள் தேவதாய் என்பதும்-அவள் தேவதாய் என்பதால் உலகத்துக்கே தாய் என்பதும் அவர் அறிந்துள்ள இரகசியமானதால் அவளுடைய ஒவ்வொரு செயலிலும் தாய்மையின் புனிதம் பிரகாசிப்பதையே அவர் காண்கின்ருர். பிரமச்சாரியாக வாழ்க்கை நடத்தவே தீர்மானித்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த அவரை இத்தகைய ஒரு உத்தமிக்கு கணவனாகும் பாக்கியத்தை கொடுத்து, அதேநேரத்தில் தனது பிரமச் சாரிய விரதத்துக்கும் இடையூறு விளைவிக்காவண்ணம் தனது சேவியப்பணியாக தேவமைந்தனை வளர்த்து எடுக்க வேண்டிய கடமையை தனக்கு தந்துள்ள அந்த இறைவனை அவர் புகழாத நாளே கிடையாது.

நாட்கள் இரண்டு கழிந்துவிட்டன, இந்த இரண்டு நாட்களும் அவள் அவன் சென்றிருக்கக்கூடிய தூரத்தை மனதால் கணக்கிட்டு, 'இப்பொழுது நாயீம், போயிருப்பார் தெகோபபோலி போயிருப்பார், சமாரியா போயிருப்பார்' என்று அவன் போகும் வழியில் இருக்கக்கூடிய இடங்களை யெல்லாம் நினைத்துக்கொள்வாள்,

அவன்தான் எத்தகைய வீரன், பலசாலி, சுமார் ஆறு அடி மதிக்கக்கூடிய அவன் உயரமும், மலைகள்போன்று உயர்ந்த புயங்களும், பரந்த மார்பும், திரட்சியாக உருண்டு திரண்டு அவன் அசைவுகளுக்கேற்ப உருமாறிக்கொண்டி ருக்கும் அங்கங்களும் எவரையும் இலகுவில் வசீகரித்து விடக் கூடியன, அழகு முரட்டுத்தனம், வீரம் அத்தனையும் கொண்ட அவன் இரும்புக்கரங்கள் அவளை அணைக்கும் போதுமட்டும் பூமாலையைத் தழுவுவதுபோன்று தழுவும். அத்தகைய ஒரு மாவீரன் தனக்குத் துணைவனாகக் கிடைத் ததை எண்ணும்போது அவள் நெஞ்சம் பெருமையால் பூரிக்கும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக அவள் அவனோடு நடத்திய இல்லற வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் ஒன்றன்பின் ஒன்றாக சங்கிலிக்கோவைபோல் தோன்றி இத யத்தில் கிளுகிளுப்பை ஏற்படுத்தின. ஆயினும் தான் தாயாகப் போகும் அந்தச்சமயத்தில் அவன் தனக்கு அருகில் இல்லையே என்ற ஏக்கம் அவளை வாட்டியது. அவளுடைய போதாத காலம் அவள் பிரசவத்திற்காகபிறந்த அகம் வந்து இந்த வேளையிலே அவளுடைய பெற்றோர் அங்கு இல்லா மல் போனது. அவர்கள் இவர்கள் வருவதற்கு சில நாட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் முன்னர்தான் தாமாஸ்குபட்டினம் போயிருந்தார்கள். எலிசாவுக்கு மூத்த சகோதரி தாமாஸ்குபட்டினத்தில்தான் வாழ்க்கைப்பட்டிருந்தாள். நீண்ட காலத்தின் பின்னர் போயிருக்கும் அவர்கள் திரும்ப நாட்களாகும். அதுவரையில் பக்கத்து வீட்டாரும், அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களுமான மரியாளிடமும், சூசையிடமும்தான் வீட்டுப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போயிருந்தனர். வீட்டினில் போதிய அளவு கோதுமை இருந்தபடியால் அவள் பாடு சாப்பாட்டிற்குப் பிரச்சனையில்லாவிட்டாலும் துணை இல்லாமல் இருந்ததுதான் அவளுக்கு வேதனையாக இருந்தது.

அந்த நிலைமையில் மார்க்கூஸை அவள் பிரிய விரும்பவில்லை, ஆனாலும் அவனை அவளால் தடுக்கமுடியவில்லை. ஏனென்றால் தனது கடமை விடயத்தில் அவன் அப்படிக் கண்டிப்பானவன். அவனைப் பொறுத்தவரையில் அவனுக்கு மனைவி ஒரு கண்ணென்றால், கடமை மற்றக்கண். இரண்டிற்கும் குறைவரக் கூடாது என்பது அவனது கொள்கை. அல்லாமலும் மன்னன் ஏரோதன் எந்த ஒரு முக்கிய விடயத்தில் ஒரு தீர்மானம் எடுப்பதாக இருந்தாலும் மார்க்கூஸிடமும் ஆலோசனை கேட்கத் தவறுவதில்லை. கடந்த இரு வாரங்களாக அவன் அரண்மனையில் இல்லாதது மன்னனுக்கு ஒரு கைமுறிந்ததுமாதிரி இருக்கும். அவனுடைய அந்த நிலைமையில் அவனைத்தடுக்க முடியாது என்பதாலும் தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக இருந்து அவளைப் பராமரிக்க மரியாளும் சூசையும் இருக்கின்றார்கள் என்ற துணிவினாலுமே அவனும் அவளை விட்டுப்போனான். அவளும் அவனைப் போக அனுமதித்தாள்.

மஞ்சத்திலே கிடந்தபடி பல நினைவுகளிலே கிடந்த அவளுக்கு நானும் உனக்குத் துணையாக இருக்கிறேன், என்னை மறந்துவிடாதே என்பதுபோல் அவள் வயிற்றில் இருந்த குழந்தை ஒரு முறை உருண்டு இடித்தது. அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த இன்ப வேதனையில் அவள் முனகியவளாக புரண்டு படுத்தாள்.

அந்த வேளை "எலிசா" என்று அழைத்தபடியே மரியாள் அங்கு நுழைந்தாள். வழக்கத்தில் அவளின் முகத்தில் பிரகாசிக்கும் அந்தப் புன்னகை மங்கியிருந்தது. அவள் குரலிலும் உற்சாகம் குன்றியிருந்தது.

"என்னக்கா?" என்று கேட்ட எலிசாவுக்கு மரியாள் சொன்ன பதில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. "இனி நான் என்னக்கா செய்ய?" கலங்கினாள், அவளைப் பார்க்க மரியாளுக்கே பரிதாபமாக இருந்தது.

## 3

ஏரோது மன்னனைப் பற்றி எவர் எப்படிக் கூறிய போதிலும், மார்க்கூஸின் மனதிலே அவனுக்குஎன்று தனித்த இடத்தை ஒதுக்கி வைத்திருந்தான். அம்மதிப்பு இன்று நேற்று ஏற்பட்ட மதிப்பல்ல. அதற்குக் காரணமும் உண்டு.

சலமன் கட்டிய ஆலயமும், நகரமும் காலத்துக்குக் காலம் பகைவர்களால் அழிக்கப்பட்டு, மீண்டும் யூதர்களால் கட்டியெழுப்பப்பட்டும் வந்தன. ஆனால் ஏரோதுவின் குடும்பம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதன் பின்னர்தான் மறுபடியும் யெருசலேம் சலமனின் யுகத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

இப்பொழுது யெருசலேம் உரோமாபுரியின் சக்கரவர்த்தி அகஸ்துஸ் சீஷருக்கு சிற்றரசாக விளங்கியபோதும் அதன் முன்னேற்றமும் புது வளர்ச்சியும் தடைப்படவில்லை.

கிரேக்கரிடம் இருந்த ஆதிக்கம் யூத மக்களால் முறியடிக்கப்பட்டாலும் யூதரிடமிருந்த ஒற்றுமையின்மையின் காரணத்தால் ரோமானியரிடம் மீண்டும் நாட்டைப் பறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கநேரிட்டது. ஆனால், கிரேக்கரைப்போல் பல தெய்வ வழிபாட்டைப் புகுத்தி, தமது கலாச்சாரத்தை நுழைத்து, யூத மதத்தை அழிக்கும் முயற்சியில் ரோமானியர்கள் ஈடுபடவில்லை. என்றாலும் ரோமானியர்கள் சிலகாலம் யெருசலேமையும் ஆண்டு ஆலயத்தின் திரவியங்களைச் சூறையாடிய பின்னர் ஏரோதனின் தந்தையாகிய அந்திப்பத்தேரிடம் அரசுரிமையை வழங்கினர். இவன் இதுமேயன் என்பதனால் யூதர் இவனைப் பாதியூதன் என்று பரிகாசம் செய்வதுமுண்டு.

அந்திப்பத்தேரின் மைந்தனான ஏரோது ஆட்சி ஏற்ற பின்னர் யெருசலேம் ஒரு சிற்றரசு என்று கூறினாலும், தோற்றத்தில் பேரரசுபோன்றே காட்சியளித்தது. பெரும் பெரும் மாளிகைகளும், மதில்களும், அந்தோனியாக் கோட்டை, பெரிய அரங்கசாலை முதலியன இவன் காலத்தில் கட்டப்பட்டவையே, இவற்றையெல்லாம்விட ஏரோதன் காலத்தில் யெருசலேம் தேவாலயம் சலமன் கட்டியதைப்போன்று பொன்னாலும் வெள்ளைக் கற்களாலும் கட்டப்பட்ட அந்த ஒன்றிற்காகவே ஏரோதன்மீது மார்க்கூஸ் அத்தனை அன்பைச் செலுத்தினான்.

ஆனால் அத்தகைய ஒரு மன்னனை, அத்தி மரத்தடியில் இருந்த இருவரும் இகழ்ந்து பேசியதை அவனால் எப்படிப் பொறுத்துக்கொள்ளமுடியும். அவர்களில் ஒன்று பெண், மற்றது ஆண். பேச்சில் இருந்து அவர்கள் இருவரும் இடையர்கள் என்பதைப் புரிந்து கொண்டான்.

''ஏரோதன் என்னவோ கிரேக்க நாகரிகத்திலும், கிரேக்க தத்துவங்களிலும் பற்றுக்கொண்டவன் என்பதற்காக அப்படிப் பேசுவதா?'' அப்பெண் பேசினாள்.

''யூதர்களின் கலாச்சாரத்தையும், சமயத்தையும் அழிக்க முன்வந்த கிரேக்க நாகரிகத்தை ஏரோது போற்றுவதால் அவனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''நினைப்பதென்ன? இவனுடைய அப்பன் அரை யூதன். பரம்பரைக்குப் பரம்பரை உண்மையான யூத இரத்தம் மறைந்துகொண்டுதானே போகும்'' இது ஆண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் சொன்னீர்களே அதுதான் உண்மை. எகிப்தியர் மாறி கிரேக்கர், கிரேக்கர் மாறி ரோமர் இப்படியாக எங்கள் யூதகுலம் அடிமை இனமாகவே காலாகாலமும் வாழ்ந்துகொண்டிருக்க வேண்டியதுதானு?''

''நீ இருந்துபார் யூத மக்கள் எதிர்பார்க்கும் மெசியா வெகுவிரைவில் பிறக்கத்தான் போருர். இந்த அதிகார ரோமர்னியர், அடிமை ஏரோது எல்லோரையும் விரட்டி அடிச்சிட்டு, தன்னுடைய இராட்சியத்தை நிலைநாட்டத் தான் போகிருர். இஸ்ராயேலரின் பரம்பரை மீண்டும் தாவீதின் மண்ணை ஆளத்தான் போகிறது.''

இத்தனைக்கும் பொறுமையாக இருந்த மார்க்கூஸ் பொறுமை இழந்தவனுக தனது உடைவாளை உருவிக் கொண்டு துள்ளி எழுந்து அவர்கள் முன்னே பாய்ந்தான். அவர்கள் இருவரும் அவனைக் கண்டனர் என்ருலும் சற்றும் அச்சம் அற்றவர்களாக அவனது முகத்தை ஊடுருவிப் பார்த்தனர், பின்னர் தாங்கள் ஒருவர் ஒருவரைப் பார்த்துக் கொண்டனர்.

''துரோகிகளே! உண்ட வீட்டிற்கே துரோகம் செய்கின்றீர்களா? மன்னன் ஏரோதையா மானபங்கமாகப் பேசினீர்கள் உங்களை என்ன செய்கின்றேன் பாருங்கள்'' என்று தன் வாளை ஓங்கினுன். மறுகணம்—அடக்கி வைத்து வைத்திருந்த சிரிப்பை அடக்க முடியாதவர்கள் போன்று இருவரும் 'கொல்' என்று சிரித்தனர். தனது இந்த ஆத்திரத்தையும் அசட்டைசெய்து சிரிக்கும் அவர்கள் முகத்தை அவன் கூர்ந்து நோக்கினுன். மறுகணம் வாளை ஓங்கிய அவனது கை தாழ்ந்தது. முகம் ஏதோ செய்யக் கூடாததைச் செய்ய முற்பட்டு விட்டதுபோன்று வியப்பாலும் வெட்கத்தாலும் சுருங்கியது.

''எனது வாழ்த்துக்கள். மார்க்கூஸ், உனக்கு நடந்த பரீட்சையில் நீ வென்றுவிட்டாய்'' என்முன். இடையனுக் காட்சியளித்த அந்த மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கூஸ் அப்பொழுதும் வியப்பு நீங்காதவனாக "இது என்ன வேஷம் தளபதியாரே, இவள் அரண்மனை நாட்டியக்காரி சாராள் அல்லவா?"

தலைமைத் தளபதி கோர்வீனனும், அரண்மனை நாட்டியக்காரி சாராளும் எதற்காக இடையர் வேடம்பூண்டு வந்து தன்முன் நாடகமாடினார்கள் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"கவலைப்படாதே மார்க்கூஸ். மன்னன் கிரேக்க நாகரிகப் பிரியன் என்பதாலும், ரோமானிய சிற்றரசன் என்பதாலும் அவனுக்குச் சில புதிய பகைவர்கள் உற்பத்தியாகியிருக்கின்றார்கள். மெசியா விரைவில் பிறப்பார்; மன்னன் ஆட்சியைக் கவிழ்ப்பார் என்ற நம்பிக்கை அவர்களிடம் பலமாக வேரூன்றியிருக்கின்றது. இந்த நம்பிக்கை மாயத்துள் எமது அரண்மனைப் பிரபுக்கள் சிலரும் சிக்கிக்கொண்டிருக்கின்றார்கள். இதன் பொருட்டு மன்னன் இப்படி நடத்திய பரீட்சைகளில் சிலர் சிக்குண்டு நீ இல்லாத நாட்களில் மரண தண்டனையும் பெற்றுவிட்டார்கள். அந்தப் பரீட்சை நாடகம் தான் உன் முன்னாலும் நடத்தப்பட்டது. நீ வென்றுவிட்டாய். ராஜபக்தி மிக்கவன் என்பதைக் காட்டிவிட்டாய்."

மன்னன் ஏரோதனைத் தந்திரத்தில் நரிபோன்றவன் என்று மற்றவர்கள் கூறுவது எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்து கொண்டான். என்றாலும் மன்னன் தன்னையும் சந்தேகித்தானே என எண்ணும்போது அவனுக்கு வேதனையாகவே இருந்தது. இவனது ஏமாளித்தனத்தைக் கண்ட சாராளின் சிரிப்பு இன்னும் அடங்கவில்லை. அப்பொழுது—

ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீளாமல் இருக்கும் அவனுக்கு மேலும் அதிர்ச்சி கொடுப்பது போன்று உரோமைப் பேரரசின் முரசம் முழங்கியது. முரசு ஒலி எழுந்த திசைக்கு மூவரின் பார்வையும் திரும்பின. மறுகணம் மூவரும் தத்தம் புரவிகளில் ஏறி சப்தம் வந்த திசையை நோக்கி விரைந்தனர். ரோமானியப் பேரரசின் புதிய கட்டளை என்னவென்பதை அறியும் ஆவலே மூவரிடமும் நிறைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

பெற்ருேரும் இல்லை, கணவனும் இல்லை, தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் விளங்கி ஆதரவு தந்து கொண்டிருந்த சூசையும் மரியாளும் தன்னைத் தனியே விட்டுப் போகப் போகின்ருர்கள் என்ற செய்தி எலிசாவுக்குப் பேரிடியாக அமைந்திருக்கும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லைதான்.

ஆனாலும் என்ன செய்வது, அவர்கள் போயே ஆக வேண்டும். ஏனெனில் அது அரசகட்டளையாயிற்றே. ரோமானியப் பேரரசன் அகஸ்துஸ்ராஜனிடம் இருந்து கட்டளை பிறந்திருக்கிறது; குடிசனமதிப்பு எடுக்க வேண்டியுள்ளதால் அவரவர் தான் பிறந்த—தமது பாரம்பரிய கோத்திரத் தொடர்புடைய நாடுகளுக்குத் திரும்ப வேண்டுமாம். அதன் பேரில் தாவீதின் கோத்திரத்தைச்சேர்ந்த சூசையும் மரியாளும் தாவீதின் நகரான எருசலேமைச் சார்ந்த பெத்லகேமுக்கு போயே ஆகவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை.

ஆனால், இந்த நிலைமையில் புறப்படுவதை மரியாளோ, சூசையோ விரும்பவில்லை. அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, துணையாருமற்றவளாக இருக்கும் எலிசாவை எப்படித் தனியே விட்டுப் போவது என்பது. அடுத்தது பேறு காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கையில் மரியாளை எப்படி நெடும்பயணம் கொண்டு போவது என்பதும். எலிசாவைத் தங்களுடன் அழைத்துச் செல்லவும் முடியாது. ஏனெனில் அவள் நசரேத்தூரை சேர்ந்தவள். எனவே குடிக் கணக்கெடுப்பிற்கு நசரேத் ஊரிலேயே நிற்கவேண்டியவள். ஆகவே அனாதரவான நிலையில் அவளை விட்டுப் போகவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் எலிசாவே அவர்களுக்கு ஆறுதல் கூறவேண்டி ஏற்பட்டது.

நடப்பது நடக்கட்டும்; எல்லாம் இறைவன் விட்டவழி என்று துணிந்தவளாக எலிசா கூறினாள். ''அக்கா எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக நீங்கள் அரசகட்டளையை மீறவேண்டாம். குடிசன மதிப்புச் செய்தி இந்நேரம் அம்மா அப்பாவுக்கும் கிடைத்திருக்கும். என் அக்காளும் கூடப் புறப்பட்டு வருவார்கள். இன்னும் சில தினங்களில் அவர்கள் வந்துவிடக்கூடும். அது வரையில் தானே எனக்குத்துணை வேண்டும்.''

எலிசா கூறிய இந்தவார்த்தைகள் மரியாளுக்கும் சூசைக்கும் ஓரளவு ஆறுதலைக் கொடுத்தன. அத்தோடு மரியாளும் சூசையும் பெத்தலேகம் போய் மார்க்கூஸுக்கு எலிசாவின் தனிமையைப்பற்றித் தெரிவிப்பதோடு, மார்க்கூஸின் வீட்டிலேயே அவர்கள் தங்கமுடியும் என்றும் எலிசாள் கூறினாள்.

எலிசாளின் இந்த ஆலோசனை சூசைக்கும் மரியாளுக்கும் திருப்தியளிப்பதாக இருந்தது. மார்க்கூஸுக்கு அளித்த வாக்கின்படி எலிசாளுக்கு பிரசவம்வரை துணையாயிருக்க முடியாமல் போனாலும் செய்தியை மாக்கூஸுக்கு அறிவிக்க சந்தர்ப்பம் கிடைத்ததுடன் யூதேயாவில் தங்குவதற்கும் மரியாளின் பிரசவத்திற்குத் தகுந்த இடம் கிடைத்ததாகவும் இருக்கும் என்றும் தீர்மானித்தார்கள், தாங்கள் யூதேயாபோய்ச் சேர்வதற்கு முன்னர் எலிசாளின் பெற்றோரும் திரும்பிவிடுவார்கள். அதுவரை எலிசாளுக்கு துணையாக ஒரு வயோதிப மாதை அமர்த்துவது என்று ஏற்பாடாயிற்று. அதன்படி மறுநாள் மரியாளுக்கு நன்கு அறிமுகமானவளும், தூரத்து உறவினளுமான சீலியா எனும் ஒரு வயோதிப மாதை எலிசாவுக்குத் துணையாக ஏற்பாடு செய்தனர்.

அதற்கு அடுத்தநாட் காலை மரியாளும் சூசையும் கொண்டு செல்லக்கூடிய சுமையளவு பொருட்களை எடுத்துக் கொண்டு யூதேயா நோக்கிப் பயணமாகினர். நிறைமாதக் கர்ப்பிணியான மரியாள் நெடுந்தூரம் நடந்து கொள்ள மாட்டாள் என்பதற்காக கழுதையொன்றை ஏற்பாடு செய்து கொண்டார். அவர்கள் எலிசாவிடம் விடை பெற்றபொழுது எலிசாளினால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை, அழுதுகொண்டே விடை கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மறுமுறை நாம் இருவரும் சந்திக்கும்போது ஆளுக்கொரு குழந்தையோடு சந்திப்போம்' என்று மரியாள் நகைச்சுவையோடு சொன்னதைக்கூட அவளால் கிரகிக்க முடியவில்லை. அவர்கள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

அன்று இரவு எலிசாளின் கண்களை தூக்கம் தழுவ மறுத்தது. அவளுக்கு ஏற்பட்டுவிட்ட தனிமையை எண்ணி அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டாள். தனது நிலைமையை நினைத்துப் பார்க்கையில் வாழ்க்கையிலே ஒரு விரக்தியும் வெறுப்பும் அவளுக்கு ஏற்பட்டது.

அந்த நிலையிலும் மார்க்கூஸைப் பற்றிய நினைவுகள் அவளுக்கு இனிமையாகவே இருந்தன. ஆண்மையும், வீரமும் நிறைந்த அழகனுகிய மார்க்கூஸைப்போன்ற எத்தனையோ யூதர்கள் பெரும்பாலும் ஒழுக்கத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவே இருந்தனர். ஆனல் அவர்கள் பண்பாட்டைப் பொறுத்தவரை அது ஒழுக்கக்கேடாகக் கருதப்படுவது இல்லை. ஒருத்திக்கு ஒருத்தன் என்ற மரபு இருந்ததே ஒழிய ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற வழக்கம் கிடையாது. ஒருத்தனுக்கு பல பெண்களும், ஏன் அடிமைப் பெண்களைக்கூட பெண்டாளும் பண்பும் இருந்தது. ஆனல், யூத ஆண்களில் மார்க்கூஸ் முற்றிலும் மாறுபட்டவன். எத்தனையோ அரண்மனைப்பெண்கள் தங்கள் வலைக்குள் அவனைச்சிக்கவைக்கமுயற்சி செய்தும் அவனிடம் எதுவும் பலிக்கவில்லை. அவர்களில் அரண்மனை நாட்டியக்காரி சாராள் எவ்வளவு சாகஸங்கள் புரிந்தாள் என்பதும், அவனிடம் அவள் தோல்வி கண்டாள் என்பதும் எலிசா அறிந்த விடயம் இப்படி யூத ஆண்களுக்கிடையிலே, மார்க்கூஸ் தனித்துவம் பெற்று விளங்கியமையே எலிசாவுக்குப் பெருமையாக இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் எலிசா அவனிடம் கூறியிருக்கிருள். ''மார்க்கூஸ் நீங்கள் எனக்கு ஒருத்திக்கே உரியவர் என்பதிலே எவ்வளவு பெருமைப்படுகிறேன் தெரியுமா? நீங்கள் மட்டும் மற்ற ஆண்களைப்போல ஆகிவிடாதீர்கள். அதை என்னுல் தாங்க முடியாது. நீங்கள்மட்டும் அப்படி மாறினீர்கள் என்ருல் பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உயிர்வாழவே மாட்டேன்'' என்று கூறியிருக்கிறுள். அவனும் அதன்படியே அவளுக்குத் துரோகம் செய்வதில்லை யென்று வாக்குக் கொடுத்து மிருக்கிறுன்.

இந்த நினைவுகளில் கிடந்தவள் எப்பொழுது கண்ணு றங்கினுளோ தெரியாது மறுநாள் பொழுது விடிந்ததும் உறங்கிக் கொண்டு கிடந்தவள், அவள் வயிற்றில் ஈட்டி கொண்டு குத்துவதுபோன்ற உணர்வு ஏற்பட்டு திடுக்கிட்டு அலறியபடியே எழுந்தாள். அவள் வயிற்றில் ஏற்பட்ட அந்த வலி அவளின் தாய்மைப்பேற்றை முன்னறிவித்தது. அவள் இடுப்புவலியால் துடித்தாள். எதிர்பாராத இந்த வேளையில் ஏற்பட்டு விட்ட பிரசவத்தின் அறிகுறியைக் கண்டு துணைக்கு இருந்த கிழவி சீலியா விழித்தாள்.

## 5

திடீரென்று ஏற்பட்டு விட்ட பிரசவ வேதனை அவர்கள் இருவரையும் திகிலடைய வைத்தது. என்ருலும் அனுபவ சாலியான கிழவி சீலியா சற்று நேரத்தில் தன்னைச் சுதா கரித்துக் கொண்டதுடன் எலிசாவைத் தைரியப்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டாள்.

உண்டான பிரசவ வேதனையின் பலன் உடன் கிட்ட வில்லை யென்ருலும் இரண்டு தினங்களின் பின்னரே பிர சவம் நடைபெற்றது. அதற்கிடையில் எலிசாவுக்கு அமை தியும், மகிழ்வும் தரக்கூடிய விடயமாக, தமாஸ்குஸ் சென் றிருந்த அவள் பெற்றேரும், அவள் சகோதரியும் வந்துவிட் டார்கள். அவர்கள் வந்த பின்னர் அவளுக்கு இருந்த ஒரே குறை இந்த வேளையில் மார்க்கூஸ் அவள் பக்கத்திலே இல் லையே என்பதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கூஸின் பிரதிபிம்பமாகப் பிறந்திருக்கும் தன் மகனைப் பார்க்கும்போது அவளுக்குப் பெருமையாக இருந்தது. எதிர்காலத்தில் தன் மகனும் மார்க்கூஸைப் போலே அழகனாகவும், ஆண்மை நிறைந்த வீரனாகவும் திகழ்வான் என்பன போன்ற நினைவுகளை தன் எண்ணத்தே தேக்கி மகிழ்ந்தாள். இந்த நினைவுகள் எழும் ஒவ்வொரு பொழுதும் மார்க்கூஸ் தன் அருகே இல்லாத உணர்வு அவளுக்கு அழுகையையே வரவழைத்தது. ஆனாலும் அவள் நெஞ்சத்தில், மார்க்கூஸ் வெகு விரைவில் வந்துவிடுவான் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது. ஏனெனில் கால்நடையாகச் செல்லும் மரியாளும் சூசையும் எப்பொழுது யூதேயா போய்ச் சேர்வார்களோ — அவர்கள் சேதி சொன்னதும் புறப்படக்கூடிய விதத்தில் ராஜாங்க அலுவல்கள் இடம் கொடுக்குமா என்றெல்லாம் தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டாள்.

குழந்தை பிறந்த நாற்பதாம் நாள் யூத வழக்கத்தின்படி செய்யவேண்டிய சுத்திகரச் சடங்கு வேறு உண்டு. அத்தோடு ஆலயத்துக்குச் சென்று இரண்டு சோடி மாடப் புறுக்களை காணிக்கையாகவும் கொடுக்க வேண்டும். இந்தச் சடங்கு முறைகளைப் பற்றி அவருக்குத் தெரியாதா? அம்மாவும் அப்பாவும் இல்லாத வேளை — மரியாள் அக்கா கூட பக்கத்திலே இல்லாமல் வந்துவிட்டாள் என்பதை அறிந்ததும் எத்தகைய அவசர அலுவல்கள் இருந்தாலும் போட்டு விட்டு உடனே வந்துவிடுவார் என்று தன்னம்பிக்கையை மேலும் வளர்த்துக் கொண்டாள்.

ஆனால் நாட்கள் நகர்ந்துகொண்டேயிருந்தன. காணிக்கை செலுத்த வேண்டிய நாற்பதாம் நாளும் கடந்து விட்டது. அவன் வந்தபாடில்லை; எந்தக் கணத்திலும் வந்துவிடலாம் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த நம்பிக்கை தளரத் தொடங்கி ஒருவேளை வரமாட்டாரோ என்ற அவநம்பிக்கை அவள் மனதில் வேர்விடத் தொடங்கியது. "இதற்குள் எப்படியும் மரியாளும் யூதேயா போய்ச் சேர்ந்திருப்பார்கள், அவரிடம் சொல்லியிருப்பார்கள்; அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்துமா அவர் இன்னும் வரவில்லை — ஒருவேளை அவர்கள் இன்னும் போய்ச் சேரவில்லையோ?''

அப்படி அவள் எண்ணுவதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. மரியாளோ நிறைமாதக் கர்ப்பிணி. பேறு காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவள். ஒருவேளை பிரயாணத்தின் இடையிலேயே மரியாளுக்கு பிரசவம் நடந்திருந்தால் அவர்கள் எப்படி அவருக்குச் சேதி சொல்லியிருக்க முடியும். அப்படித்தான் நடந்திருக்கும் என்று மீண்டும் தன் மனத்தைத் தேற்றிக் கொண்டாள். ஆனால் அவள் எதிர் பார்த்ததற்கு மாறாக — நினைத்ததற்கு எதிராக எல்லாம் யூதேயாவில் நடந்துகொண்டிருந்தது.

* * *

நசரேத்தை விட்டுப் புறப்பட்ட சூசைக்கும், மரியாளுக்கும் வழி நெடுகிலும் எலிசாவைப் பற்றிய நினைவாகவே இருந்தது. தன் மனைவி மரியாள் கர்ப்பவதியாய் இருந்தும் கூட அதைப்பற்றி சூசை அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில், தன் மனைவியின் வயிற்றில் வளர்ந்து வருவது தெய்வீகக் குழந்தை. அது எங்கு — எப்படிப் பிறக்கவேண்டும் என்பது அந்தக் குழந்தைக்கே தெரிந்த விடயம். அது தெருவிலும் பிறக்கலாம். மாளிகையிலும் பிறக்கலாம். ''உமது விருப்பப்படியே ஆகட்டும்'' என்று குழந்தை தரித்த அன்றே மரியாள் வாக்குக் கொடுத்து விட்டாளே, பிறகு எதற்காக அவர் கவலைப்பட வேண்டும். வெகு விரைவில் யூதேயாவை அடைந்து எலிசாவைப் பற்றிய செய்தியை அறிவிக்க வேண்டும் என்று தீர்மானித்தவர்களாக இருவரும் பிரயாணத்தைச் சற்று விரைவாகத் தொடர்ந்தனர்.

மரியாளின் அந்த நிலையிலும் அந்த கஷ்டமான, துரித பயணத்துக்கு அவளும் ஒத்துழைத்தாள். ஏனெனில் பிறருக்காகத் தன் துன்பங்களையெல்லாம் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளும் பண்பு அவளது பிறப்போடு கூடிய ஒன்றாக இருந்தது. இடைவழியிலே அவர்களோடு வேறு சில பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாணிகளும் சேர்ந்து கொண்டார்கள். எல்லோரும் அரசன் கட்டளைப்படி தத்தம் ஊர்களுக்குச் செல்பவர்களாகவே இருந்தனர். படிப்படியாக அவர்கள் யூதேயாவை நெருங்க நெருங்க நைன், சமாரியா, சிக்கார், சிக்கேம், அரிமத்தேயா, எப்ராசிம், பெத்தால் போன்ற நகரங்களில் இருந்து வந்த பிரயாணிகளும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர்.

அதேவேளை ஜெருசலேமிலும், அதற்குத் தெற்கேயும் இருந்தும் நசரேத்தையும் அதை அண்மித்த நகரங்களையும் நோக்கி மக்கள் சென்று கொண்டுமிருந்தனர். அதனால் அவர்கள் பிரயாணம் சோர்வில்லாமல் ஏதோ பாஸ்கா பண்டிகைக்குச் செல்லும் யாத்திரை போன்று கலகலப்பாகவும் விளங்கியது.

மரியாளும் சூசையும் யூதேயாவை அடைந்ததும் முதல் வேலையாக மார்க்கூஸின் அரண்மனையைத் தேடியே சென்றனர். அவன் அரண்மனையைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கஷ்டமாக இல்லை. ஏனெனில் அந்த அளவுக்கு அவன் பெயர் பிரசித்திபெற்றிருந்தது. அரண்மனையை அவர்கள் அடைந்தபோது பொழுது சாயத் தொடங்கிவிட்டது. மரியாளை அரண்மனைக்கு வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்ற சூசை உடனேயே திரும்பி வந்தார். அவர் முகம் வழக்கத்திற்கு மாறாகச் சிவந்திருந்தது. கண்களில் கோவைப் பழத்தைப்போல செம்மை படர்ந்திருந்தன. சூசையை என்றுமே இந்த நிலையில் கண்டிராத மரியாள் ஏதோ விபரீதம் நடந்து விட்டது என்பதை ஊகித்துக் கொண்டாள். சூசை வந்த விரைவிலேயே "வா மரியாள் போவோம்" என்று சொன்ன விதத்தில் கடுமை தொனித்தது. மரியாள் மறுமொழி ஏதும் பேசாதவளாக, ஏன் என்றும் கேட்காமல் அவரைப் பின் தொடர்ந்தாள். சூசையின் கோபம் நியாயமற்றதாக இருக்காது என்று அவளுக்குத் தெரியும். ஆனால் இந்த நிலைமையில் அவள் அதையெப்படி அவருக்குத் தெரிவிப்பது? கட்டாயம் தெரிவித்துத்தானே ஆகவேண்டும். அவள் அதை அவருக்குக் கூறியபோது சூசை திகைப்பில் கல்லாய்ச் சமைந்தார். அவர் கோபம் எங்கேயோ பறந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

ரோமானியப் பேரரசின் பேரிகை முழக்கம் கேட்டுக் கோர்வீனனுடனும் சாராளுடனும் சென்ற மார்க்கூஸின் வாழ்க்கையில் தொடர்ந்து அவன் நினைத்தேயிராத மாற்றங்கள் பல நிகழ்ந்துவிட்டன.

முரசறைந்தவர்களின் செய்தியின்படி அகஸ்துஸ் ராயனின் கட்டளைப்படி குடிசன மதிப்புக்காக அனைவரும் தத்தம் பூர்வீக நகரங்களுக்குத் திரும்பவேண்டும் என்பதை அறிந்ததன் பின்னர் செய்தி ஒன்றும் பயங்கரத்துக்குரியதாக இல்லையென்று தன்னைத் தேற்றிக்கொண்டான். ஆனால் அவனது ஆண்மைக்கும் தைரியத்துக்கும் சாராள் சவால் விட்டுக்கொண்டிருக்கின்றாள் என்பதை அவன் அப்பொழுது உணரவில்லை.

ஆமாம் நீண்ட காலமாக மார்க்கூஸின்மேல் தனக்கு உண்டான தாகத்தைத் தீர்ப்பதற்கு அவள் வலைவிரித்துக் கொண்டிருந்தாள். அவன் பஞ்சு — அவள் நெருப்பு — இப்பொழுது இரண்டும் பக்கத்தில். நெருப்பில் இருந்து பஞ்சாகிய அவனைக் காப்பாற்றக்கூடிய நீராகிய எலிசா இப்பொழுது அவன் பக்கத்தில் இல்லை. சாராள் எனும் நெருப்பு மெல்லமெல்ல அவன்மீது தாவத்தொடங்கியது.

இதற்கு வசதிசெய்து கொடுப்பதுபோல் கோர்வீனனும் ஜெருசலேமை அன்மித்ததும் தான் பெத்பாகே நகருக்கு அவசர அலுவலின் நிமித்தம் செல்ல வேண்டியிருப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டான்.

மார்க்கூஸுடன் தனிமையில் இருந்த சாராள் இப்பொழுது தனது சாகஸ வலையைச் சாதுரியமாக வீசினாள். ''மார்க்கூஸ் உங்களுக்குத்தான் அரண்மனையில் இப்பொழுது என்ன அவசர அலுவல், வாருங்கள். எங்கள் மன்னர் புதிதாக அமைத்திருக்கும் அரங்கசாலையையும், அந்தோனியாக் கோட்டையையும் பார்வையிட்டுவிட்டுச் செல்வோம்

என்று அழைத்தாள். அவள் அழைப்பை அவன் விரும்ப வில்லை. என்றாலும் உள்ளத்தே ஏதோ ஒரு உந்தல் அவனை அதற்குச் சம்மதிக்க வைத்தது.

எலிசாவுக்கும் மார்க்கூஸுக்குமிடையே அன்பு மலர்ந் ததே அந்த அரசாங்கசாலையில் வைத்துத்தான், இரண்டு வருடங்களின் முன்னர் பாஸ்கா பண்டிகைக்கு அவன் வந்திருந்தபோதுதான் அவர்களிடையே அன்பு மலர்ந்து, அது திருமணமாகக் காய்த்தது. இன்று குழந்தைக் கனி யைத் தருமளவுக்கு வளர்ந்தது.

அந்த அரங்கசாலையில் அன்று அவனும் எலிசாளும் சுற்றியலைந்த காட்சியையும், அதன் படிக்கட்டுகளில் கொட்டி மகிழ்ந்த காதல் மொழிகளையும் எண்ணுகையில் அவன் உள்ளத்தில் அவனையறியாமலே கிளர்ச்சிகள் சில. அன்று எலிசாளும் அவனும், இன்று எலிசாளுக்கு பதிலாக சாரான், ஏதோ நினைத்துக் கொண்டவனாக சட்டென்று சாராளை திரும்பிப் பார்த்தான், அவள் அப்பொழுது அவ னையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் இதயம் வேகமாக அடித்தது.

அன்றைய நாகரிகத்தின்படி ஒருத்தனுக்கு பல பெண் கள் என்பது கௌரவம் என்று எண்ணிய காலம். அந்த நாகரிகத்தில் அவன் இதுவரை விழாவிட்டாலும் அதே நாகரிகச் சூழலில் தானே வாழ்கின்றான். நாகரிகம்தானே எனும் போர்வையில் அந்தப் பெலவீனம் அவனை ஆட் கொள்ளத் தொடங்கியது. அவன் பெலவீனத்தை நெருப் பாக வளர்க்கும் முயற்சிக்கு அவள் கண்கள் கணை எறிந்து கொண்டிருந்தன.

'அவன் அவளுக்கு மட்டும்தான் உரியவன் என்பதில் பெருமை கொண்டிருந்த எலிசாவின் பெருமை சிறிது சிறி தாகக் கலைந்து கொண்டிருந்தது. அவனுடைய அன்பில் இன்னுமொருத்திக்குப் பங்கு கிடைக்குமானால் உயிர் வாழ மாட்டேன் என்று எலிசாள் சொல்லியிருந்த வார்த்தைகள் இவன் செய்துகொடுத்த சத்தியம் எல்லாம் அவன் மனதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மறைந்துகொண்டிருந்தன. அவன் கொள்கைகள், இலட்சியங்கள் அனைத்தும் தளர்ந்து கொண்டிருந்தன. அதேவேளையில் சாராளின் கையைப் பிடித்துக் கொண்டி டிருந்த அவன் பிடி இறுகிக்கொண்டிருந்தது...

எலிசாவைப் பிரிந்து எப்படி வாழப்போகிறேம், தனிமை வாட்டப் போகின்றதே என்று ஏங்கியபடி நசரேத்தில் இருந்து புறப்பட்டுவிட்ட அவனுக்கு அவள் இல்லாத குறையே தெரியாதபடி நடந்து கொண்டாள் சாராள். யூதேயா வந்து சேர்ந்த இந்த சில தினங்களில் அவன்தான் எப்படி மாறிவிட்டான்! அரண்மனைக்குப் போகும் சமயங் களில் போக மீதிநேரமெல்லாம் சாராள் பொழிந்த அன் பிலும் திராட்சை மதுவிலும் மயங்கிக் கிடந்தான். வாழ்க் கையிலும் வேறுபட்ட சுவைகள் தேவைதான் என்று மனம் அன்று நினைக்கத் தொடங்கியிருந்தது.

அப்படிக் கழிந்த நாட்களில்தான் அன்று ஒருநாள் யூதேயாவை வந்தடைந்த சூசையும், மரியாளும் எலிசாவைப் பற்றிய செய்தியை மார்க்கூஸுக்கு அறிவிக்கவும் எலிசாள் கூறியபடி மார்க்கூஸின் வீட்டிலேயே தங்கலாம் என்ற எண்ணத்துடனும் வந்திருந்தார்கள்.

எதனையும் சிந்தித்து நிதானமாகச் செய்யும் சூசை; மரியாளை வெளியே நிறுத்திவிட்டு தான்மட்டும் மார்க்கூஸின் அரண்மனைக்குள் சென்ருர்.

மார்க்கூஸின்மீது சூசை நன்மதிப்பே வைத்திருந்தார்: நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகத்தில் மூழ்கிப் பாழாகிக் கொண்டிருக்கும் அன்றைய இளைஞர் சமுதாயத் தில் மார்க்கூஸ் ஒரு அதிசயப்பிறவி. தன் மனைவியைத் தவிர மற்றவரை ஏறெடுத்தும் பார்க்காத பண்புடையவன் என்று மரியாள் மூலம் எலிசாள் சொல்லிக் கேள்விப்பட்டி ருக்கிருர். ஆனுல் அவர் கேள்விப்பட்டதற்கும் எதிர்பார்த் ததற்கும் மாருன நிலையில் மார்க்கூஸைக் காண நேரிட்டது. சூசையின் மனத்தில் சொல்ல முடியாத வெறுப்பையும் கோபத்தையும், பாவம் எலிசாள் ஏமாற்றப்படுகிருள் என் பதை நினைக்கும்போது வேதனையும் ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உள்ளே சென்றபோது அவரை, ஒரு ஊழியக்காரி தடுத்து விசாரித்தாள். தான் நசரேத்தூரில் இருந்து வருவதாகவும், மார்க்கூஸின் மனைவியிடம் இருந்து செய்தி கொண்டு வந்திருப்பதாகவும் அவசரம் மார்க்கூஸைக் காண வேண்டும் என்றும் தெரிவித்தார். சூசையை வெளியே நிற்கும்படி கூறிவிட்டு ஊழியக்காரி உள்ளே சென்றாள். சற்று நேரத்தில் சாராளுடன் ஊழியக்காரி வெளியே வந்தாள். ''அவரை யாரும் இப்போ பார்க்க முடியாது'' என்ற சூடான வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெடியெனக் கிளம்பின. மறுகணம் கதவை அடித்துச் சாத்திவிட்டு அவள் சென்று விட்டாள்.

அவள் சென்றபின் அங்கு நின்ற ஊழியக்காரியிடம் ''அவள் யார்'' என்று விசாரித்தபொழுது அவள்தான் இப்பொழுது எலிசாவின் ஸ்தானத்தை அங்கு வகித்துக்கொண்டிருப்பவள் என்பதை அறிந்துகொண்டார். அவர் நெஞ்சம் வேதனையாலும் வெறுப்பாலும் குமுறியது. இனி எதுவும் செய்ய முடியாது என்று தீர்மானித்தவராக எலிசா பற்றிய செய்தியை எப்படியும் தெரிவிக்கவேண்டும் என்ற நோக்குடன் சீட்டு ஒன்றை அவளிடம் கொடுத்து எப்படியாவது மார்க்கூஸிடம் சேர்ப்பிக்குமாறு கூறிவிட்டு புறப்பட்டார்.

இந்த விடயம் எதுவுமே தெரியாதவனாக மதுபோதையிலும் மங்கையின் போதையிலும் மார்க்கூஸ் அன்று கிடந்தான்.

ஆனால் சில வாரம் கழிந்த பின்னரே தேடுவாரற்றுக் கிடந்த அந்தச் சீட்டு அவன் கண்களில் பட்டபோது அந்த மாளிகையே அதிர்ந்தது. அவன் நின்றநிலை அரங்கசாலையில் பசியோடு அடைத்து வைக்கப்பட்டிருக்கும், சிங்கம் அடிமையோடு போரிடத் திறந்து விட்டிருந்ததைப் போன்று பயங்கரமாக இருந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

நாட்கள் நகர்ந்து கொண்டேயிருந்தன. இன்று வருவார் நாளை வருவார் என்று ஒவ்வொரு நாளும் வழியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த எலிசாவுக்கு ஒவ்வொருநாளும் ஏமாற்றத்தைத் தந்து கழிந்து கொண்டிருந்தது. குழந்தைக்குச் செய்து முடிக்கவேண்டிய எட்டாம் நாள் விருத்தசேதனச்சடங்கும் மார்க்கூஸ் இல்லாமலே செய்து முடிந்தது. எப்படியாவது நாற்பதாவது நாளில் செய்யப்பட வேண்டிய காணிக்கைச் சடங்கினுக்கு என்றாலும் 'அவர் வந்து சேர்ந்து விடுவார்' என எதிர்பார்த்தாள். அதற்கும் அவன் வராமற் போகவே அவளுடைய மனதை உண்மையான பயம் ஆட்கொள்ள ஆரம்பித்தது.

எப்படியாவது மரியாளும் சூசையும் தன்னைப் பற்றிய சேதியை அவருக்கு அறிவித்து இருப்பார்கள். ஒருவேளை மரியாளுக்குப் பிரசவம் நடந்திருந்தால் கூட காலம் தாமதித்து என்றாலும் சூசை செய்தியை அறிவித்திருப்பார். அப்படியிருந்தும் மார்க்கூஸ் ஏன் வரவில்லை? அவளை விட்டுப் பிரியும்போது மீண்டும் 'எப்போது சந்திப்போம் என்ற ஏக்கம் அவன் கண்களில் நிழலாடியதை அவள் கண்டாளே; அந்த ஏக்கம் எப்படி இல்லாமல் போயிற்று. அவர்கள் சேதியைச் சொல்லியிரா விட்டாலும் நாட்கணக்கின் படி இப்பொழுது குழந்தை பிறந்திருக்கும் என்று அவரால் யூகிக்கத்தானும் முடியாமல் போயிற்றா? என்று தனக்குள் தவித்துக்கொண்டாள்.

ஆனால், மார்க்கூஸின் இந்தத் தாமதம் அவளுடைய பெற்றோரின் சந்தேகத்துக்குத் தூபமிடுவதாக அமைந்து விட்டது. அவர்கள் அவளை அடிக்கடி கேள்வி கேட்டுத் துளைக்கத் தொடங்கினர். மார்க்கூஸுக்கும் அவளுக்கும் ஏதோ பிணக்கு — மனத்தாங்கல் இருப்பதாக எண்ணினர். அவள் எவ்வளவோ மறுத்துக் கூறியபோதும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகம் தீரவில்லை. எல்லாவற்றிற்கும் பொதுச்சாட்டாக ராஜாங்க நிலைமைகள் நிமித்தம் சில முக்கிய பொறுப்புகள் ஏற்பட்டிருக்கலாம், அதன் நிமித்தம் வரமுடியாமல் போயிருக்கலாம் என்று சொல்லிவைத்தாள். அது பொருத்தமான காரணமாக இருந்தாலும் அதனையும் அவர்கள் பூரணமாக ஏற்றுக் கொள்வதாக இல்லை.

அன்று இரவு எலிசாளால் உறங்க முடியவில்லை. அவளது கண்களைத் தூக்கம் தழுவ மறுத்தது. அவள் உள்ளத்திலே பெரும் புயல் வீசியது. அந்தப் புயலைக் கிளப்பிவிட்டவள் அவள் அன்னைதான். அவளுடைய முதிர்ச்சியின் அனுபவம் தான் எலிசாளிடம் அந்தக் கேள்வியைக் கேட்க வைத்தது. அவள் கேட்டு விட்டாள். அந்தக் கேள்வியின் கனத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத எலிசாள் தாய்மீது சீறி விழுந்தாள் என்றாலும் அவள் சிந்தனையை கிளப்பி விட்டது.

ஒருவேளை அப்படியிருக்குமா? அதன் காரணத்தினாற்றான் அவன் வராமல் இருக்கின்றானோ? ''மார்க்கூஸின் குணம் எப்படி? நீ இல்லாத காலத்தில் வேறு யாராவது பெண்களுடன் தொடர்பு ஏற்பட்டிருக்குமா?'' இதைத் தான் அவளுடைய தாய் கேட்டாள். அவள் கேட்டது அன்றைய நிலையில் சாதாரண கேள்விதான்: ஏனென்றால் அப்படி இருப்பது யூதர்களின் ஒரு கலாச்சாரமாகவும் இருந்தது. தங்கள் அடிமைகளைக்கூட பெண்டாள்வது அவர்கள் மரபு.

ஆனால் அப்படியொரு நிலையில் வைத்து தன் கணவனைப் பற்றி நினைத்துப் பார்க்கவே அவள் தயங்கினாள். அவனும் அவளும் வாழ்ந்த புனிதமான குடும்ப வாழ்க்கை, ஒருவர் ஒருவர்மீது கொண்டிருந்த நம்பிக்கை, மார்க்கூஸுக்கு வேறு பெண்ணுடைய தொடர்பு ஏற்பட்டால் தான் உயிர் வாழமாட்டேன் என்று முன்பு கூறியது. அதன் பொருட்டு அவன் செய்து கொடுத்த சத்தியம் எல்லாமே அவளுக்குத் தெம்பூட்டி நின்றன. ஆனாலும் இடைக்கிடையே அப்படியும் நடந்திருக்குமோ என்ற எண்ணம் தோன்றி வதைத்

துக் கொண்டிருந்தது. அதே நினைவுச் சுழற்சிகளுடன் அவள் எப்பொழுது துயின்ருளோ!

அழகிய அந்தப் பூங்காவனத்தின் மத்தியிலே அவளும் அவனும் சுதந்திரப் பறவைகளாகப் பறந்துகொண்டிருக்கின்றனர்' இன்பம்... இன்பம் கொள்ளை இன்பம். அவள் ஓடுகின்ருள். அவன் துரத்திப் பிடிக்கின்ருன். இப்பொழுது அவள் வெகுதூரம் ஓடி வந்து விட்டாள். வந்தவள் திரும்பிப் பார்க்கின்ருள். அவன் அவளைத் துரத்திவரவில்லை. வெகு தூரத்தில் அவன் நின்றுகொண்டிருக்கின்ருன். அவர்களுக்கு இடையே ஒரு சிறு ஓடை தோன்றி, அது சிற்ருருக மாறி இப்பொழுது காட்டாருகப் பெருக்கெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. அவர்கள் விளையாடிய அழகிய தோட்டம் காட்டாற்று வெள்ளத்தில் அடியுண்டு சிதைந்து கொண்டிருக்கிறது. அவன் அவளை வந்தடைய முயற்சிக்காமல் மறுகரையில் அசையாமல் நிற்கின்ருன். ''மார்க்கூஸ், மார்க்கூஸ்'' என்று அவள் அலறுகிருள். அவன் அசையவில்லை. அதே வேளை அவனை யாரோ ஒரு பெண் அழைத்துச் செல்லுகிருள். அவள் கூவி அழைத்தும் கூட அதை அவன் பொருட்படுத்தாது அவளோடு போகின்ருன். இப்பொழுது காட்டாற்று வெள்ளம் அவளையும் சூழ்ந்தது. வெள்ளத்துடன் அவள் அள்ளுண்டு செல்லுகிருள். அவன் அவளைத் திரும்பியும் பார்க்கவில்லை... மார்க்கூஸ், மார்க்கூஸ்'' என்று அவள் அலறுகிருள்...

தூக்கத்தில் அவள் போட்ட சத்தத்தில் அருகிலே கிடந்த குழந்தை திடுக்குற்று 'வீல்' என்று அழத் தொடங்கியது. அவளையடுத்த மஞ்சத்தில் கிடந்த அவளது தாயும் விழித்துக்கொண்டாள். எலிசாள் கனவு கண்டு அலறுவதைக் கண்டு அவளைத் தட்டி எழுப்பினுள். விழித்துக் கொண்ட அவள் அன்னையை அணைத்தபடி விம்மத் தொடங்கினுள்.

இந்தக் கனவு அவளை வெகுவாகப் பாதித்துவிட்டது. பின்னர் விடியும்வரை அவள் கண்ணுறங்கவே இல்லை. அந்தக் கனவில் வந்தது போன்று மார்க்கூஸ் அவளை விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப் பிரிந்துவிட்டானு? அப்படி உண்மையாக நடந்து விடுமோ என்ற நினைவையே அவளால் தாங்க முடியாமல் இருந்தது.

பார்வோன் அரசன் கண்ட கனவுக்கு மூதாதையான சூசை விளக்கம் கூறி வரவிருந்த ஏழுவருடப் பஞ்சத்தில் நாட்டைக் காத்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது. அந்தக் கனவு போன்று இதுவும் பலித்துவிடுமா?

பொழுது விடிந்த பின்னரும் வெகுநேரம் படுக்கையி லேயே கிடந்தாள். அவள் படுக்கையை அண்மித்திருந்த சாரளத்தைத் திறந்தால் வீதியை நன்கு பார்க்கமுடியும். வெளிச்சம் விழுவதற்காக சாரளத்தைத் திறந்த அவளது கண்களை அவளால் நம்பவே முடியவில்லை.

வீதியில் கழுதையில் வந்துகொண்டிருந்தது அந்த உரு வம்! அந்தக் கணம் அவள் அடைந்த மகிழ்ச்சிக்கும் ஆறு தலுக்கும் எல்லையே இல்லை. படுக்கையை விட்டெழுந்து வெளியே ஓடிச்சென்று அந்த உருவத்தைக் கட்டியணைத்துக் கொண்டாள். அந்த உருவமும் அவளை இறுக அணைத்துக் கொண்டது. அந்த நபரைக் கண்டே இவ்வளவு மகிழ்ச்சி யடைந்தாளென்றால் மார்க்கூஸ் வந்திருந்தால் எப்படியாகி யிருப்பாள்?

## 8

மார்க்கூஸ் மதிமயங்கி தன்னை முழுதாகவும் சாராளி டம் பறிகொடுத்து — மதுவிடம் மண்டியிட்டு - எலிசாளை மறந்து கிடந்தபோதும் அவனுடைய அந்த மாறுபட்ட வாழ்வுக்காகவும் — அவனால் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக் கும் எலிசாளுக்காகவும் உண்மையிலே உள்ளத்தால் உருகிக் கொண்டிருந்த ஒரு ஜீவன் இருந்தது என்றால் அது மார்க் கூஸ் வீட்டின் ஊழியக் காரியான ஷீலா ஒருத்திதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வீட்டு அடிமைகளையே பெண்டாளும் யூத ஆண்கள் மத்தியில் மார்க்கூஸ் தனிமனிதனாகவும் அந்நிய பெண்களை ஏறெடுத்துப் பார்க்காதவனாகவும், தான் இளமையும் அழகும்கூடிய ஒரு ஊழியக்காரியாக இருந்த போதிலும் கௌரவத்தோடும் பண்போடும் தன்னோடு நடந்துகொண்ட மார்க்கூஸ் எலிசாள் இல்லாத சமயத்தில் இப்படியாக மாறிவிட்டது அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. என்றாலும் எலிசாள் இந்தவீட்டிற்குத் திரும்பவும் வரத்தான் போகின்றாள். மார்க்கூஸ் மீண்டும் பழைய மனிதனாக மாறத்தான் போகின்றான் என அவள் நம்பிக் கொண்டிருந்தாள்.

ஷீலாவுக்கும் மார்க்கூஸின் குடும்பத்திற்கும் உள்ள உறவு அவள் பரம்பரை அடிமை என்பதுதான். ஷீலாவும், அவள் தாயும் எகிப்திய வியாபாரிகளால் அடிமைகளாகச் சந்தையில் விற்பனையாகியபோது மனைவியை இழந்த நிலையில் ஐந்து வயதுச் சிறுவனாக இருந்த மார்க்கூஸை வளர்ப்பதற்கு ஊழியக்காரியாக மார்க்கூஸின் தந்தையால் வாங்கப்பட்டவள். ஆகவே அவள் தாயடியைத் தொடர்ந்து அவளும் அடிமையாக —ஊழியக்காரியாக இருபது ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் குடும்பத்தோடு ஒன்றித்தவள்.

எலிசாளின் வருகைக்குப் பின்னர் அவள் அன்புக்குப் பாத்திரமானவளாக அடிமை, ஊழியக்காரி என்ற நிலையில் இருந்து அவளின் உடன் பிறப்பின் நிலையில் கணிக்கப்பட்டவள். அதனால்தான் எலிசாளுக்கு மார்க்கூஸ் செய்யும் துரோகத்தை அவளால் சகிக்க முடியாமல் இருந்தது.

அதன் காரணத்தினால்தான் சூசையும் மரியாளும் நசரேத்தில் இருந்து செய்திகொண்டு வந்திருந்தபொழுது மார்க்கூஸ் இருந்த நிலையில் அவர்களைப் பார்ப்பானோ என்ற சந்தேகம் இருந்தபோதும் கூட அவனுக்கு சேதிகூற உள்ளே சென்றாள். ஆனால் போதாத காலம் சாராள் இடையே குறுக்கிட்டு சூசையும் மரியாளும் அங்கு வந்த சேதியை அவனுக்கு எட்டாமல் செய்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசை கொடுத்த ஓலையைப் படித்துப் பார்த்ததுமே அவளுக்குத் 'திக்' கென்று இருந்தது. மேற்கொண்டு விபரங்களை அவர்களிடம் கேட்டறிவதற்கு மரியாளோ, சூசையோ அங்கே நிற்கவில்லை. அவ்வோலையை சாராளுக்குத் தெரியாமல் மறைப்பதே அவளுக்குப் பெரும் காரியமாகவிருந்தது. எப்படியும் மார்க்கூஸிடம் அதைச் சேர்ப்பித்துவிட வேண்டிய பொறுப்பு அவளுக்கு இருந்தது. ஆனால் அரண்மனைக்குப் போகும் வேளைகள் தவிர மற்றைய நேரமெல்லாம் சாராளும் கூடவே இருந்தாள். பார்க்கப்போனால் அது சாதாரண விடயம். அதைக்கூடச் சாதிப்பது அவளால் முடியாமல் இருந்தது. நாட்களோ நகர்ந்து கொண்டிருந்தன. எலிசாளின் நிலைமை பற்றிய கவலை அவளை அதிகமாக ஆட்கொண்டது.

இப்படியிருக்கையில் அன்றொருநாள் அவள் அங்காடி வீதியில் எதிர்பாராத விதத்தில் சூசையைச் சந்திக்க நேர்ந்தது. சூசையைக் கண்ட மாத்திரத்தில் அவள் மனம் மகிழ்வால் துள்ளியது. இவளைக் கண்டவுடன் அவரும் அடையாளம் கண்டுகொண்டார். மார்க்கூஸிடம் தான் கொடுத்த ஓலை போய்ச்சேராத செய்தியையும் அவன் எலிசாளின் நினைவே அற்று இருப்பதையும் அறிந்து வேதனை கொண்டார்.

மரியாளுக்கு ஆண் குழந்தையொன்று பிறந்துள்ள செய்தியையும் தாங்கள் தங்குவதற்கு இடமின்றி மாடுகள் அடையும் குகையொன்றில் வாழ்ந்துவருவதையும் அங்கு தான் மரியாளுக்கு பிரசவம் நடைபெற்றது என்பதையும் கேள்வியுற்று ஷிலா மனம் வருந்தினாள். சூசையோடு கூடச் சென்று மரியாளையும் குழந்தையையும் கண்டாள்.

அப்பப்பா! அந்தக் குழந்தையின் அழகுதான் என்னே! அவள் தன் வாழ்நாளில் கண்டிராத அழகு அக்குழந்தையிடம் பிரகாசிப்பதையும், அதன் கண்களில் ஒளிர்கின்றதே ஒளி, அதில் ஒரு தெய்வீகத்தன்மை குடிகொண்டிருப்பதையும் கண்டபோது அவள் உடலே புல்லரித்தது. இத்தகைய குழந்தை போயும் போயும் மாட்டுத் தொழுவத்தில் பிறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி ஏற்பட்டதே! என்பது கவலைக்குரியது என்றாலும் அந்தத் தொழுவம் அவளுக்கு அப்பொழுது அந்தச் சூழ்நிலை தான் ஒரு கோவிலில் இருப்பது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது. இடையர்கள் பலர்வந்து பால், நெய், மற்றும் தானியங்கள் முதலியவற்றை கொடுக்கின்றார்கள். எனவே அவர்கள் பாடு கஷ்டமில்லை என்பதையும் அறிந்து கொண்டாள்.

அந்தக் குழந்தையின் கொள்ளை அழகையும், பிரகாசத்தையும் கண்ட அவள் தன் மனதுக்குள் இருந்ததை அப்படியே கூறிவிட்டாள். "அக்கா இந்தப் பிள்ளையின் அழகைப் பார்த்தால் சில நாட்களாய் கீழ்த்திசையில் தோன்றிக் கொண்டிருக்கின்றதே பிரகாசமான வால் நட்சத்திரம் அதன் ஒளி போன்று இருக்கின்றதல்லவா?" என்றாள்.

அவளுடைய கபடமில்லாத அந்தப் பேச்சைக் கேட்ட மரியாள் அவளுக்கே உரிய அந்த காந்த சக்திவாய்ந்த புன்னகையை உதிர்த்தவளாக "உனக்குத் தெரியுமா இது பிறந்த அன்றுதான் அந்தக் கீழ்த்திசை நட்சத்திரமும் தோன்றியது. பிற்காலத்தில் யாரும் பிள்ளை பிறந்த நாளைக் கேட்டால் நான் இலகுவாகப் பதில் கூறிவிடுவேன். அதிசய நட்சத்திரமும் கீழ்த்திசை வானின் தோன்றிய அன்று என்று" என்றாள்.

இந்தப் பிரகாசமான குழந்தையின் பிறப்புக்கும், அந்த நட்சத்திரத்தின் தோற்றத்துக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ என்றும், ஒரு வேளை எதிர்பார்க்கப்படும் 'மெசியா' இந்தக் குழந்தைதானோ என்றுகூட ஒரு சந்தேகம் அவளுள் தோன்றியது. ஏனெனில், யூதகுலத்தில் மீட்பர் 'மெசியா' விரைவில் பிறப்பார் என்ற செய்தி அப்பொழுது எங்கும் நிலவிக்கொண்டிருந்தது.

இந்தக் குழந்தையின் அழகிலும் பிரகாசத்திலும் மயங்கிய அவளுக்கு கூடவே எலிசாளுடைய நினைவும், அவள் பெற்றிருக்கக் கூடிய அந்தக் குழந்தையின் நினைவும், எழுந்தது. அவளுடைய மனம் அந்த நிமிடத்தில் ஒரு முடிவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. ஆம் நீண்ட நாட்களாக அவளைக் குழப்பிக் கொண்டிருந்த அந்தப் பிரச்சினைக்கும் சிந்தனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து தீர்மானத்திற்கு வந்தாள். அவள் முடிவை மரியாளிடமும் சூசையிடமும் கூறியபோது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ''உன்னால் முடியுமா?'' எனக் கேட்டார்கள்.

''முடியும், எலிசாளுக்காக நான் எதையும் செய்வேன்'' என்றாள். அவள் முகத்தில் ஒரு உறுதி தெரிந்தது. தான் மேற்கொண்டு செய்ய விருப்பவைபற்றி அவள் அவர்களிடம் விளக்கினாள். அவள் கூறுவது சரியென்றே இருவருக்கும் பட்டது.

# 9

ஊழியக்காரி ஷிலா தான் மார்க்கூஸ் வீட்டின் அடிமை என்பதையும் மறந்துதான் எப்படியும் எலிசாளின் இடமான நசரேத்துக்குப் போவதென்று தீர்மானித்து விட்டாள். அப்படி அவள் துணிந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று எலிசாளையும் குழந்தையையும் காணவேண்டும் என்ற ஆவல், மற்றது இடையிலே புகுந்து எலிசாளின் இல்லறப் பூங்காவை அழித்துக்கொண்டிருக்கும் சாராள் எனும் பாம்பைக் கலைத்து மார்க்கூஸையும் அவளையும் மீண்டும் இணைத்து வைக்க வேண்டும் என்பது.

சூசை ஓலையைத் தந்தவுடனேயோ அல்லது மறுநாளோ மார்க்கூஸிடம் தான் எதுவிதத்திலும் சேர்ப்பிக்காமல் விட்டது மன்னிக்க முடியாத குற்றம் என்று அவள் மனச்சாட்சி கூறியது. அப்படி அன்று கொடுத்திருந்தால் சாராளால் தான் பழிவாங்கப் பட்டிருப்பாள் என்பது என்னவோ உண்மையென்றாலும் மார்க்கூஸையும் எலிசாளையும் இணைத்து வைத்த புண்ணியத்துக்கு ஆளாகியிருப்பாள். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று, இவ்வளவு நாட்கள் கழித்து அந்த ஓலையை மார்க்கூஸிடம் தான் ஒப்படைக்கும்போது மார்க்கூஸிடம் இருந்து நிச்சயமாகக் கொடிய தண்டனை கிடைப்பதோடு சாராளும் சேர்ந்து தனக்கு ஒன்றும் தெரியாதது போன்று நாடகமாடி, தன்னைமட்டும் குற்றவாளியாக்கி தான் தப்பிவிடக்கூடும் என்று தயங்கினாள். அதுமட்டுமல்லாமல் எலிசாள்கூட; தன் கணவர் தன்னிடம் வராததற்கு ஷீலாவும் ஒரு காரணம் என்று பழி சுமத்தக்கூடும் என்று அஞ்சினாள். எனவே, இவை எல்லாவற்றுக்கும் சிறந்த முடிவுதான் நசரேத்தூருக்குச் செல்வது ஒன்றுதான் என்ற தீர்மானத்துக்கு வந்தாள்.

அந்த முடிவைத்தான் அன்று அவள் மரியாளிடமும் சூசையிடமும் வெளியிட்டபோது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். நசரேத்துக்குத் தனிமையில் ஒரு பெண்ணான அவள் போவது சாத்தியமான காரியமா என்று. ஆனால், அவள் நம்பிக்கை எப்படியும் தான் நினைத்ததைச் செய்து முடிப்பாள் என்று கூறியது.

அவள் செய்ய முன்வந்த அந்த நல்ல காரியத்துக்குத் தம்மால் செய்யக்கூடிய உதவி என்ன என்று சூசை கேட்டால் அதற்கு அவர் கேட்ட உதவி ''ஐயா எனக்கு நீங்கள் செய்யக்கூடிய உதவி நசரேத்தில் இருந்து நீங்கள் கொண்டுவந்த கழுதையை எனக்குத் தருவதுதான்.

அவள் அக்கழுதையைக் கேட்டதற்குக் காரணமும் இருந்தது. ஒன்று அது நீண்ட தூரப் பிரயாணத்தில் பழக்கப்பட்டது. மற்றது நசரேத் எல்லைக்குள் பிரவேசித்தும் அது தானாகப் பழக்கப்பட்டதின்படி அவர்கள் வீட்டை அடைந்துவிடும்,

அவளுடைய அந்தக் கோரிக்கையை மறக்காது நிறைவேற்ற ஒப்புக்கொண்டனர் சூசையும் மரியாளும். அவர்கள் முடிவைச் சரி என்பதுபோல் மரியாளின் குழந்தையும் கெக்களம் கொட்டிச் சிரித்தது.

ஷீலா நசரேத்திற்குப் புறப்படுமுன்னர் அந்த ஓலையை மார்க்கூஸிடம் ஒப்படைக்க வேண்டும்; அல்லது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பாடாவது அவன் கண்களில் படக்கூடிய இடத்தில் ஆனால் சாராவின் கண்படாத இடத்தில் வைத்து விட வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அவள் நினைத்ததின்படி முதல் திட்டம் பலிக்கவில்லை. இரண்டாவது திட்டத்தின்படி அவனுடைய போர்க்கருவிகள், கவசங்கள் ஆடைகள் இருக்கும் அறையைச் சுத்தம் செய்யும் சாட்டில் உள்ளே சென்று உறையோடு இருந்த பட்டயம் ஒன்றை உருவி அப்பட்டயத்தில் ஓலையை ஒட்டி வைத்துப் பின்னர் மீண்டும் பட்டயத்தை உறையிலேபோட்டு விட்டாள். இப்பொழுது பட்டயத்தை உருவி எடுத்தால் தான் அதில் ஒட்டியிருக்கும் ஓலை கண்ணில் படும்.

அன்று மாலை மதுவிடமும், சாராளிடமும் மார்க்கூஸ் மயங்கிக் கிடந்த வேளையில் ஷீலா மெல்லக் கிளம்பிவிட்டாள். அவர்கள் மயக்கம் மறுநாள் காலைதான் தீரும், அதுவரை தன்னைத் தேடமாட்டார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

* * *

ஷீலா மார்க்கூஸின் மாளிகையை விட்டு வெளியேறி வாரம் ஒன்றாகி விட்டது. ஷீலா தெரியாமல் எங்கேயோ ஓடிவிட்டாள் என்பதை மார்க்கூஸ் அறிந்ததும் அந்த அடிமை தன் புத்தியைக் காட்டிவிட்டாள் என்று அவன் குமுறினாலும், ஏன் போனாள் என்று சிந்திக்கவோ அதைப் பற்றி அலட்டிக்கொள்ளவோ வேண்டிய அளவுக்கு சாராள் இடம் வைக்கவில்லை.

சாராளுக்கு ஷீலாமீது ஏற்கனவே ஒரு வெறுப்பு இருந்தது. அவள் எலிசாளுக்கு வேண்டியவள் என்ற மட்டில் தனக்கு அவள் எதிரி என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தாள். அவளை எப்படியாவது அந்த மாளிகையை விட்டுத் தொலைத்துவிட வேண்டும் என்று வழிபார்த்துக்கொண்டிருந்தாள். சூசையும் மரியாளும் எலிசாளிடம் இருந்து வந்த சேதியைத் தன்னைத் தவிர ஷீலா மட்டுந்தான் தெரிந்திருந்

தான் என்பதும் இவளின் இந்த எண்ணத்துக்கு ஒரு காரணமாக இருந்தது. ஆகவே அவளாகவே ஓடிவிட்டதில் அவளுக்கு ஒரு நிம்மதி – திருப்தி.

ஆயினும் அவள் நெஞ்சத்தில் ஒரு பயம். ஒரு வேளை இவன் எலிசாளிடம் தான் போயிருப்பாளோ என்று. என்றாலும் அந்தளவு தொலைவுக்கு அவள் தனிமையாகப் போயிருக்க மாட்டாள். அண்மையில்தான் எங்கேயும் ஒழிந்து கொண்டிருப்பாள் என மனதைத் தேற்றிக் கொண்டாள். எனவே தான் ஷீலாமீது இல்லாத திருட்டுக் குற்றத்தையெல்லாம் காட்டி அவளை எங்கு கண்டாலும் பிடித்துச் சிறையில் வைக்க வேண்டும் என்று மார்க்கூஸைத் தூண்டி விட்டிருந்தாள். மார்க்கூஸின் வீரர்கள் வேறு அவளை ஒரு பக்கம் தேடிக்கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில்தான் அன்று காலை அவன் அரண்மனைக்குப் போவதற்கு முன்னர் தன் உடையை அணிந்தவன். ஏதோ ஒரு நினைவு வந்தவனாகப் பட்டயத்தின் கூர்மையைப் பரிசோதிக்க வெண்ணி அதை உறையில் நின்று உருவினான். அப்பொழுதுதான் ஷீலா பட்டயத்தில் ஒட்டி வைத்த ஓலையை அவனால் காண முடிந்தது. அந்த ஓலை அவனுக்குத் தன்னை அறியாமலே பல விபரீதங்கள் நிகழ்ந்து விட்டன என்று கூறுவது போலிருந்தது. இற்றைவரையில் எலிசாளின் நிலை என்னவாகியிருக்கும் என்று அவனால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை.

அவன் போட்ட சப்தத்தால் நடுங்கிக்கொண்டிருந்த சாராளைப் பார்க்கும்போது ஏதோ ஒரு பிசாசைப் பார்ப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது. தன் கரத்தில் இருக்கும் பட்டயத்தால் அவளைத் துண்டாடிவிடத் துடித்தான். ஆனாலும் தவறு தன் பக்கமும் உண்டு என்பதை உணர்ந்து வெட்கியவனாக எதுவும் செய்யத் தோன்றாமல் நின்றான்.

அனைத்துக்கும் மேலாக எலிசாளினதும், தனக்குப் பிறந்திருக்கக் கூடிய குழந்தையினதும் எண்ணம் ஏற்படவே சாராளைப்பற்றி வந்து தீர்மானிக்கலாம் என்ற முடிவில் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரவியில் ஏறிக் கிளம்பினன். மன்னனிடம் உத்தரவுபெற்ற அவன் புயல் வேகத்தில் நசரேத்தூரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தான்.

நசரேத்தை அடைந்த அவனுக்கு ஏமாற்றமே காத்து இருந்தது. எலிசாளும், குழந்தையும், ஷீலாவும் யூதேயா வுக்குத்தான் போய்விட்டார்கள் என்று செய்தியறிந்து சிலை யாக நின்ருன். ஆனல், யூதேயாவிற்கும் அவர்கள் வரவில்லை என்பதை யூதேயாவில் அறிந்தபோது அவனுக்குப் பைத்தி யமே பிடித்துவிட்டதுபோல் இருந்தது.

## 10

**வ**ழிநெடுகிலும் ஷீலாவரும் பொழுது எலிசாளுடன் எப்படிப் பேசுவது என்று தன்னைத் தயார்படுத்திக் கொண்டே வந்தாள். எலிசாள் தன்னைக்கண்ட மாத்திரத் தில் தன் தகைமையை மறந்து தான் அவளுக்கு எஜமானி என்பதையும் மறந்து இப்படி ஓடிவந்து ஆலிங்கனம் செய்து அவளை திணறடிப்பாள் என்று அவள் எண்ணியிருக்கவில்லை. ஆனல் எலிசாளுடைய மனோநிலையிலோ ஷீலா அவளுக்கு திக்குத் தெரியாத காட்டில் திசையறிகருவிபோற் பட் டாள். எலிசாளின் அந்த ஆரவாரங்களிலே தான் பேச வந்தவைகள், எப்படி ஆரம்பிக்க வேண்டுமென்று நினைத் தவைகள் அனைத்தையும் மறந்தேபோனுள்.

''மார்க்கூஸ் வரவில்லையா? ஏன் வரவில்லை? எப்படி யிருக்கிருர்? சூசையும் மரியாளும் சொல்லவில்லையா? அவர் எங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிருரா?'' என்று கேள்விகளை அடுக்கடுக்காகக் கேட்டாள். அந்தப் பேதை யின் அவசரத்தையும் ஆர்வத்தையும் காணுகையில், இவளது இதயத்தை இன்னும் சற்று நேரத்தில் சிதறடிக்கப் போகின் ருேமே என்று ஷீலாவுக்குக் கல்க்கமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததும் வராததுமாக அவளை அதிரடிக்கக் கூடாது என முடிவுக்கு வந்தவளாக ''நல்ல சுகமாய் இருக்கிறார் அம்மா, உங்களதும் பிள்ளையினதும் நினைவாகவே இருக்கின்றார். ராஜாங்க அலுவல்கள் காரணமாக யூதேயாவை விட்டு அவரால் புறப்படவே முடிவதில்லை'' என்று தனது உணர்ச்சிகளை வெளிக்காட்டாது கூறி முடித்தாள்.

உள்ளே அழைத்துச் சென்று தன் பெற்றோருக்கு அவளை அறிமுகப்படுத்தி வைத்தபின்னர் தன் பிள்ளையை ஆர்வத்தோடு காட்டி மகிழ்ந்தாள். ஷீலா அக்குழந்தையை அன்போடு அணைத்து முத்தமழை பொழிந்தாள். மார்க்கூஸின் சாயலை அப்படியே கொண்டு பிறந்திருக்கும் அக்குழந்தையை காணும்போது மார்க்கூஸின் நினைவும் கூடவே அவளுக்கு எழுந்தது. இத்தகைய அன்பு மனைவிக்கும், குழந்தைக்கும் மார்க்கூஸால் எப்படித் துரோகம் செய்ய முடிந்தது. ஆனாலும் எலிசாளையும் குழந்தையையும் கண்டால் மார்க்கூஸ் பழைய மனிதனாகி விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

அன்று முழுவதும் அவனைப்பற்றியே கேள்விமேல் கேள்விகேட்டு ஷீலாவைத் துளைத்துக் கொண்டிருந்தாள் எலிசாள் பகல் முழுவதும் தன் உணர்வுகளையும், உள்ளக்கிடக்கைகளையும் வெளிக்காட்டாது அடக்கிக் கொண்டிருந்த ஷீலா, அன்று இரவு மெல்ல மெல்ல நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களைப்பற்றி ஒவ்வொன்றாய்ச் சொல்லத் தொடங்கினாள்.

ஷீலா சொல்லச் சொல்ல ஈட்டிமேல் ஈட்டி எறியப்படுவது போன்ற உணர்வே எலிசாளுக்கு உண்டானது. தான் கேட்பவை உண்மைகள்தானா என்ற சந்தேகமும் உண்டானது ஆனால் தன் உயிருக்குயிரான ஷீலா பொய் கூறமாட்டாள் என்ற நினைவில் மனம் பொருமினாள். தன் அன்னை 'ஒருவேளை அப்படி இருக்குமோ' என்று கேட்டதற்கு அவளோடு கோபித்துக் கொண்டவள் தாயின் சந்தேகம் உண்மையாகி விட்டதே, தான் கண்ட கனவு கூடப் பொருள் பொதிந்தாகிவிட்டதே என்று பொருமினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமோன் மன்னனால் சலவைக் கற்களினாலும், தங்கத் தகடுகளாலும் கட்டப்பட்ட ஜெருசலேம் தேவாலயம் எதிரிகளால் சூறையாடப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டுக் கிடந்த அந்தக் கோலம்போன்று அவளுடைய மனக்கோட்டைகளும், குடும்பமாளிகையும் அவள்முன்பு சிதறிக் காணப்பட்டது. தன் கணவன் தனக்குச் செய்துவிட்ட துரோகத்தையும். தனக்குக் கொடுத்த சத்தியத்தை மறந்ததையும் எண்ணிப்பார்க்கையில் தான் அவனுக்குக் கொடுத்த சத்தியமும் கூடவே வந்தது. அவள் தான்கொடுத்த சத்தியத்தின்படி வாழ்வை அழித்துக்கொள்வதா . அல்லது அந்தக் குழந்தைக்காக வாழ்வதா என்ற முடிவுக்கு வரமுடியாதவளாகத் தவித்தாள்.

ஒரு முடிவுக்கும் வரமுடியாத நிலையில் ''ஷீலா எனக்கு ஒரு சத்தியம் செய்துகொடுப்பாயா?'' என்றாள். அவளுடைய அந்தக்கோரிக்கை அவளுக்கு வியப்பாக இருந்தது. தன் எஜமானி தன்னிடம் இப்படிக் கேட்கின்றாளே என்ற நினைவு அவளை என்னவோ செய்தது.

''என்னம்மா இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் கட்டளையிட அதை ஏற்கவேண்டிய அடிமை நான். போயும் போயும் என்னிடம் கேட்கிறீர்களே. எது வேண்டுமானாலும் கேளுங்கள்''

''ஷீலா தயவுசெய்து அவரைப் பற்றிய விடயங்கள் எதையுமே இங்கு யாரிடமும் வெளியிட்டுவிடாதே; ஏனென்றால் என் குடும்பவாழ்க்கையைப் பற்றியும், என் கணவனைப் பற்றியும் பெருமையாகச் சொல்லிவைத்திருக்கின்றேன். அவற்றிற்கு முற்றிலும் மாறான இச்செய்திகளைக் கூறி வரும் அவமானத்தைத் தாங்கிக் கொள்ள என் இதயத்துக்குச் சக்தியில்லை'' என்று கூறி விம்மினாள்.

சற்றுநேரம் அவர்களிடம் அமைதி நிலவியது. ஆனால் எலிசாள் அழுதுகொண்டேயிருந்தாள். அவள் சிந்தனை இனிமேல் தான் செய்ய வேண்டிய திட்டமென்ன என்பதில் ஆழ்ந்திருந்தது. அவள் தனக்குள் தானே ஒரு திடமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவை எடுத்துக் கொண்டு ''ஷீலா நாளையேநாம் யூதே யாவுக்குப் போகப் போகின்றோம் என்றாள். அதற்கு ஷீலா விடம் இருந்து எதுவித பதிலும் வரவில்லை, ஏனென்றால் அவள் அப்படி ஒரு முடிவைத்தான் எதிர்பார்த்துக் கொண் டிருந்தாள். ஆனால் அதுதான் எலிசாளின் முடிவா என்பது எலிசாளுக்கு மட்டுமே தெரியும்.

மறுநாள் ''அவருக்கு என்னைவந்து அழைத்துச் செல்ல அவகாசமில்லையாம். என்னை ஷீலாவுடன் வரும்படி சொல் லியனுப்பியிருக்கிறார் நான் போகிறேன்'' என்று குழந்தை யுடனும் ஷீலாவுடனும் தனது பிரயாணத்தை ஆரம்பித் தாள் எலிசாள், அவள் அன்று தொடங்கிய பிரயாணத்தின் முடிவு யூதேயாவிலே அல்ல என்பதை அப்பொழுது ஷீலாவோ, எலிசாளின் பெற்றோர் உறவினர் யாருமே அறிந்திருக்க வில்லை...

# 11

அதிர்ச்சிமேல் அதிர்ச்சி என்பார்களே; அவ்வகையான அனுபவம்தான் மார்க்கூசுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பர்வதத்தை மூடியிருந்த பனிப்படலமாக அவனைச் சூழ்ந் திருந்த மாயை விலகியதன் மூலம் தன் நிலையைத் தானே எண்ணிப்பார்த்து — பெண்மையின் முன்னால் பேதலித்து விட்ட ஆண்மையை எண்ணி வெட்கினான். அவனுக்கு ஏற் பட்டிருந்த வெட்கத்தை தன் அன்பு மனைவியும் பிறந்தநாள் முதல் முகத்தையே காணாத அக்குழந்தையும் என்ன ஆனார் களோ, எங்கு போனார்களோ என்ற ஏக்கம் தான் அவனை வெகுவாக வதைத்துக் கொண்டிருந்தது.

அவளுக்குத்தான் துரோகம் செய்ய நேரிட்டால் உயிர் வாழமாட்டேன் என்று அவள் அவனுக்குக் கூறியிருந்த சபதத்தை நிறைவேற்றி விட்டாளோ என்ற அச்சம் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை ஆட்கொண்டு உலுப்பியது. இத்தனைக்கும் தன்னை இத்தகைய இழிநிலைக்குள்ளாக்கி, தன் வலிமையைத் தளர்த்தி தன் குடும்பமே சிதைவதற்குக் காரணமாயிருந்த சாராளை நினைக்கும்போது ஆத்திரம் அவனை மீறிக்கொண்டு வந்தது. ஆனால் அவளுடைய நல்லகாலம் நசரேத்தில் இருந்து மார்க்கூஸ் வீடுதிரும்பியபோது அவள் அவன் அரண்மனையில் இல்லை, அவள் புத்திசாலி, அவன் வருமுன்னரே அவள் கிளம்பிவிட்டாள். எங்கே போனாள். என்று கூட அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் அவளை மட்டும் குறைகூறி என்ன பயன். அவளை விட முதல் குற்றவாளி, முழுக் குற்றவாளி அவனல்லவா? மார்க்கூஸைப் போன்று அவள் யாருக்கும் சத்தியம் செய்து கொடுக்கவில்லையே. அவள் ஒரு கணிகை என்பது அவன் அறிந்தது தானே அறிந்தும் தவறியது, தன் மனைவிக்குச் செய்துகொடுத்த சத்தியத்தில் நின்றும் வழுவியது அவனுடைய குற்றமே தவிர அவளுடையதல்லவே. நாட்கள்செல்லச்செல்ல இப்படியுண்டான சிந்தனைகள் அவனைத் தெளிவடைய வைத்தன. சாராளைப் பழிவாங்கும் எண்ணத்தை, அவளை அழிக்கும் திட்டத்தை மறந்து தன் மனைவியையும் பிள்ளையையும் தேடும் முயற்சியிலே ஈடுபட்டான். ஆனால் நாட்கள் நகர்ந்தனவே தவிர அவர்கள் இருக்குமிடத்தை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மார்க்கூஸினுடைய வாழ்க்கையிலே மாறிமாறி அதிசய நிகழ்வுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தபோது, சிலநாட்களாக இயற்கையிலும் ஒரு அதிசய நிகழ்வு நிகழ்ந்துகொண்டிருந்தது. அந்த நிகழ்வு சாதாரண மக்களுக்கு வியப்பாகவும், விசித்திரக் காட்சியாகவும் தோன்றிக் கொண்டிருந்ததேயொழிய அதையிட்டுச் சிந்திக்கவோ அந்த நிகழ்வின் காரணத்தையோ அறிந்து கொள்ளவோ விரும்பவுமில்லை, ஆனால் யூதேயாவில் வாழ்ந்து கொண்டிருந்த அறிஞர்களுக்கும் வானசாஸ்திரிகளுக்கும் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கும் விடயமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தின் கீழ்த்திசையில் தினமும் இரவில் தோன்றிக் கொண்டிருக்கும் புதுமையான ஒரு நட்சத்திரம், அதிலிருந்து ஐந்து திசைகளை நோக்கி ஒளிசிதறிக் கொண்டிருக்க ஒரு ஒளிக்கதிர் மிக நீளமாக வால்போல் நீண்டுகொண்டிருந்தது. இந்த வால்நட்சத்திரம் தோன்றக் காரணமென்ன? என்று அவர்கள் செய்து கொண்டிருந்த ஆராய்ச்சியின் முடிவு அவர்களுக்கு மகிழ்வுதரக் கூடியதொன்ருக இருந்தாலும் அதை வெளியிடுவதன் மூலம் ஏற்படக்கூடிய விபரீதங்களை எண்ணிப் பயந்து கொண்டிருந்தார்கள்.

இயற்கையிலே தோன்றிய அந்த மாற்றம் இயற்கையை எல்லாம் வென்ற ஒரு மகான் உலகில் பிறந்துவிட்டார் என்ற செய்தியைச் செப்பியது. அந்த இயற்கையையும் வென்றவராக இருந்தால் அது மெசியா ஒருவராகத்தான் இருக்கவேண்டும். அதுவும் அந்த மெசியா தாவீதின் குலத்திலே யூதேயாவிலேதான் பிறப்பார் என்று சாஸ்திரங்கள் முதலாகக் கூறுகின்றபடியால் மெசியா பிறந்துவிட்டார் என்ற செய்தியை அவர்கள் நம்பிஞர்கள். அவர்களின் கணிப்பின்படி அவர் பிறந்திருக்கக் கூடிய இடம் பெத்லேகம் கிராமம்தான். ஆளுல் அதையும் எப்படி துணிந்து பகிரங்கப்படுத்துவது?

ஏனென்ருல் பலருக்கு விருப்பமான ஒரு காரியத்தில் சிலருக்கு உள்ள வெறுப்பால் அனைத்தும் சிதறடிக்கப்படுகின்றது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அதிலும் ஏரோதனைப் பற்றி நன்கு அறிந்திருந்த அவர்கள் ஏரோதனுடைய நாட்டில்தான் மெசியா இரட்சகர் பிறந்துள்ளார் என்பதை எப்படி வெளியிடுவது? ஆளுல் அவர்கள் விரும்பாமல் இருந்தபோதும் அந்த விபரத்தை ஏரோதன் அறியக் கூடிய ஒரு சந்தர்ப்பம் தாளுகவே ஏற்பட்டுவிட்டது.

மெசியாவின் பிறப்பின் அடையாளமாக அந்தத் தாரகையின் திசையை நோக்கி வெளிநாடுகளில் இருந்து மெசியாவைத் தரிசிக்கவந்த ஞானியர் மூவர் அன்று ஏரோதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைக்கு வருகை தந்திருந்தனர். நீண்டநாட் பிரயாணத்தின் அலுப்பு அவர்களிடம் தோற்றியது. தாரகையைக் குறிவைத்து வந்த அவர்கள் இரவிலே தம் பயணத்தை தொடர்ந்தும், பகலிலே ஓய்வெடுத்தும் வந்திருந்தனர். அன்று காலை விடிந்து தாரகை மறையும் சமயம் அவர்களும் யூதேயாவுக்கு வந்து சேர்ந்தனர். தாரகையின் ஒளியானது யூதேயாவையே சுட்டிக்காட்டிக்கொண்டு நின்றபடியால் யூதேயாவிலே எங்கேயோ ஒரு கிராமத்தில் மெசியா பிறந்திருக்க வேண்டும் என்று அவர்கள் திடமாக நம்பினர். எனவேதான் யூதேயாவின் அரசனாக விளங்கும் ஏரோதனை விசாரித்தால் மெசியா பிறந்துள்ள இடத்தை இலகுவில் அடைந்துவிடலாம் என்று நம்பி ஏரோதனின் அரண்மனையை அந்த மூன்று ஞானிகளும் அடைந்தனர். ஏரோதனுக்கு மெசியா தன்னுட்டில் பிறந்துள்ள செய்தி இதுவரை தெரியாதிருந்தால் தாங்கள் கொடுக்கப்போகும் நல்ல செய்தியால் அவன் மனம் மகிழ்வான் என்றே நம்பினர். அவர்களை யார் என்று அறிந்த ஏரோதன் அவர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்தான். ஆனல் அவர்கள் சொன்ன செய்தியைக் கேட்டதும் அவனது முகம் ஓடிக் கறுத்தது. பதில் ஏதும் சொல்லாமல் சற்றுநேரம் சிலையாக நின்றான். அவன் உணர்ச்சிகள் எப்படியிருந்தன என்பதை அந்த ஞானிகள் மூவரும் அறியவில்லை.

## 12

அந்த மாட்டுத் தொழுவத்தில் துப்புரவான ஒரு மூலையிலே மரியாள் படுத்திருந்தாள்—அவள் அணைப்பினிலே கிடந்த குழந்தையேசு அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார். அவர் தூங்கும் போதுதான் எத்தனை கொள்ளையழகு. இந்தக் குழந்தைக்கு அன்னையாகத் தான் தெரிவு செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதை நினைத்து அவள் பெருமைப்படவில்லை. அவளுக்கே உரித்தான தாழ்மையுடன் இறைவனுக்கு நன்றிகூறிக்கொள் வாள்.

அன்று ஏனோ அவள் கண்களை உறக்கம் தழுவ மறுத் தது. தன் குழந்தையைப் பார்க்கும்போது ஒன்றன் பின் ஒன்றாக பழைய வரலாறுகள் அவள் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தன. முதன் முதலில் அக் குழந்தை அவள் வயிற்றிலே ஜெனித்த சம்பவம்—

அன்றொருநாள் வழக்கம்போல் அவள் செபித்துக் கொண்டிருந்த பொழுது தேவதூதன் அவள்முன் தோன்றி ''அருள் நிறைந்தவளே வாழ்க ஆண்டவர் உம்முடனே'' என்றதும் அவள் அதிர்ந்தே போனாள். அச்சத்தால் அவள் உடல் நடுங்கத் தொடங்கியது. இந்த நிலையில் அவளுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை அவள் திகைத்து நிற்க அவனே மீண்டும் கூறினான். ''மரியே அஞ்சாதீர் கடவுள் அருளை நீர் அடைந்துள்ளீர். இதோ உம் வயிற்றில் கருத் தரித்து ஒரு மகவைப் பெறுவீர், அவர் மேன்மைமிக்கவ ராயிருப்பார், உன்னதரின் மகன் எனப்படுவார். அவரு டைய தந்தையான தாவீதின் அரியணையை ஆண்டவரா கிய கடவுள் அவருக்கு அளிப்பார், அவர் யாக்கோபின் குலத்தின் மீது என்றென்றும் அரசாள்வார் அவருடைய ஆட்சிக்கு என்றும் முடிவிராது.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவளது அச்சம் இன்னும் பல மடங்காயிற்று. சூசை என்பவருக்கு தான் மண ஒப்பந்தமாகியுள்ளதை அவள் அறிவாளே ஒழிய அவர் முகத்தைத் தானும் அவள் இதுவரையில் கண்டதில்லை. அப் படியிருக்க தான் கருத்தரிப்பதும், தாயாவதும், பெயரிடு வதும் எப்படியாகும் என்ற சந்தேகம் மனதில் எழ ''இது எப்படியாகும் நானோ என் கணவனை அறியேனே'' என்றார்.

மரியாளின் இந்த வார்த்தைகளைக் கேட்ட தேவதூதன். ''பரிசுத்த ஆவி உம்மீது வருவார், உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுளுடைய மகன் எனப்படும். இதோ உம்முடைய உறவின ளான எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத் தரித்திருக்கிறாள். மலடி எனப்படும் அவளுக்கு இது ஆறும் மாதம் ஏனெனில் கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை''

இந்த வார்த்தைகளை தேவதூதன் சொன்னதும் அவ ளுடைய மனப்பயம் நீங்கியது. ''இதோ ஆண்டவருடைய அடிமை உமது வார்த்தையின்படியே ஆகட்டும்'' என்று தனது சம்மதத்தை அவள் வழங்கியதும் தேவதூதன் தோன் றியதுபோல் மறைந்துவிட்டான்.

அவளுடைய மகிழ்ச்சி இரட்டை மகிழ்ச்சியாக இருந் தது. காரணம் தான் இரட்சகரின் தாயாகப் போவது மட்டுமல்ல, இத்தனைகாலமும் மலடியெனும் களங்கத்தைச் சுமந்து கொண்டே முதுமையை அடைந்து விட்ட அவள் உறவினள் எலிசபெத் கடவுள் அருளால் கருத்தரித்தது. உடனே அவளுக்கு எலிசபெத்திடம் சென்று அவளைப் பார்க்க வேண்டும். வாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவே யூதேயாவின் மலைப் பகுதியில் உள்ள எலிசபெத் தின் வீட்டையடைந்தாள். எலிசபெத்தைக் கண்டதும் வாழ்த்திக் கொண்டே சென்றாள்.

மரியாளைக் கண்ட எலிசபெத் தன் முதுமையையும். தாய்மையடைந்துள்ள நிலைமையையும் மறந்து துள்ளி ஓடி வந்து மரியாளை அணைத்துக் கொண்டாள். மரியாள் தேவ அன்னையானதை இறைவன் அருளால் அறிந்து கொண்ட எலிசபெத் ''பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே. என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் வாய்ப் புப் பெற்றது எப்படி? உமது வாழ்த்து என் காதில் ஒலித் ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை அக்களிப்பால் துள் ளியது ஆண்டவர் வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்த வள் பேறு பெற்றவளே'' என்று சத்தமிட்டுக் கூற அவள் நெஞ்சமெல்லாம் புளங்காகிதமடைந்தது. உடனேயே அந் தத் தகமையை தந்த இறைவனை வாழ்த்தினாள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாழ்த்தினை குழந்தையை நாற்பதாம் நாள் காணிக்கை கொடுக்க ஜெருசலேம் ஆலயத்துக்கு குழந்தையை கொண்டுபோனபோது கேட்டாள். அங்கே சிமியோன் எனும் அந்த முதியவர் தூய ஆவியின் அருளால் அக்குழந்தைதான் வாக்குப் பண்ணப்பட்ட மெசியா என்பதை அறிந்து ''ஆண்டவரே இப்போது உம் அடியானைப் போகவிடும் ஏனெனில் உமது வாக்கு நிறைவேறிற்று. மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இதுவே புறவினத்தாருக்கு இருளகற்றும் ஒளி. இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை'' என்று இறைவனைத் துதித்துப் பாடினார்.

அதே வேளையில் கோவிற்பணி புரிந்து கொண்டிருந்த எண்பத்துநான்கு வயதுடைய அன்னு எனும் விதவையும் பாலகனைக் கண்டு மகிழ்ந்தாள். தன் குழந்தைக்கு கிடைத்த புகழாரத்திடையே மகிழ்ந்து, மரியாள் மிதந்து கொண்டிருக்கையில் சிமியோன் சொன்ன அந்த வார்த்தைகள் அவள் இதயத்தை ஊடுருவிச் சென்றன, ''இதோ இப்பாலகன், இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ, எழுச்சியாகவோ அமைந்துள்ளான்; எதிர்பார்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்; உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் இதனுல் பலருடைய உள்ளங்களில் இருந்து எண்ணங்கள் வெளிப்படும்''

அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை அவள் அப்பொழுது பூரணமாகப் புரிந்து கொள்ளாவிடினும் பிற்காலத்தில் தான் கலங்கவேண்டிய நிலையுண்டு என்பதை மட்டும் புரிந்து கொண்டாள்.

அடுத்து கீழ்த்திசையில் இருந்துவந்த மூன்று மகாஞானிகள் பொன், தூபம், மீறை ஆகியனவற்றை பரிசாக அளித்து புகழ்ந்து வணங்கியபோது ஏற்பட்ட இன்பம். இவற்றையெல்லாம் திரும்பத் திரும்ப நினைத்து மகிழ்ந்தபடியே உறங்கிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடு இரவில் சூசை திடீரென ''மரியாள், மரியாள் எழுந்திரு, நம் குழந்தைக்கு ஆபத்து உடனே எகிப்துக்கு ஓடவேண்டும்'' என்று எழுப்பியபோது அவள் அதிர்ந்து விட்டாள். அவள் கண் விழித்தபோது சூசை மூட்டை முடிச்சுகளுடனும் கழுதையுடனும் பிரயாணத்திற்கு ஆயத்தமாக இருந்தான். மரியாள் எதுவும் பேசவில்லை. சூசையின் நிலையில் இருந்து ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்தவளாக மறுவார்த்தையின்றி குழந்தையை அணைத்தபடி சூசையைப் பின்தொடர்ந்தாள்.

## 13

கொட்டும் பனியின் கூதலும் நடுக்கமும் அந்த நள்ளிரவில் பிரயாணம் மேற்கொள்வதற்குத் தடையாக இருந்த போதிலும் குழந்தையை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டுமென இருந்த அந்தத் துடிப்பில் மரியாளும் சூசையும் குழந்தையுடன் எகிப்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள். குழந்தையை பனிக்குளிர் தாக்கிடாத வண்ணம் பாதுகாப்பதிலேயே மரியாளின் முழுக் கவனமும் இருந்தது. சூசை அடிக்கடி பின்னுக்குத் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றார். அவர் இதயமோ எங்கே ஏரோதனின் படைவீரர்கள் வந்துவிடுவார்களோ என்று எதிர்பார்த்து அடித்துக் கொண்டிருந்தது.

குழந்தையைப் பார்க்க வந்திருந்த மூன்று ஞானிகளும் ஏரோதனைப்பற்றிப் புகழ்ந்து கூறியிருந்தார்கள். அவன், அவர்களை வரவேற்று உபசரித்தது, தானும் வந்து குழந்தையைத் தரிசிக்க வேண்டும் என்று கூறியதாக அவர்கள் சொல்லக் கேட்கவும் சூசைக்குப் பெருமை நிலைகொள்ளாமல் இருந்தது. அந்த ஞானிகளும் போய்விட்டனர். அவர்கள் போகும் வழியில் ஏரோதிடம் அறிவித்து விட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார்களோ என்னவோ? ஆனால் அன்றிரவு சூசையின் கனவிலே தேவதூதன் அறிவித்த செய்தி — எச்சரிக்கை! அவர்கள் கூறியதற்கு எதிர்மாறாகவும், ஆச்சரியத்தையும் அச்சத்தையும் தருவதாகவும் இருந்தது.

ஞானிகள் மூவரும் குழந்தை இருக்கும் இடத்தை ஏரோதுக்குக் கூறியிருப்பார்களோ என்ற அவரது எண்ணத்திற்கு மாறாகவே நிகழ்வுகள் நடந்து முடிந்தன. அந்த ஞானிகள் குழந்தையைத் தரிசித்த மகிழ்விலும், மன நிறைவிலும் தங்கள் தகுதி, அந்தஸ்து அனைத்தையும் மறந்து குழந்தை இருந்த குடிலே பெரும் மாளிகையை விடச் சிறந்த இடம் என்பதை மனதில் கொண்டு துயின்றனர். அன்றிரவு அவர்கள் துயில்கையில் அவர்களுக்கு கேட்ட அந்த அசரீரி வார்த்தைகள்! "எரோதிடம் மீண்டும் செல்ல வேண்டாம்'' என்று கட்டளையாகவே ஒலித்தன. அவர்கள் அந்தக் கணமே புறப்பட்டு ஏரோதன் கண்களில் படாது வேறுவழியாகச் சென்று நாட்டின் எல்லையைக் கடந்தனர். இதை மரியாளோ, சூசையோ அறியவில்லை.

வழிநெடுகிலும் சூசையின் நெஞ்சத்தில் பழைய நினைவுகள் மீண்டன. தனது சீவியம் முழுவதும் தான் ஒரு பிரமச்சாரியாகவே வாழ்ந்துவிட முடிவு செய்திருந்ததையும் தான் தெய்வசித்தத்தின் பெயரால் மரியாளுக்கு கணவனாகவேண்டி வந்ததையும், திருமணமாகியும் தானும் மரியாளும் தமக்குள்செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இருவரும் பிரமச்சாரிகளாகவே வாழ்ந்துகொண்டு வந்திருப்பதையும் நினைத்துக் கொண்டார். மகிழ்வோடு கழிந்த அவர்களது இல்லறத்திலே ஒரேயொரு கட்டத்தில் மட்டும் தான் கலக்கம் ஏற்பட்டது. அதன் காரணத்தை அவரால் நம்பவே முடியவில்லை. அப்படியிருந்தும் அது உண்மையானதாக இருக்கவே அவரால் சகித்துக் கொள்ளவும் முடியவில்லை.

திருமணத்தின் பின்னர் இருவரும் பிரமச்சாரிய விரதத்தையே கடைப்பிடித்து ஒழுகிவரும்பொழுது மரியாள் எப்படி ஒரு குழந்தைக்குத் தாயாகும் தகைமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைய முடிந்தது. மரியாளோடு வாழ்ந்த அந்தச் சொற்ப நாளில் அவளது களங்கமற்ற தன்மையையும், பழக்க வழக்கங்களையும் அறிந்திருந்த அவரால் அவள் கன்னிமை தவறியவள் என்பதை நம்பவே முடியவில்லை. அதேவேளை தான் தந்தையில்லாத குழந்தைக்குத் தானே தந்தை யென்று கூறவும் அவர்மனம் ஒப்பவில்லை. அதற்காக அவள் திருமணத்தின் முன்னரே குழந்தைக்குத் தாயாகும் நிலையை பிறர் அறிய வெளியிட்டு அவளை அவமானப் படுத்தி அவள் அடையக்கூடிய அவமானத்திலும், துன்பத் திலும், நகைப்பிலும் தான் அமைதி பெறவும் விரும்ப வில்லை, அதனுல் ஏற்பட்ட உள்ளப் போராட்டத்தின் முடி வாகத்தான் ஒரு நாள் மரியாளைவிட்டு இரவோடு இரவாக எங்கேயாவது ஓடிவிடத் திட்டமிட்டார். அதற்கு முயற்சி யும் எடுக்கத் துணிந்தார்.

அன்று இரவு மரியாள் அயர்ந்து தூங்கிய பின்னர், தான் வீட்டை விட்டு ஓடிவிடுவது என்ற எண்ணத்தோடு இருந்த சூசை தன்னை அறியாமலே கண்ணயர்ந்துவிட்டார். அப் பொழுது கனவு அற்புதமான கனவு, மேக மண்டலங்களின் நடுவே முகில்களோடு முகிலாக அழகிய இளைஞன் ஒருவன் நீந்தி வருகின்ருன். அவனது ஆடைக்கும் அவனைச் சூழ்ந் திருந்த வெண்முகிற் கூட்டத்துக்கும் வேற்றுமையே தெரிய வில்லை. விண் மீன்கள் போன்ரு அவன் விழி மீன்கள் மின்னி ஒளிர்ந்தன. அந்த இளைஞன் தான் தேவதூதன் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டான். பின்னர், ''சூசையே, தாவீதின் மகனே! உம்முடைய மனைவி மரி யாளை ஏற்றுக் கொள்ள அஞ்சவேண்டாம் ஏனெனில் அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான் அவள் ஒரு மக னைப் பெற்றெடுப்பாள் அவருக்கு இயேசு என்று பெயரிடு வீர், ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங் களிலிருந்து மீட்பார்.''

இந்த வார்த்தைகளை உரைத்த மறுகணமே தூதுவன் மறைந்து விட்டான். சூசை திடுக்கிட்டு விழித்தனர். தான் செய்யவிருந்த மாபெரும் தவறை உணர்ந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமச்சாரியாக வாழ்ந்த தன்னை இல்லறத்தில் இறைவன் இணைத்தது இத்தகைய தொரு மகத்தான காரியத்தின் பொருட்டே என்பதை அறிந்து கொண்டார். தன் மனைவி யின் வயிற்றில் உருவாகியிருக்கும் குழந்தைதான் உலக மீட் பர், எதிர்பார்க்கப் பட்டுக்கொண்டிருக்கும் மெசியா, இரட் சகர் என்பதை எண்ணுகையில் அவரால் பெருமையைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அன்றைக்குப் பிறகு மரியாளைக் காணும் தோறும் சாதாரண ஒரு தாய்மையுற்ற பெண்ணையல்ல தெய்வம் குடிகொண்டிருக்கும் கோவிலைக் காண்பதுபோல் எண்ணினர். அதன் பொருட்டே அந்தக் குழந்தைக்காக எதையும் செய்யத் துணிவுகொண்டார். எந்தவித இன்னலையும் ஏற்கச் சித்தமானர்.

வழிநெடுகிலும் சூசையின் மனதில் இந்நினைவுகள் வட்ட மிட வட்டமிட அவர்கள் நடந்துகொண்டேயிருந்தனர்.

## 14

எலிசாவையும், பிள்ளையையும் ஷீலாவையும் பல இடங்களில் தேடியும் அவர்கள் இருக்கும் இடத்தை மார்க் கூஸால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவேளை எலிசாள் சூசையையும் மரியாளையும் சந்தித்து அவர்களுடன் இருக் கின்றுளோ என்ற சந்தேகத்தில் அவர்களைப்பற்றிய குறிப்பு களை தன் ஊழியரிடம் கூறி அவர்களையும் தேடும்படி தன் ஊழியரிடம் கட்டளை விடுத்திருந்தான்.

அன்றுகாலை வழக்கம்போல் அரண்மனைக்குப்போக ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது ஊழியன் ஒருவன் வந்து அவன் கூறிய அடையாளங்களைக் கொண்ட ஒரு மனிதனைக் கண்டதாகவும், அவனைப்பற்றி விசாரித்ததாக வும் அவன் பெயர் சூசை, மனைவி பெயர் மரியாள், நச ரேத்தில் இருந்து குடிசனமதிப்பெடுப்பின் பொருட்டு வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள். தங்க இடமில்லாத காரணத்தால் பெத்தலேகமில் மாட்டுத் தொழுவம் ஒன்றில் தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருப்பதாகவும் அறிவித்தான். இந்தச் செய்தியைக் கேட்ட அந்தக்கணம் அவன் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. அவன் குறிப்பிட்ட இடத்திற்கு உடனே செல்வதற்கு தனது குதிரையின் மீது தாவினன். அந்தவேளை ஒரு போர்வீரன் தனது புரவியில் அங்குவந்து சேர்ந்தான். அவன் அரசனிடம் இருந்து வந்தவன், மிகவும் முக்கியமான விடயங்களுக்கு மட்டும்தான் ஏரோதன் அவனை அனுப்புவது வழக்கம். அந்த வீரன் தன் இடையில் சொருகிவைத்திருந்த ஓலையை எடுத்து மார்க்கூஸிடம் நீட்டினன் அதில் ''முக்கிய விடயம் உடன் வரவும்'' என்று குறிப்பிட்டிருந்தது. அவன் உற்சாகமெல்லாம் எங்கோ பறந்தது. பெத்தலேகமுக்கு போவதா? அரண்மனைக்குப் போவதா? என்று அவன் மனம் இருதலைக் கொள்ளியெறும்பாய்த் தவித்தது.

கடந்த இரண்டு மூன்று தினங்களாக ஏரோதன் சரியான மனநிலையில் இல்லை என்பதை மார்க்கூஸ் நன்கு அறிவான். ஒரே சிந்தனையும், எதற்கெடுத்தாலும் பாய்ந்து விழுவதுமாக இருந்த அவன் பெரும் குழப்பத்துக்குள்ளாகியிருக்கின்றான் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவனுடைய குழப்பத்துக்கான காரணத்தை ஓரளவு மார்க்கூஸ் ஊகித்து வைத்திருந்தான். கீழ்த்திசையில் இருந்துவந்த அந்த மூன்று அறிஞர்களும் யூதேயாவில்தான் மெசியா பிறந்துள்ளார். அதன் அடையாளம்தான் அந்தத் தாரகை என்று கூறியபோது அவன் மனம் இருண்டதை அறிந்து கொண்டது மார்க்கூஸ் ஒருவன்தான்.

தனது ஆட்சிக்கு எதிராக எந்த ஒரு சக்தியும் முளைக்கக் கூடாது என்பதே அவனது கொள்கை. அதன்பொருட்டு அவன் பலரை சந்தேகத்தின் பேரில் கொலை செய்துமிருக்கிறன். இந்த நிலையில் யூதகுலத்தை விடுவிக்கும் மெசியா தனது நாட்டிலே பிறந்திருப்பதை, தனது ஆட்சியை குலைக்கக் கூடிய அந்த சக்தி உதித்திருப்பதை ஏரோது எப்படி அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கமுடியும். ஒரு சந்தர்ப்பத்தில் அவனது ராஜ விசுவாசத்தையே பரீட்சித்துப் பார்த்தவனுயிற்றே. ஆயினும் அந்தச் செய்தியைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தவன் போன்று தனது ஞானிகளேயும், சாஸ்திரிகளேயும், வானநூல் அறிஞர்களேயும அழைப்பித்து அவர்களிடம் வினவியபோது அவர்கள் ஆராய்ந்து கூறி அந்த முடிவு ''யூதேயாவில் உள்ள பெத்தலேகமில் பிறப்பார், ஏனெனில் யூதா நாட்டு பெத்தலேகமே யூதாவின் நகரங்களிலே நீ சிறியதே இல்லை. ஏனெனில், என் மக்கள் இஸ்ராயேலரை மேய்க்கவேண்டிய தலைவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்'' என்று இறைவாக்கினர் எழுதியுள்ளார் என்றனர்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் ஏரோதன் இடி இடியெனச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் பொருளென்ன? மகிழ்வா, ஆவேசமா என்று இனங் கண்டுகொள்ள முடியாது இருந்தது. மற்றவர்களால் அதை இனங்கண்டு கொள்ள முடியாமல் இருந்தாலும் அது ஆத்திரத்தின் வெளிப்பாடு என்பதை உணர்ந்து கொண்டவன் மார்க்கூஸ் ஒருவன்தான்.

ஏரோதன் குரலில் மகிழ்ச்சியை வலிந்து வரவழைத்துக் கொண்டு அந்த ஞானிகளிடம் ''நீங்கள் சென்று குழந்தையைப்பற்றி கருத்தாய் ஆராய்ந்து பாருங்கள்; அவரைக் கண்டபின் எனக்குத் தெரிவியுங்கள். நானும்போய் அவரை வணங்கவேண்டும்'' என அவர்களிடம் கூறினுன். அன்று அந்த ஞானியர்க்கு விருந்து உபசரணைகள் எல்லாம் வெகு சிறப்பாக நடந்தது. மீண்டும் அந்த தாரகை வானில் தோன்றவே அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அவர்கள் சென்றதும் ஏரோதன் தனது மந்திராலோசனை சபையைக் கூட்டினுன். அவர்கள் வந்தது முதல் அடக்கிக் கொண்டிருந்த உள்ளக் குமுறலை அங்குதான் அவன் வெளிக் காட்டினுன். 'பிறந்திருப்பது மெசியாவானுல் அக்குழந்தை உயிருடன் வாழக் கூடாது' என்று ஆவேசமாக கூக்குரல் இட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியானால் இப்பொழுதே அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அக்குழந்தையை கொன்று விடுவது தானே'' என்றனர் ஏனையவர்.

''கூடாது; இவர்கள் கூறும் அக்குழந்தை உண்மையில் மெசியாதானா என்பதை தீர்க்கமாக அறியாமல் எந்த முடிவுக்கும் நாம் வரக்கூடாது. அல்லாமலும் அவர்கள் பின்னே சென்று அதுதான் மெசியாவென அறிந்துகொண்டால் என் உள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நானே அந்த இடத்தில் கொலைகாரனாகி விடக்கூடும், 'அது பின்னர் அந்த அந்நியர் முன்பு நான் எனக்குக் களங்கத்தைத் தேடிக்கொள்வதுடன், அவர்கள் நாடுகள் எனக்கெதிராக கிளம்புவதற்கு அடிகோலும். ஏனெனில் அவர்கள் ஞானிகளாக இருப்பினும் தோற்றத்தில் அரச பரம்பரையினராய் இருப்பார்கள்போல் தெரிகின்றது. எதற்கும் போகும் வழியில் அவர்கள் திரும்பி வருவார்கள்தானே, அவர்களின் வாயால் உண்மையை அறிந்துகொண்டு அவர்கள் போனதன் பின்னர் அந்தக் கைங்கரியத்தைச் செய்து முடிப்போம்'' என்று கூறினான் ஏரோதன்.

ஏரோதன் அப்படிக் கூறியபோது ஏரோதன் ஒரு வேளை ஏமாற்றப்படக்கூடும் என்று மார்க்கூஸுக்குத் தோன்றிய போதும் ஏரோதனுடைய கருத்தை எதிர்த்துச்சொல்ல அவனுக்கு ஏனோ மனம் ஏவவில்லை. அப்பொழுது அவனிருந்த மனநிலையும் அதற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

# 15

தினங்கள் மூன்று ஆகியும் பெத்தலேகம் சென்ற ஞானிகள் மீண்டும் ஏரோதன் அரன்மனைக்கு வராதது ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் அவனுக்கு ஊட்டிவிட்டிருந்தது. இந்த நிலைமையில் பெத்தலேகம் எங்கும் அந்த மூவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லடை போட்டுத் தேடும்படி உத்தரவிட்டான். ஆனுல் யூதேயாவின் எல்லைக் காவலர்கள் 'அந்த மூவரும் இரண்டு தினங்களுக்கு முன்னரே இரவோடு இரவாக எல்லையைத் தாண்டிச் சென்றுவிட்டார்கள் என்பதை அறிவித்த போது தான்; தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அறிந்து உள்ளம் குமுறினுன். உடனேயே மார்க்கூஸை அழைத்து வரும்படி தனது நம்பிக்கைக்குரிய தூதுவனிடம் ஓலை கொடுத்து அனுப்பினுன்.

அந்தத்தூதுவன் மார்க்கூஸின் வீட்டை அடைந்தபோது தான் மார்க்கூஸ் தனது ஊழியன் சூசையைப் பற்றிக் கூறிய செய்தி கேட்டு சூசையைக் காணப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனுல் ஏரோதின் கட்டளை உடனே வரும்படி இருந்ததால் மன்னனின் மனுேநிலைக்குத் தகுந்தவாறு அவனை உடனே காண்பதுதான் சரியென்று அரண்மனையை நோக்கிச் சென்ருன்.

அரண்மனையில் ஏரோதன் சிங்கம் போல் கர்ச்சித்துக் கொண்டு நின்ருன். மார்க்கூஸைக் கண்டதும்தான் தாமதம் ''மார்க்கூஸ் உடனேயே புறப்படு, வேறு பேச்சு வேண்டாம், அந்தக் கீழ்த்திசைக் காரன்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள். எனது ஆட்சிக்கு எதிராக முளைத்திருக்கும் அந்தக் காளானை வாழவிடக்கூடாது, அந்தக் குழந்தையை மட்டும் தேடிக் கண்டுபிடித்துக் கொல்ல அவகாசமில்லை. யூதேயாவின் மூலைமுடுக்கெல்லாம் நுழைந்து இரண்டு வயதுக்கு உட்பட்ட ஆண்குழந்தைகளையெல்லாம் வெட்டிக் கொன்றுவிடுங்கள்'' என்று அலறினுன்.

இந்த உத்தரவைக் கேட்டதும் மார்க்கூஸ் கல்லாகச் சமைந்து விட்டான். என்னவாகத்தான் இருப்பினும் ஏரோதனின் இந்த உத்தரவு மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்டது என்று அவனது உள்மனம் கூறியது. ஆயினும் அரச கட்டளையை நிறைவேற்ற வேண்டிய அவன் அதற்கும் தயாராஞன். ஆனுல்! திடீரென அவன் மனதில் சூசை குடும்பத்தின் நினைவு தோன்றியது. 'அவர்களுக்குப் பிறந்திருப்பதும் ஆண் குழந்தைதானே அதை எப்படியும் காப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்ற வேண்டும்' என்ற எண்ணம் உண்டாகவே தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு ஊழியனிடம் அவர்களை பிள்ளையுடன் ஓடித்தப்பி விடும்படி சொல்லியனுப்பினான். ஆனால், சூசையும் மரியாளும் முந்திய இரவே தேவதூதன் ஏவுதலால் எகிப்தை நோக்கி ஓடிவிட்டதை அவன் எப்படி அறிவான்?

''சூசையின் குடும்பம் அங்கு இல்லை'' என்ற சேதியை ஊழியன் வந்து சொன்னபின்னர், எங்கு போனார்களோ என்ன ஆனார்களோ என்று ஒரு முடிவுக்கு வர முடியாதவனாக ஏரோதன் உத்தரவை நிறைவேற்றப் புறப்பட்டான். மார்க்கூஸின் தலைமையிலே யூதேயாவின் இரண்டு வயதுக் குட்பட்ட ஆண் குழந்தைகளையெல்லாம் அறுத்தெறிவதற்கென்று உருவிய வாட்களுடன் கொலைப்படை புறப்பட்டது. அதே வேளையில் ஷீலாவும், எலிசாளும், பிள்ளையுடன் யூதேயாவுக்குள் பிரவேசித்தனர்.

அன்றைய பொழுது யூதேயாவில் ஏன்தான் விடிந்ததோ? கண்ணீரும் செந்நீரும் கரைபுரண்டோடியது. அவலக் குரலும், பயங்கரமும் எங்கும் எதிரொலித்தது.

இஸ்ரவேலின் ஆண் சந்ததியை அழித்துவிட வேண்டும் என்பதற்காக மோயீசன் பிறந்த காலத்தில் எகிப்திய மன்னன் பார்வோன் கட்டளையிட்ட போது ஆண்பிள்ளைகளைக் கொடிய வீரரின் கொலைவாட்களுக்குப் பறிகொடுத்தபோது அன்று எழுந்த அவலக்குரல் போன்று—இஸ்ராயேல்இனத்தை இறைவன் விருப்பின்படி மோயீசனுடன் அனுப்ப மறுத்த எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகள் யாவும் இறைவனின் தூதுவனால் கொல்லப்பட்டபோது எழுந்த பயங்கர அழு குரல் போல்—அன்றும் யூதேயாவின் மக்களின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

பச்சிளங் குழந்தைகளின், தலைகளும், உடல்களும், வெட்டுண்ட அங்கங்களும் குதிரை வீரரின் குதிரைக்கால்களால் பந்தாடப்பட்டன. பெற்றவளின் கையில் இருந்து பிள்ளைகளைப் பறித்தெடுத்து பெற்றவர்கள் ''மகனே மகனே'' என்றஅலறலும்-பிள்ளை தன் பிஞ்சுவாயால் 'அம்மா, அம்மா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைத்துக் கொண்டிருக்கும் போதே அதன் தலை உருண்டு விழுகின்ற காட்சி- ''பிள்ளையைத் தரமாட்டேன் என்று கொண்டு ஓடிக் களைத்து விழுந்த தாயிடம் இருந்த பிள்ளையை வெட்டிய காட்சி—பிள்ளையை வெட்டுவதைக் கைகளால் தடுக்க முயன்ற தாய்மார் தங்கள் கைகளையும், பிள்ளையையும் இழந்த காட்சி—மார்போடு அணைத்து நிறை குழந்தையை ஊடுருவிய வாள் தாயின் நெஞ்சையும் ஊடு ருவிச் செல்ல தாயும், சேயும் மாண்ட பரிதாப கரமான காட்சி – அப்பப்பா... பயங்கரம்! மாபயங்கரம்.

விடிந்த பொழுது சரிந்து கொண்டிருந்தது. தம் கண் ணிற் சந்தித்த பிள்ளைகளை யெல்லாம் வெட்டி வீழ்த்தி இராஜ விசுவாசத்தை நிலை நாட்டிவிட்ட நிம்மதியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர் வீரர்கள்.

மார்க்கூஸைப் பொறுத்த வரையில் மனநிம்மதியே இல்லை—அன்று முழுவதும் அங்கு நடந்த பயங்கரங்க ளையும், அந்தப் பயங்கரங் களுக்குத் தானே தலைமை வகுத் துச் செல்லவேண்டி ஏற்பட்ட கொடுமையையும் எண்ணிக் கொதித்தபடி மாளிகையை நோக்கி வந்தான். மாளிகையை அடைந்த அவனுக்கு பேரிடி ஒன்று காத்திருந்தது, அங்கே—

மாளிகையின் வெளிக்கூடத்தில் எலிசாளும், பிள்ளையும். இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அவர்களின் அருகில் நின்ற ஷீலா மார்க்கூஸை கண்டதும் 'ஓ' வென அலறினாள்.

''எலிசாள்... என் உயிரே'' என்று கூவியபடி ஓடிச்சென்று எலிசாளின்மேல் விழுந்தான் மார்க்கூஸ்... பக்கத்தே இரு துண்டங்களாக்கப்பட்டு கிடந்த தன் ஆண்குழந்தையைக் கண்ட அவன் ''ஐயோ... ஐயோ நான்பெற்ற செல்வமே பெற்ற பிள்ளையை பிணமாகப் பார்க்கும் பேறுதானடா எனக்குக் கிடைத்தது. என் மகனே அந்தக் கொலைப்படைக் கும் நானே தலைமை தாங்கி வந்தேனேடா''

''எஜமான் இவ்வளவு நாளும் உங்களிடத்தில் வரமாட் டேன் என்று பிடிவாதத்தில் சீரியாவில் ஒரு சத்திரத்தில் இருந்த அம்மாவை, பிடிவாதமாக உங்களோட இணைச்சு வைக்க வேணும் என்று கூட்டி வந்தேனே நான்பாவி கடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாய் எல்லாம் இப்படியாய் முடிஞ்சுதே அவளை நான் அங்கேயே விட்டுட்டு வந்தேனு? பிள்ளையைக் காப்பாற்றப் போராடிய அம்மாவை உங்கள் வீரர்கள் வெட்டி விழுத்திப் போட்டுத் தானே உங்க பிள்ளையை வெட்டினுங்க— எஜமான் அம்மாவுக்கு இன்னும் உயிர் பிரியவில்லை அவளைக் காப்பாற்றுங்க–''

அந்த வேளையில் எலிசாளிடமிருந்து ஒரு சிறு முனகல் எழுந்தது. சற்றுக் கண்விழித்தாள். தன் அருகே மார்க்கூஸ் நிற்பதைக் கண்டதும் அவள் முகம்மலர்ந்தது. அவள் ஏதோ பேசமுயன்ருள் ''எலிசாள் எலிசாள் இந்தப் பாவி இப்படிக் கோலத்திலா உன்னைக் காண வேண்டும்?'' என்று அழுத மார்க்கூஸை சைகை மூலம் தன் அருகே அழைத்தாள். அவள் முகத்தருகே தன் முகத்தைக்கொண்டு சென்ருன், அவள் வாய் மெல்ல மெல்ல வார்த்தைகளை உதிர்த்தது ''மார்க்கூஸ்... நீங்க எனக்குத் துரோகம் செய்தால் நான் உயிர் வாழமாட்டேன் என்று சொன்னேன் அல்லவா... அது நிறைவேறிற்று பார்த்தீர்களா? உங்க பிள்ளையை உங்களிடம் ஒப்படைக்கவே வந்தேன். ஆனுல் உயிரோட ஒப்படைக்க முடியவில்லை... மன்னித்து விடுங்கள். இதோ உங்கள் பிள்ளை...'' மேற்கொண்டு அவள் பேசவில்லை. ''மார்க்கூஸ்'' என்று தன்னுல் முடிந்தமட்டும் குரலெடுத்துக் கூவிய அவள் அவன் கரங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். கண்கள் அவன் முகத்தைப் பார்த்தபடியே நிலைத்துவிட்டன. அவள் உயிர் பிரிந்துவிட்டது.

''எலிசாள்'' என்று அந்த மாளிகையே அதிரும் வண்ணம் மார்க்கூஸ் அலறினுன்— எலிசாள் உயிர் பிரியுமுன் சொன்ன வார்த்தைகள். அவன் நெஞ்சில் நெருப்பாய்ச் சுட்டன. அவன் அவளுக்கு செய்துகொடுத்த சத்தியம் நெஞ்சில் நெருப்பாய்ச் சுட்டது. அவன் அவளுக்கு பின்னர் செய்த துரோகம் நெஞ்சில் நெருப்பாய்ச் சுட்டது. எலிசாளினதும், தன் ஒரே பிள்ளையினதும் மரணங்கள் அவன் நெஞ்சில் நெருப்பாய்ச் சுட்டன, அவன் இதயத்தைச் சுட்ட சங்கு போன்று வெண்மையுறச் செய்தது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியோடு நாலு வார்த்தை . . .

"நான் ஒரு முற்றுப்புள்ளி'' எனும் எனது இந்த ஆக்கத்தின் முடிவு என்னுரையோடு முடிவதே பொருந்தும்.

முன்னுரை, முகவுரையெனும் சாதாரண மரபுகளை நீக்கி ஆக முடிவுரையோடு நின்று விடுகின்றேன் — அந்த முடிவுரையிலும் எனது இந்நூல் பற்றிய விமர்சனத்தில் ஈடுபடாது; இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த நல்லவர்களுக்கு நன்றி நவிலுவதே எனது நோக்கமாகும். இதன் தரம்பற்றி விமர்சிப்பது வாசகர்கள் பணியே –

நன்றி நவில நான் முற்படுங்கால்; முதலில் எழுதுகோல் ஏந்தி ஏதோ சிலவற்றை எடுத்தியம்பும் ஆற்றலை எனக்களித்த என் கல்லூரித்தாய் மன்னார் புனித சவேரியார் கல்லூரிக்கும் –

இரண்டு வருடங்கள் தமது ஸ்தாபனத்தில் என்னையும் ஒரு தொண்டனாக வைத்திருந்து ''தமிழன் சிந்திய இரத்தம்'' ''புத்தளத்தில் இரத்தகளம்'' ஆகிய எனது நூல்களை தமது வெளியீடாக வெளியிட்டு இத் துறையில் எனக்கு ஊக்கமளித்த 'சுதந்திரன்' பத்திரிகையாளருக்கும் —

வானொலி 'புதிய உலகம்' நிகழ்ச்சி மூலம் எனது நாடகங்களை ஒலிபரப்பியும், புதிய உலகம் சஞ்சிகை மூலம் மேலும் என்னை எழுத ஊக்குவித்துக் கொண்டிருப்பதுடன் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுள்ள புதிய உலகம் ஆசிரியர் கரவையூர் செல்வம் அவர்களுக்கும்—

இந்நூலில் உள்ள கதைகளை தமது பத்திரிகையில் வெளியிட்ட, சத்தியவேத பாதுகாவலன், ஆசிரியர் அருள் திரு. மேரி யோசேப் அடிகள், 'சுடர்' ஆசிரியராகவிருந்த திரு. கோவை மகேசன் ஆகியோர்க்கும்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இந்நூலை தமது வெளியீடாக வெளியிட முன்வந்ததுடன் என்னை அறிமுகம் செய்து வைத்துள்ளவரும், மேலும் எனது சேவை வளரவேண்டும் என்று ஆசிப்பதுடன் அதற்கான ஆதரவையும் நல்கிவரும் புதிய உலகம் வெளியீட்டாளர் அருள்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளாருக்கும் —

இப்படியொரு நூல்வர வேண்டும் என்று இந்நூலை வெளியிட ஆலோசனை தந்து, அதைச் செயல்படுத்த உறுதுணையாக நின்ற அருள்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகள், அருள்திரு. பஸ்ரியன் அடிகள், அருள்திரு. ஜெயசேகரம் அடிகள் ஆகியோர்க்கும் —

எனது இந்த நூல் வெளிவரவேண்டும் என்ற ஆர்வத்தில் நூல் வெளிவருமுன்னரே அதற்காக முற்பணத்தை தந்து உதவிய யாழ் மறைமாவட்ட பங்குத் தந்தையர்கள் அனைவருக்கும் —

இதன் அட்டை அமைப்புக்கு ஆலோசனை தந்த சிரித்திரன் ஆசிரியர் திரு. எஸ். சிவஞானசுந்தரம் அவர்கட்கும் —

அச்சுப் பிழைதிருத்துதலுக்கு உதவிதந்த நண்பர் இ. பேணுட் அவர்களுக்கும் —

குறுகிய காலத்தில் அழகிய முறையில் இந்நூலை அச்சிட்டுத் தந்த வஸ்தியன் அழுத்தகத்தாருக்கும் எனது இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன்; வாசக அன்பர்கள் இந்நூல் பற்றிய தமது கருத்துக்களை வெளியீட்டாளர் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில் விமர்சனங்களே ஒரு எழுத்தாளன் தனது பேனாவை தரமான வகையில் கையாள வழிகாட்ட வல்லன என்று கூறி என் நன்றியுரைக்கும் 'நானொரு முற்றுப்புள்ளி' யிட்டு விடைபெறுகிறேன்.

நன்றி.

— நாவண்ணன்

10—8—78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரைப்பற்றி . . . . .



திரு. நாவண்ணன் மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கலையில் ஆர்வம் கொண்ட ஓர் இளைஞன். இவர் எழுத்துத்துறையில் மட்டுமல்லாது கவிதை, நாடகம், ஓவியம் முதலிய துறைகளில் ஈடுபட்டு தமது இளமைப் பருவத்திலேயே வெற்றிகண்டவர். மதம், அரசியல் துறைகளில் இதுவரையில் இவரது படைப்புகளாக ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் இரண்டு நாடக நூல்களாகும்.

இலகு தமிழில் வாசகர்கள் மனதைக் கவரக்கூடிய விதத்தில் எழுதப்பட்ட பொருள் செறிந்த இவரது படைப்புகளில் இதுவும் ஒன்றாகும். எனவே வளரும் எழுத்தாளராகிய இவரை ஊக்குவித்து ஆதரவு அளிப்பது வாசகர்களதும், வெளியீட்டாளர்களதும் கடமையாகும். எனவே எமக்குள்ள கடமைகளில் ஒன்றாக இவரது "நான் ஒரு முற்றுப் புள்ளி" எனும் இக்கதைத் தொகுப்பை எமது "புதிய உலகத்"தின் முதல் வெளியீடாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகள்
"புதிய உலகம்" வெளியீட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org